# ஆறம் தீபப்

# ஆடும் தீபம்

POOVAI S. ARUMUGHAM
2-A, VAANILA RASU STREET
WEST TAMBARAM, MADRAS 600045

பதிப்பாசிரியர்:

**பூவை எஸ். ஆறுமுகம்**

செல்வி பதிப்பகம்

காரைக்குடி

செல்வி-59

முதற் பதிப்பு:  மார்ச் 1967
இரண்டாம் பதிப்பு:  மே 1983
உரிமை பதிவு செய்யப்பெற்றது

O 31 : 3
M 3

விலை ரூ. 10-00

அச்சும் அமைப்பும் :
அகரம், சிவகங்கை

| | |
|---|---|
| Title: | ADUM DEEPAM |
| Author: | ELEVEN WRITERS |
| Language: | TAMIL |
| Subjet: | SOCIAL NOVEL |
| Book Size: | CROWN 8 VO |
| Pages: | 178 |
| Edition: | SECOND EDITION<br>MAY 1983 |
| Publisher: | SELVI PATHIPPAHAM<br>KARAIKUDI-623 001 |
| Classification: | O 31:3<br>M 3 |
| Price: | RS.10/ |

சமூக நாவல்

# ஆடும் தீபம்

செல்வி பதிப்பகம்

# புதுமையான இந்த நாவல்

தனி யொருவரால் புனைந்து எழுதப் பெற்றதல்ல.

அல்லது ஒருவருடைய கருத்தை மையமாகக் கொண்டு பலர் எழுதியது மல்ல.

ஒருவர் கதையைத் தொடங்கினார்.

மற்றும் பலர் கதையை அவரவர் கருத்தோட்டத்தின்படி வளர்த்தார்கள்.

கடைசியாக இம் மாதிரி முறையில் ஒருகதை நிறைவு பெற்றால் எந்த அளவு சிறப்புப் பெறும் என்று நினைத்துப் பார்த்து வழி வகுத்த நண்பர் திரு பூவை. எஸ். ஆறுமுகம் அவர்கள் முடித்துள்ளார்கள்.

பதினொரு கதை மன்னர்கள் இந்தக் கதாபாத்திரங்களுடன் ஒன்றிப் பழகி உயிரூட்டியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு அத்தியாயமும் ஒவ்வொரு சிறப்புடன் திகழ்கிறது.

படிக்கவும் சிந்திக்கவும் தூண்டும் சிறந்த நாவலாக பரிமளித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் சொல்லுகிறோம்.

இந்தப் புது முறையான நாவலை எழுதிச் சிறப்பித்த எழுத்துலகச் சிற்பிகளுக்கும் 'உமா' பத்திரிகை உரிமையாளர்களுக்கும் சிறப்பாக இந்நூலைப் பதிப்பிக்கத் தந்த பூவை.எஸ். ஆறுமுகம் அவர்களுக்கும் எங்கள் நன்றி என்றும் உரியதாகும்.

**வீர. சிவராமன்**

இந்த நாவலின்
ஆசிரியர்கள்:

வாசவன்

வல்லிக்கண்ணன்

ஸரோஜா ராமமூர்த்தி

கிருஷ்ணா

ஸி.ஆர்.ராஜம்மா

நெடுமாறன்

எல்லார்வி

ஏ.எம்.மீரான்

சி.சு.செல்லப்பா

பி.வி.ஆர்.

பூவை எஸ். ஆறுமுகம்

# சேதுவில் பாலம்

திருக்கார்த்திகைக்குத் தீப மங்கள ஜோதி. அண்டமும் பிண்டமும், உயிர்ப்பும் உயிர்ப்பின்மையும், ஊழியும் ஆழியும், உருவமும் அருவமும் இடைவெட்டிய இருளைப் பிளந்து ஒளிப் புனலில் நீராடிக் களிக்கும் கன்னியராகி விட்டிருந்த அந்த நாளில், மானிடப் பெண்களெல்லாம் 'காளையராகி' அதில் உள்ளத்தை வீழ்த்தி, வீழ்ந்து குழிந்து அந்த உள்ளத்திலே நெய்யும் இட்டுத் தீபம் எடுத்து உயிர்க் குலத்தின் மூச்சை ஜோதியாக எழுப்பிக் கொண்டிருந்த தீத்திருநாள்.

'சோறு படைத்த சோழ நாடு' என்று கூறுவதால் மட்டும் சோழ நாட்டின் பெருமையை முழுதுமாக அளந்துவிட முடியாது கங்கை நீரிலே ஒருசெம்பை மொண்டு, 'இது கங்கை' என்று கூறுவதைப்போலத் தான் அது. கங்கை ஒரு செம்பு அல்ல. கங்கையை அளக்கின்ற—கொணர்கின்ற நம்சக்தி ஒருசெம்பின் அளவே என்பது தான் சரி. சோழநாட்டை அளக்க வந்தவர்கள் கையில் கொண்டு போனதெல்லாம் ஒரு செம்பே. நாம் கேட்டதெல்லாம் ஒரு செம்புக்கு உட்பட்ட சோழத்தைத்தான்.

இப்பொழுது நான் சொல்லப் போவது ஒரு செம்புக்கு மேற்பட்ட சோழநாட்டை அல்ல. ஏனென்றால் நான் ஓர் ஆராய்ச்சிக்காரன் அல்ல; எதையும் தைரியமாக மக்கள் முன்னே நிறுத்திப் பிரமிக்க

வைக்கும் சரித்திரச் செப்பிடு வித்தை தெரியாத சாதாரண மனிதன். உண்மையான மரியாதைக்குத் தடபுடலான பாஷை கிடையாது. உண்மை குழைந்து, உணர்ச்சி தெளிந்து, உடலம் குளிர்ந்து போய் நிற்கும் ஒரு மோன நிலைதான் மரியாதைக்குச் செலுத்தும் உயரிய வணக்கமாகும். சோழத்திற்கு நான் உயரிய வணக்கம் செலுத்த விரும்புகிறேன். அதனால் ஊமையாகத்தானே நிற்க வேண்டும்?

என் ஊமைத்தனத்தைப் போக்க நானும் முயன்றேன். அண்ணு உமாபதியும், தோழர் 'பூவை'யும் முயன்றனர். எங்களைப் போன்ற எழுத்தாள அன்பர் சிலரும் முயன்றனர். முயற்சி திருவினையாக்கிற்று. இன்றையச் சோழத்தின் உள் வாசலிலே கோலமாக இழைத்திருக்கும் ஒரு சிற்றூரை எடுத்துக்கொள்வதாகத் தீர்மானித்தோம். பழங்காலச் சோழத்திற்குப் பக்தி செலுத்துவதற்காக ஊமையாக நிற்கும் நான், இன்றையச் சோழத்திற்காகத் தோழமையுடன் வாய்திறந்து பேசமுடியும். என் வாயைக் கிளறிவிட்டுப் பின்னர் பேசவிருக்கும் அன்பர்கள் புகழ் வளர்ந்த எழுத்தாளர்கள்; பண்பால் உயர்ந்தவர்கள்.

எல்லோருமாகச் சேர்ந்துதீபம்ஒன்றைஆக்கினேம். அதைச் சோழமண்ணில் ஏற்றி வைக்கும் பணியை எனக்கிட்டனர். அதை ஆட்டிவைக்கும் பணியை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். 'பூவை'யின் பொறுப்பு என்னவென்பதை இப்பொழுதே நான்சொல்ல மாட்டேன். அது 'சஸ்பென்ஸ்'.

வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்; நாங்கள் சேதுவில் பாலம் அமைக்கிறோம். எங்கள் ஒவ்வொருவருடைய முயற்சியும் அணில் முயற்சிதான். பாலம் ஒழுங்காக அமைந்துவிட்டால், அணிலைப்பாராட்டாதீர்கள்; அமைப்பைப் பாராட்டுங்கள்.

வாசவன்

பொறி ஒன்று:

# இரட்டைப் புலிகளுக்கிடையே ஒற்றை மான்!

மாங்குடி மண் நிலவில் குளித்தது. மனைகள் ஒளியில் குளித்தன. இது தஞ்சை மாவட்டத்திலோ, மற்ற தமிழ் நாட்டுப் பகுதிகளிலோ காண முடியாத அதிசயம். மனைகள் என்றால் எல்லாமே இந்துக்களைச் சேர்ந்ததல்ல. கிறித்தவர்கள் இருந்தார்கள்; முஸ்லீம்கள் இருந்தார்கள். மதத்தால் வேறுபட்ட இவர்கள், மொழியாலும், வழியாலும் ஹிந்துக்களோடு தோழமை பூண்டிருந்தார்களே தவிர, தெய்வீகச் சடங்குகளில் பிரிந்து நின்றனர். வருஷம் எல்லாம் பிரிந்து நின்றாலும் மும்மதமும் ஒரேயொரு நாள் கூடி நிற்கும் வாய்ப்பு இந்த ஒளித் திருநாளில் கிடைத்தது.

ஒளிக்கும் மதம் உண்டா? காற்றுக்கு, நீருக்கு எல்லாம் மதம் உண்டா? இயற்கையை வழிபடுகிற எல்லா மதங்களுமே இதை ஒப்புக்கொண்டாலும், எம்மதமும் சம்மதமாக நின்று கூடி வழிபடுவதில்லை. திருக்கார்த்திகை என்றால் ஹிந்துக்களின் விழா என்று முகத்தைத் திருப்பிக்கொள்ளும் கிறித்தவர்களும், முகம்மதியரும்தான் தமிழ் நாடெங்கும் விரவி இருக்கின்றனர்.

மாங்குடி அதற்கு மாறுபட்டு நின்றது. அக்கிரகாரத்திலும், மறவர் குடியிருப்பிலும் யாதவர் வசிக்கும்

மேலக்குடி இருப்பிலும், பட்டாமணியம் வசிக்கும் கீழக்குடி இருப்பிலும் திருக்கார்த்திகைதீபங்கள் எரிந்தன என்ருல், மாதா கோயிலே நடுவேவைத்து அதன் இருமருங்கிலும் வரிசை அமைத்திருந்த கிறித்தவ உடையார்கள் பகுதியில் அகல் விளக்குகள் ஆண்டவனை நோக்கி எழுந்தன. ஊருணிக் கரையை அடுத்த முகமதியர் தெருவிலே எப்பொழுதும் மூடிக் கிடக்கும் வாசற்கதவுகள், அன்று அடித்த நெல்லில் அரிசி மணி உமியை விலக்கி நிற்பதைப் போல சிறிதாகத் திறந்து கொண்டிருந்தன. வாசற்படியில், மாடத்தில், மாட்டுத் தொழுவத்தில் எல்லாம் சிட்டி விளக்குகள் ஒளி ஏந்திக்கொண்டிருந்தன.

பிள்ளையார் கோயிலில் சரவிளக்கு; மாதா கோயிலில் மெழுகுவிளக்கு; பள்ளிவாசலில் திரிவிளக்கு.மாங்குடியில் மூன்று கிளைகளாகப் பிரிந்து செல்கின்ற மனித சமூகம் ஒளித் தேவனை வழிபடுவதற்காகச் சங்கமித்தபோது இந்து இல்லை: இஸ்லாம் இல்லை.

ஒளி, ஒளி, ஒளி! இருந்தது ஒன்றுதான்: இருப்பது ஒன்றுதான்; இருக்கப்போவது ஒன்றுதான்! இருந்தது, இருந்தது; இருப்பது இருக்கிறது: இருக்கப்போவது இருக்கும்.

''மாவலியோ மாவலி! மண்ணு சிறக்கும் மாவலி!"

காய்ந்த பனம்பூவை மூட்டம் போட்டு வேகவைத்து, அதையும் அடுப்புக் கரியையும் உப்பையும் தூளாக்கி, சருகக் கூடான பீர்க்கங்காய் ஓட்டில் அதை வைத்துக் கெட்டித்து, பச்சைப் பனைமட்டையை மூன்று கீற்றுகளாக வகுந்து, அவைநடுவே கூட்டைவைத்து முடைந்து தயாரித்த மாவலிகளை விடலைப் பையன்கள் ஊருணிக் கரையில் பாட்டுப்பாடிச் சுற்றிக் கொண்டிருந்தனர். மாவலிகள் சுழன்ற சுழற்சியிலும், மோதிய காற்றின் அழுத்தத்திலும் நட்சத்திரங்களைப் போன்ற ஒளிப் பூக்களைச் சிந்தியபோது, வானத்து நட்சத்திரங்கள் அனைத்

தும் மண்ணை முத்தமிட விண்ணகம் விட்டு இறங்கிவந்த பொன் மயக் கற்பனைகளை உலவவிட்டன.

''பயிறு பச்சை விளைஞ்சிட பாஞ்சுவந்த கார்த்திகை!
உயிரு விளங்கி வாழ்ந்திட ஓங்கிப்பிடிக்கிறோம் சுளுந்தோலை'',

ஓலைச் சுளுந்தில் தீ இட்டு ஒளியை ஏற்றிய இளைஞர் களின் வாய்கள் ஓங்கிப் பாடின. நீண்டு உயர்ந்து செறிந்த ஓலைப் பந்தங்களைப் பிடித்தவாறு வயல்களை நோக்கி வாலிபப் பட்டாளம் வீறு நடைபோட்டுப் போய்க்கொண்டிருந்தது. விவசாயப் பெருமக்கள் திருக் கார்த்திகை தினத்தில் கருக்கு மட்டையில் கட்டிய ஓலைப் பந்தங்களை வயல்களின்சனி மூலையில் நட்டுவைத்தால் நன்றாக விளையும் என்பதில் நம்பிக்கை உள்ளவர்கள். ஒளிக் கடவுளின் தரிசனத்தைப் பயிர்கள் கண்டால் களத்தில் பொன்னைக் காணலாம். கண்டவர்கள் அவர் கள். கண்டதைக் கண்டு, காணப் போவதைக் காண ஒளிப்பந்தங்கள் வரப்புக்களில் போய்க் கொண்டிருந் தன.

பிள்ளையார் கோயிலுக்கு எதிரே கட்டப்பட்டிருந்த சொக் கப்பனை வானத்தை நோக்கி உயர்ந்திருந்தது. ஈரப் பனை ஓலையில் வேயப்பட்டிருந்த அது, நிலவுப்பாலை அருந்தி பச்சை மாமலை போல ஓய்வெடுத்துக் கொண் டிருந்தது. பதினொரு மணிக்கெல்லாம் ஐயனார் கோயில் வேளார், பட்டாமணியம் பாளையப்பத் தேவரிடமிருந்து சுளுந்தை வாங்கி, சொக்கப்பனையில் எறிவார். பச்சை ஓலைபற்றி எரியும்; காய்ந்தது எரியும், பட்டது முறியும். பச்சை எரியுமா? திருக்கார்த்திகை சொக்கப்பனை எரியும். இது அதிசயம். கடவுள் சக்தியை நம்பாதவர்கள் அதிச யம் என்றுதான் சொல்லி விட்டுப் போகட்டுமே... ...!

இனம், மதம் என்ற பிரிவில்லாமல் மாங்குடியே ஒளித் திருநாளைக் கொண்டாடிய போது, ஒரேயொரு வீட்டில்

மட்டுப் கொண்டாட்டம் இல்லை; விளக்கு இல்லை; ஒளி இல்லை!

அல்லி உடலைச் சுருட்டிக்கொண்டு மண்தரையில் அழிந்த கோலம் போலக் கிடந்தாள். மூச்சு உயிரின் சுருதி. அவளிடமிருந்து பரிந்த நெடுந்துயர்மூச்சு சுருதி பிசகி ஒலித்தது. மனம் காக்கையின் அடி மூக்கைப் போல சிவந்து வெளிறியது.

''அல்லி... அக்கா!''

அல்லி தலையை லேசாகத் தூக்கிப் பார்த்தாள். வாசலில் நின்று கொண்டிருந்த உருவம் சரியாகத் தெரியவில்லை. நிலவு வெளிச்சத்தை மறைத்துக்கொண்டு வாசலில்சரிந்திருந்தது கூரையின் நிழல். குரலுக்கு உருவம் இல்லை. அதனால் அதைப்புரிந்து கொள்ளவெளிச்சம் வேண்டாம். மேலவீட்டு வெண்டியப்ப அண்ணன் மகள் செந்தாமரை அல்லவா அழைக்கிறவள்?

அல்லியின் நெஞ்சுதான் செந்தாமரை என்று சொல்ல வேண்டும். வயதில் இரண்டு குறைவாக இருக்கலாம். இருந்தால் என்ன? புத்திசாலித்தனத்தில் இந்த ஊருக்கே மூத்தவள் அவள்தான். மிகமிக மெல்லிய கொடியாக ஓடிச் சீக்கிரமாக, ஆனால் ருசியில் உயர்ந்த பழங்களைத் தரும் திராட்சையை ஒத்தவள் அவள். இந்த ஊரில் வயதில் பெரியவர்கள் இருக்கிறார்கள். கோயிலில் முதல் காளாஞ்சி உரிமையை நிலைநாட்ட 'ஹைகோர்ட்' வரை போய் வந்த புலிகளும் இருக்கின்றன. பஞ்சாயம் செய்வதில் தீரர்களான 'தலைப்பாகை'களும் இருக்கின்றன. அவர்களெல்லாம் நெடுங்காலம் வளர்ந்து நிலையான பலனைத் தரும் புளிய மரத்தை ஒத்தவர்கள். அது தரும் பழத்தை 'பிளேட்'டில் வைத்துச் சாப்பிட முடியுமா? குழம்புக்குத்தான் கரைக்கலாம். அதைப்போலபெரியவர்களெல்லாரும் வேறொன்றில் கரைந்து பிரகாசிப்பவர்கள். திராட்சைப் பழத்தைப் போல தனி இன்ப ருசி படைத்த

வர்களல்லர்;— அதாவது தானுக இயங்கும் புத்தியுள்ள வர்கள் இல்லே.

செந்தாமரைக்குத் தெரியாதஎதுவும் அல்லியிடம் இல்லே. அல்லியை மலர் என்ருல், செந்தாமரையை நார் என்று கூறவேண்டும். உதிரி மலராக அல்லியைப் பார்க்கமுடியாது. நாரில் கட்டி முடிந்த பந்த மலராகத்தான் காட்சி யளிப்பாள். அது கூட இந்த ஊருக்குப் பிடிக்கவில்லே. யாரும் குத்திவிட்டிருக்காவிட்டால் வெண்டியப்ப அண்ணன் அப்படி முகத்தை ஒடித்துக் கொண்டு பேசுவாரா? தாய் தகப்பன் இல்லாத பெண்ணுயிற்றே! சின்னஞ்சிறிசு, ஒண்ணுக்கு ஒண்ணு துணேயாக இருக்கட்டும் என்று எப்பொழுதுமே செந்தாமரையை அல்லியின் வீட்டில் இருக்கவைத்துக்கொண்டிருந்தவர் சாயங்காலம் காத்து வெட்டிச் சாமியைப் போலத் தூள்பரப்பி விட்டாரே!

அப்பொழுது கண்மாய்ச் செம்பிரான் கல்லில் உட்கார்ந்து முகத்துக்குச் சவுக்காரம் போட்டுக்கொண்டிருந்தாள் அல்லி. வெண்டியப்ப அண்ணன் தொலிக்கலப்பையைத் தண்ணீரில்விட்டு எறிந்துவிட்டு, ''அல்லி!'' என்று ஓங்கி இரைந்தார்.

சட்டுச் சட்டென்று முகத்தில் இரண்டு கைத் தண்ணீரை இறைத்துக் கழுவிவிட்டு ஏறிட்டுப் பார்த்தாள் அல்லி. ''என்ன அண்ணே?''என்ருள் சுருண்டு புரண்ட குரலில்.

''இனிமே நீ செந்தாமரையோட பேசினுல் கெரண்டைக் காலே நறுக்கிப் போட்டுடுவேன்! சாக்கிரதை!'' என்ருர், புடைத்து விம்மிய புஜத்தை ஆட்டிக் கொண்டு.

அதைவிட 'நீ உயிரை விட்டுவிடு' என்று கூறி இருக்கக் கூடாதா? அயர்ந்த கொன்றைக் காய்களேப் போல அச்சத்தோடு உதடுகள் அசைந்தன:''ஏன் அண்ணே?''

''ஏன்? ஊரு சிரிக்குதே உன்னைப்பற்றி? பட்டாமணியம் பாளையப்பத் தேவர் மகன் முனுசியோடே நீ சொரணை மறந்து கூத்தடிக்கிறது தெரியாதின்னு பார்த்தியா? என் மகளும் கெட்டுச் சீரழியணும்னு பார்க்கிறியா?''

''அண்ணே!'' என்று அலறிய அல்லி வெகுநேரம் வரை உள்ளுக்குள்ளேயே விம்மினாள். விம்மல் வெடித்தது: ''உங்க மகள் ஒழுங்கா இருக்கணும்னு நீங்க நினைக்கிறது தப்பில்லை. அதற்காக என்னைக் கெட்டவன்னு தூற்ற வேண்டாம். இனி உங்க மகளோட நான் பேசினால் இழுத்து வச்சு என் நாக்கை அறுங்க. அதுக்கு மேலே பேச்சு வேண்டாம்... ...!''

அல்லியைப் பொறுத்தவரையில் திடீரென்று காட்டிய பேய் மழை அல்லஇது. சமீப காலமாக அவ்வூரில்பெய்து கொண்டிருந்த தூற்றல் இப்பொழுது கண்மாய்க் குள்ளும் அழுதது. அவ்வளவுதான்! ஆனால் வெண்டி யப்ப அண்ணனை ஊரில் ஒருவராக அவள் நினைத்திருக்க வில்லை. தன்னில் ஒருவராக எண்ணினாள் தனக்காக அனுதாபம் காட்ட ஓர் உள்ளம் இருக்கிறதென்றும் தைரியம் கொண்டிருந்தாள் கையில் தண்ணீரை எடுத் தாலும், அது கைத் தண்ணீராகுமா? கண்மாய்த் தண்ணீர்தானே? வெண்டியப்ப அண்ணனும் ஊராகி விட்டார்.

அவளால் தாங்க முடியவில்லை. ஓர் உள்ளம் ஊராகி விட்டது சகிப்பதற்கில்லை. வேதனை விட்டதா? உயிராகப் பற்றிக்கொண்டிருந்த செந்தாமரையைப் பிரியவேண் டும். இதையாவது சகிக்க முடியுமா?

சகிக்கக் கூடியதென்று எதையுமே அவள்சந்தித்ததில்லை. ஆனால் அப்பொழுதெல்லாம் தூரை விட்டால் கிளை, கிளையை விட்டால் கொம்பு, கொம்பைவிட்டால் தரை

என்று ஒரு பிடிமானம் இருந்தது. இப்பொழுது தூரும் இல்லே; கிளேயும் இல்லே; கொம்பும் இல்லே; தரையும் இல்லே.

இல்லே, இல்லே, இல்லே... ...!

வெண்டியப்ப அண்ணன் தொலிக்கலப்பையைக் கழுவிக் கொண்டு போய்விட்டார்.செம்பிரான் கல்லில் சவுக்காரம் போட உட்கார்ந்துகொண்டிருந்த அல்லி தண்ணீரில் விழுந்து இரண்டு முழுக்குப்போட்டாள். வீட்டிற்கு வந்ததும் ஈரச்சேலேயை மாற்றவேண்டும் என்றஉணர்வு கூட இல்லே. 'ஆல்வீட்டு' வாசற்படியில் தலேயை வைத்துக்கொண்டு சாய்ந்தவள்தான்.

''என்ன அல்லி அக்கா பேசமாட்டியா?''

இரண்டாவது முறையாகச் செந்தாமரை கேள்வி போட்டதும்தான் அல்லியின் உணர்வுவாசலுக்குத் திரும்பியது. தடதடவென்று உள்ளே ஓடிவந்து, சாய்ந்து கிடக்கிற உடலேப் புரட்டிப்புண்ணுக்கிவிட வேண்டிய செந்தாமரை இப்பொழுது லௌகிகமாக வெளியே நின்றுபேசுகிருள். எச்சரிக்கப்பட்டிருப்பாள் போலிருக்கிறது. திரண்டு வந்த தனிமை, பிரிவுவிலக்கம் ஒரு நீண்ட பெருமூச்சாக வெளியேவந்தது: ''ஊம்...''

''திருக்கார்த்திகை ஆச்சே!''

''எனக்குத் தெரியும்.''

''பின்னே.ஏன் விளக்கு ஏத்தி வைக்கல்லே?''

''நீ கேட்கவேண்டாம்.''

''பின்னே யார் கேட்கணும்னு நினேக்கிறே?''

''யாரோ!''

''இன்னுசியார்?''

''கொலைகாரி! உன்னைச் சாகடிச்சிடுவேன்!'' விர் ரென்று எழுந்து வெளியே ஓடினாள். செந்தாமரையின் கழுத்தை நோக்கி இரு கரங்கள் நீண்டன.

''கொன்னுடு. ஏன் தயங்கிறே?''

அல்லியின் கைகள் துவண்டு கீழே விழுந்தன. ''நீ பெண்.''

''நீயும் பெண்தானே?''

''யார் நினைக்கிறாங்க? முதல்லே நீ நினைச்சியா? சதா என்னைக் கொன்னுக்கிட்டே இருப்பதிலே உங்களுக்கு என்ன சுகம்? உங்களுக்கெல்லாம் வேறே வேலை இல்லே? நீ பொம்பளைப் பிள்ளைதானே?—உங்க வீட்டிலே விளக் கேத்தி வைக்கிறதுதானே? அதைவிட்டுட்டு, ஏன் என் மனசிலே கொள்ளியை ஏத்தி வைக்கிறே!''

''அப்பா தான் சொல்லிச்சு, அக்கா!...''

''அந்த ஓடுகாலிக் கழுதையோடே உனக்கென்ன பேச்சு, செந்தாமரை? குதிகாலைப் பெயக்கவேணுமா?'' என்ற இடிகுரல் கேட்டு இருவரும் விதிர்விதிர்த்து நின்றனர்.

வெண்டியப்ப அண்ணன் மாட்டுக் கொட்டகையிலிருந்து குதிபோட்டுக்கொண்டு ஓடிவந்தார். ''சாயந்திரம் என்ன சொன்னே, அல்லி? என் மகளோடே பேசினு உன் நாக்கை இழுத்துப் பிடிச்சு அறுக்கச் சொன்னுயல்லவா, இப்போ அறுக்கத்தானே வேணும்?''

அல்லி ஒன்றும் கூறவில்லை. தளர்ந்து நடந்து இருளோ டிக் கிடந்த ஆல்வீட்டில் வந்து சாய்ந்தாள்.

இதே ஆல்வீட்டில் இரண்டு சாவுகளைக் கண்டிருக்கிருள் அவள். முதல் சாவைக்கண்டபோது அவளுக்கு நான்கு வயது. இறந்து கிடந்தவர் அவள் அப்பா. எல்லோரும் அழுதார்கள். அவள் தாய் மார்பில் அடித்துக்கொண்டு,

''மகாராசா போயிட்டீங்களே!'' என்று கதறினாள். 'இத்தனைபேர் சேர்ந்து ஒப்பாரி வைக்கும்போது அப்பாவால் எப்படி நிம்மதியாகத் தூங்க முடிகிறது?' என்று ஆச்சரியப் பட்டாள் அல்லி. பிணத்தைக் குளிப்பாட்டும்போது அவளுக்கு ஒரே சந்தோஷம். 'வேண்டும் அப்பாவுக்கு. நான் வேண்டாமென்றாலும் பிடித்து உட்காரவைத்துக் குளிப்பாட்டி விடுவாரல்லவா? இப்பொழுது எத்தனைபேர் அவரை உட்காரக்கூட விடாமல் கீழே சாய்த்துப் பிடித்துக்கொண்டு குடம் குடமாகத் தண்ணீர்கொட்டுகிறார்கள்? கொட்டட்டும்!' பிணத்தைப் பாடையில் வைத்துத் தூக்கும்போது தப்பு, கிடுகட்டி தம்பூரா, உறுமி, கொம்பு முதலிய வாத்தியங்கள் முழங்கின. தன் வீட்டு வாசலில் அத்தனை வாத்தியங்களும் முழங்குவதில் அவளுக்கு ஒரு பெருமை. இந்தச் சாவில் அவளுக்கு முழுக்க முழுக்க ஆனந்தம்.

இரண்டாவது சாவை அவள் மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொள்ள முடியவில்லை. காரணம், சாவின் பயங்கரத்தை உணரக்கூடிய வயசுப் பெண்ணாக அவள் இருந்தது தான். செத்தவள் தாய். இருந்த ஒரு கடைசிப்பிடிப்பும் கைவிட்டுப் போன அவலத்தில் முட்டிக்கொண்டு அழுதாள். எல்லோரும் அவள் துக்கத்தை அதிகப்படுத்தினர். ''நீ இனி எப்படியம்மா இந்தப்பொல்லாத பருவத்தை வைத்துக்கொண்டு தனியாக வாழ்ந்து குப்பைகொட்டப் போகிறாய்?'' என்று மூக்கைச் சிந்தினர்.

அப்பொழுது நம்பிக்கை கொடுத்தவர் வெண்டியப்ப அண்ணன் தான். ''விதியை மறிக்க யாராலே முடியும்? அவுங்க அவுங்க தனிததனியா வாராங்க; கொஞ்ச காலத்துக்கு ஒருகூட்டத்தைச் சேர்த்து விட்டுட்டுத்தனித் தனியாப்போறாங்க, வந்து போய்க்கிட்டிருக்கிற விருந்தாளிகளை நிறுத்தி வைக்கமுடியுமா அல்லி? கண்ணீரைத் துடைச்சுக்க. என்னை உன் அப்பனா நினைச்சுக்க. செந்தா

மரையை உன் தங்கச்சியா எப்போதுமே பக்கத்திலே வச்சுக்க, எத்தனை கவலை இருந்தாலும், உனக்குச் சோத்துக் கவலை இல்லை. வேண்டிய மண்ணு இருக்கு; உழைக்கிறதுக்கு நானிருக்கேன்.''

அல்லிக்குப் புதுப்பிடிமானத்தில் வாழ்க்கையை நிறுத்துவதற்குக் கொஞ்ச காலம் கஷ்டமாகத்தான் இருந்தது. அம்மாவும் பெண்ணுமாக உலவிய அந்த வீட்டில் பெண்ணாக இருக்க நேர்ந்தபோது, பழைய நினைவுகள் மனதில் வாள் தீட்டும்.

அல்லிக்குத் துடுக்கு அதிகம். கள்ளமில்லாமல் சிரித்து நாலு பேரை வம்புக்கு இழுப்பதில் மாவடு தொட்டுக் கொண்டு பழஞ்சாதத்தைச் சாப்பிடுவது போன்ற ஆனந்தம்.

அல்லி எட்டுமுழப் பந்தல்குடிச் சிற்றாடையை உடுத்தும் பருவத்திற்கு வந்தபோது, அம்மாக்காரி ரொம்பக்கண்டிப்பாக இருந்தாள். 'அங்கே நிற்காதே, இங்கே போகாதே! என்றெல்லாம் கடுகடுத்தாள். ''இன்னும் நீ சின்னப்பெண் இல்லை!'' என்றாள்.

பருவம் அல்லியைப் புரிந்து கொண்டிருந்தது. அல்லி தான்பருவத்தைப் புரிந்துகொள்ளவில்லை. ''பிறகு, நான் என்ன பெரியவளா?''

''பெரியவளா இருந்தாலும் பாதகமில்லையே? நீ மொந்தைக் கள்ளு!''

''இப்போத்தான் கள்ளே இல்லையே அம்மா? இந்த மதுவிலக்குக் காலத்திலே இப்படி எல்லாம் நீ சொல்லிக்கிட்டிருந்தியானா நிச்சயம் உன்னைப் போலீஸ் பிடிச்சுக்கிட்டுப் போயிடும்!''

''வேடிக்கை இல்லே'' அல்லி, உன் பருவம்கள்ளாக நிற்

குது. குடிவெறிகொண்ட காலிப் பயலுங்க ஊரிலே அதிகம்"

குழந்தையைப் போலப் பேசிக் கொண்டிருந்த அல்லி, இந்த இடத்தில்தான் பெரியமனுஷியானாள்; "நீ பெத்த பெண்ணம்மா நான். ஆயிரம் காலிப் பயல்களுக்கு மத்தியிலே கூட உன் பொண்ணு புடம் போட்ட தங்கமா நின்னு ஜொலிப்பாம்மா!"

தாயைப் பறி கொடுத்த கொஞ்ச நாட்களுக்குள்ளேயே அவள் அம்மாவின் பெண்ணாக நடந்து காட்ட வேண்டிய நெருக்கடி வந்து தொலைத்தது.

அம்மா இறந்தவீட்டில், 'யாரோ பொல்லாத பருவத்தை வைத்துக்கொண்டு எப்படித் தனியாக வாழ்ந்து குப்பை கொட்டப்போகிறாய்?' என்றார்களே, அது எவ்வளவு உண்மையாகிவிட்டது?

சாயங்காலம் வரை தூங்கி விழுந்துவிட்டு, பொழுது சாய்ந்ததும் அவசரஅவசரமாக நீலச்சவுக்காரம் போட்டு வேட்டியைத் துவைத்து உலர்த்திக்கொண்டே ஆயிங்குடி டேராச் சினிமாவுக்குப் போகும் பெரிய மனிதர்கள் வீட்டு இளவெட்டுகள் மாங்குடியில் அதிகம். டேராவுக்கு 'லைசென்ஸ்' கிடைக்காமல் ஆயிங்குடியில் சினிமா நின்றுவிட்டால், இளவெட்டுகளின் இரவு நடமாட்டம் கன்னியர்கள் வாழும் வீடுகளைச் சுற்றி அலையும். 'ஒரு தலைப் பண்பு' என்ற நொண்டிக்குதிரையில் சவாரி செய்யும் 'ஜாக்கி'கள் இந்த வரிகளைப் படித்து முகத்தைச் சுளித்தால், இவர்கள் ஏறி அமர்ந்த நொண்டிக் குதிரை இன்றையக் கிராமாந்திரங்களில் நடமாடவில்லை என்றுதான் அனுதாபப்பட வேண்டும்!

அல்லி தாயைப் பறிகொடுத்த ஆறாவது மாதத்தில் ஆயிங்குடி சினிமா நடக்கவில்லை. வாலிபர்களின் நடமாட்டம் அவள் வீட்டைச் சுற்றி அதிகமாக இருந்தது.

குளிக்கப் போனல் நாலுபேர், வாசலுக்கு வந்தால் முறைத்துப் பார்க்க நாலுபேர் என்ருகிவிட்டது. எல்லா இளவட்டங்களும் கிறங்கிப் பார்த்தாலும் நெருங்கிவரும் தைரியத்தை இழந்து விட்டிருந்தனர். பட்டாமணியம் பாலையப்பதேவர் ஊருக்குப் பெரியவர். அவர் மகன் இன்ஞசி எது வேண்டுமானலும் செய்யலாம். கேட்க நாதி ஏது? நியாயம் ஏது? அவன் மட்டும் அல்லியை நெருங்கிப் பல்லிளித்தான். இளித்த பல் தெறித்து விழும்படியாக அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்து வைத்தாள் அல்லி. வாங்கிய முதல் அதிகம். பிறகு அருகே நெருங்காமல் தூரத்தில் இருந்து சீட்டி அடித்துத் தன் உள்ளக் கிடக்கையை ஆற்றிக் கொண்டான் இன்ஞசி.

கைக்குக் கிடைக்காததைக் கொட்டிக் கவிழ்ப்பது சாம்ராஜ்ய தந்திரம் அல்லவா? இன்ஞசி இத்தகையதொரு ராஜதந்திரப் பிரச்சாரத்தில் இறங்கினன். ''அல்லிக்கும் எனக்கும் சிநேகம். அந்த மேல் சவுக்காரத்தை நான் தான் அவளுக்கு வாங்கிக்கொடுத்தேன். அவ போட்டிருக்காளே சீட்டி ரவுக்கை, அது ஆயிங்குடி ராவுத்தர் கடையிலே நான் எடுத்து வந்தது!'' என்று பிடிக்கும் இடங்களாகப் பார்த்துப் பற்ற வைத்தான்.

கிராமங்களில் புரளிகளுக்கு ரொம்ப மவுசு உண்டு. நகரங்களில் ஓட்டுக்குப் பத்து ரூபாய் கொடுத்தும் தேர்தலில் நாமத்தைப் போட்டுக்கொண்ட 'சட்டசபை விரும்பி' கள் கிராமங்கள் சூழ்ந்த பிரதேசத்தில் புரளியைத் தேர்தல் சின்னமாகக்கொண்டு நின்று பார்க்கட்டும். நிச்சயம் வெற்றிபெறுவார்கள்!

இன்ஞசி கிளப்பிவிட்ட புரளி பலன் பெற்றது. 'சம்பாதிக்கிருள்' என்று குளக்கரை பேசியது; சாவடி பேசியது; வயல் வெளிகள் பேசின. இருவர் கூடினல் அல்லி சுடுபடுவாள். அவள் போட்டிருக்கிற ரவுக்கை அடிபடும். அவள் குளிக்கின்ற சோப்புத் தேயும். 'சினிமாவைவிட

அல்லிக்கு வசூல் சாஸ்தி' என்று நாலும் இரண்டும் படித்தவர்கள் (நாலடியாரையோ குறளையோ படித்தவர்கள் என்று மயங்கவேண்டாம்) பேசிக்கொண்டார்கள்.

அல்லிக்குக் காது செவிடில்லையே! எல்லாம் விழுந்தன. இடியும் விழுந்தது. வீட்டைச்சாத்திக் கொண்டு குன்றிப் போய்க் கிடப்பாள். செந்தாமரை உசுப்பிப் பார்த்து விட்டுச் சிணுங்கிக்கொண்டு போவாள். வெண்டியப்ப அண்ணன் வருவார். ''போம்மா, போக்கத்த பெண்ணே! ஊருக்கு வாய் கொழுத்தா, அதுக்காக நீ பட்டினி கிடந்து சாகணுமா? ஊரை விட்டுத்தள்ளு...... குப்பை! எழுந்திருந்து உலையை வை'' என்று சமாதானப் படுத்துவார். குன்றியவள் எழுந்து நிமிர்ந்து உட்காருவாள்.

அந்த அண்ணன்தான் கண்மாயில் கயிறைவிட்டெறிந்து பேசினர். செந்தாமரையைக்கூட அறிவில் மூத்த தலையாக எண்ணி இருந்தது தவறுதான். அவள் என்ன பேச்சுப் பேசிவிட்டாள்? இனிமேல் எந்தப்பிடிப்பை வைத்துக் கொண்டு இங்கே குப்பை கொட்டுவது?

''அல்லி ஞாபகம் இல்லையா? சொக்கப்பான் கொளுத்தறப்போ ஊரே பிள்ளையார் கோயில்லே இருக்கும். அப்போ நான் வருவேன்!''—வாசலிலிருந்து ஒரு கனைப்புக்குப்பின் இந்தப் பேச்சு உள் நுழைந்து வந்தது.

பேசுபவன் இன்னசி அல்லவா? இரண்டாவது எச்சரிக்கையா?

அல்லி எழுந்து உட்கார்ந்தாள். நடுங்க வேண்டிய மனம் நடுங்கவில்லை. ஆடவேண்டிய உடல் ஆடவில்லை. நிறுத்தி வைத்த எல்லை அம்மன் சிலையைப்போலச் சலனமற்றிருந்தாள். ஒரே விநாடிதான் அப்படி. அதற்கப்புறம் ஆயிரமாயிரம் அலைகள் விட்டு எறியும் கடலைப் போலாயிற்று நெஞ்சம். அதிலே பெரும் திமிங்கிலமாக நீந்தினன் இன்னசி.

மத்தியானம் கதவோரமாக அமர்ந்து குப்பைக் கீரையை நறுக்கிக்கொண்டிருந்தாள் அல்லி. திண்ணைக் காலோரமாகச் செருமல் ஒன்று வெடித்து வந்தது. நிமிர்ந்து பார்த்தாள். கள் குடித்தவன்போலக் கண் சிவக்க, முகம் சிவக்க நின்று கொண்டிருந்தான் இன்ஞசி.

''அல்லி, இனிமே நீ தப்பிக்கமுடியாது. இன்னிக்கு ராத்திரி ஊர் சொக்கப்பனை கொளுத்திக்கிட்டிருக்கிற போது நான் உன்னை அடைஞ்சே தீருவேன். நீ கழுதையாக் கத்தினாலும் விடமாட்டேன். ஜோராச்சிங்காரிச்சுக் கிட்டுக் காத்திருக்கணும் ''

பதிலிறுக்க அவள் வாய் துடிதுடித்தது. கேட்பதற்குத் தான் ஆள் இல்லை. அவன் போய்விட்டானே!

மனத்தில் கண்ட வெடிப்புக்களிலிருந்து பாய்ந்த நீர் கண்களில் வழிந்தது. அந்த நீர்க்கோலத்திலே, என்றோ இறந்துபோன தாயின் முகம் தெரிந்தது.

''அம்மா உன் பொண்ணைப் பார்த்தாயா அம்மா? அன்னிக்கு உன்னிடம் சொன்னேனே, 'ஆயிரம் காலிப் பயல்களுக்கு மத்தியிலேகூட உன் பொண்ணு புடம் போட்ட தங்கமா நின்னு ஜொலிப்பா'ன்னு? ஒரேஒரு காலிப்பயலுக்கிட்டே யிருந்துகூட என்னாலே தப்பிக்க முடியாது போலிருக்கே!'' என்று அலறினாள்.

ஏன் தப்பிக்க முடியாது? இன்றுவரை தப்பிக்க வில்லையா? காலிப் பயல்களிடமிருந்து தப்பித்து விடலாம். உயிர் காவலாக நிற்கும்வரை கற்புக்குப் பங்கம் ஏற்படக் காரணம் இல்லை. ஆனால் அபவாதத்திலிருந்து தப்பிக்க முடிந்ததா? முடியவில்லை. அதற்குக் காவல் இல்லை.

இதிலிருந்தும் தப்பித்துவிட்டால்... ... ?'

எழுந்தாள். விளக்கை ஏற்றினாள். இருப்பே நாலைந்து துணிமணிகள்தாம். அறந்தாங்கி செவ்வாய்ச் சந்தையில் எடுக்கப்பட்டவை. அவற்றை எடுத்துப் பையில் திணித்தாள். ஐந்தறைப் பெட்டியில் ஐம்பது ரூபாய் இருந்தது. நேற்று ஆயிங்குடிக் கோனாரிடம் இரண்டு ஆடுகளை விற்று முதல் வரவு. அதை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

'எங்கே போவது?'

'கெட்டும் பட்டணம் சேர்' என்கிறார்களே, அந்தப் பட்டணத்திற்குப் போனால் என்ன? கெட்டால்தான் அந்தப் பட்டணத்திற்குப் போகலாமா? கெடாமல் இருப்பதற்காகத்தானே அங்கே தொலையவேண்டும்? பட்டணத்தை ரொம்ப கேவலமாகச்சொல்கிறார்களே! அங்கேநடக்காத அயோக்கியத்தனங்களே இல்லையாமே? நாலெழுத்து இங்கிலீஷ் படித்திருந்தால்தான் ரிக்ஷாக்காரன்கூட வண்டியில் ஏற்றுவானாமே! நமக்கு நாலாம் கிளாஸ் வரை உள்ள தமிழ்தான் தெரியும். ஹ்ம்... அங்கே லக்ஷ ரூபாய் வாங்கும் நடிகர்களெல்லாம் இங்கிலீஷா படித்திருக்கிறார்கள்? அவர்களை எல்லாம் ரிக்ஷாக்காரன் ஏற்றாமலா இருந்திருப்பான்? 'தமிழரசு' வேண்டும் என்று ஒரு கட்சி கேட்டுக்கொண்டிருப்பதாகவும், அதற்குஅபரிமிதமான ஆதரவு இருப்பதாகவும் நேற்று வெண்டியப்ப அண்ணன் பத்திரிகையிலிருந்து படித்துச் சொன்னாரே?... அங்கே தமிழைக்கொண்டே சமாளித்துக்கொள்ளலாம். அபவாதத்திற்குப் பயந்துதானே அங்கே போகிறோம்? அதுமட்டும் ஊர் இல்லையா? அங்கு வாய் கொழுக்கப் பேசுபவர்கள் இல்லையா? மாங்குடியைத் தவிர,வேறு புலி வசிக்கும் ஊராக இருந்தாலும் தாக்குப் பிடித்து விடலாம்... ...!

விளக்கை அணைத்தாள்.பன்னெடுங் காலமாக இந்த வீட்டில் எரிந்துகொண்டிருந்த விளக்கு அணைக்கப்பட்டு

விட்டது. ஒருமிக்க விளக்குத் திருநாள் எடுக்கும் சமயத்தில் இந்த வீட்டிலே விளக்கை அணைக்கும் புண்ணியத்தை ஊர் கட்டிக்கொண்டது. ஒரு குடியைக் கெடுத்தா ஊர்க்குடி வாழ்ந்துவிட முடியும்? முதலில் தனக்கு ஒரு பெரிய குழியைத் தோண்டிக்கொண்டுதான், ஒருவன் மற்றவன் குடி இருக்கும் வீட்டின் கூரையைப் பிரிக்கின்றான். இது யாருக்குத் தெரிகிறது? வரவர வாழ்க்கையின் நெருக்கடி மனிதனைக் குருடனாக்கிக் கொண்டு வருகிறது.

பூட்டை எடுத்தாள். கதவைப் பூட்டினாள். சாவியை இடுப்பில் செருகிக் கொண்டாள். குறுஞ் சிரிப்பு உதடுகளில் மேவியது. வீடு வாசல், நிலம் நீச்சை எல்லாம் உதறி விட்டுப் போகும்போது வீட்டை எதற்காகப் பூட்ட வேண்டும்? சந்தைக்குப் போய்த் திரும்பி வரும் மாதிரி நினைத்துக்கொண்டு ஏன் சாவியைப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்? இப்படித்தான் வைராக்கியம் எல்லாம். வேகத்தில் மனம் துணிந்து விட்டாலும், நீண்ட காலமாகக்கொண்டிருந்த பிடியை நழுவவிட அழுதுசாகிறது. பளிங்கில் பட்ட தண்ணீர் மாதிரி ஒட்டாமல்தான் நிற்கின்றன வாழ்க்கையும் வைராக்யமும். இனி இந்த வீட்டில் நாய் நுழைந்தால் என்ன? நரி நுழைந்தால் என்ன?

இடுப்பில் செருகிய சாவியை எடுத்துப் பூட்டில் சேர்த்து வைத்தாள். வைராக்கியத்தை வென்று விட்டது போன்ற ஒரு நிம்மதி. வாசற்படியை விட்டுத் தெருவில் இறங்கினாள்.

'பட்டணத்துக்குப் போய் என்ன செய்வது?'

கணக்கிட்டு வாழ்க்கையை முதலீடு செய்யச் சிலருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது; பலருக்கு வாழ்க்கை தீர்க்க முடியாத பெரும் கடனாக இருக்கிறது. எல்லோரும்தான்

வாழ்கிறார்கள். நாயும்தான் வாழ்கிறது. மனிதனைவிட நாய் ஒரு படிமேல் தான். அதற்கு அடுத்த வேளையைப் பற்றிய கவலை இல்லை. மனிதனுக்கு அடுத்த ஜன்மத்தைப் பற்றிக்கூடக் கவலை! நாளையைப்பற்றிச் சிந்திப்பதால் இன்றைய இன்பத்தை அவனால் அனுபவிக்க முடியவில்லை. நடப்பது நடக்கும். நடந்து கொண்டிருப்பதைக் கைநழுவ விடுவானேன்?

'சரிதான்; பட்டணம் போக வேண்டியது தீர்மானம்; என்ன செய்ய வேண்டும் என்பதைப் பட்டணம் அல்லவா கூறவேண்டும்?'

தெருவில் ஒரே கூட்டம். சொக்கப்பனையைப் பார்ப்பதற்காகப் பிள்ளையார் கோயிலுக்குப் போய்க் கொண்டிருக்கிறது ஊர். ஒருத்தியை உயிரோடு வேகவைத்துவிட்டு, மற்றொரு பச்சைக் குச்சை எரிய வைக்கச் சென்றுகொண்டிருக்கிறது. பிணத்தை எரித்து எரித்துப் பழக்கப்பட்ட இந்த மனித சமுதாயம், எதையாவது, எந்தப் பெயரைச் சொல்லியாவது எரித்துக் கொண்டிருக்க விரும்புகிறது. சொக்கப்பனையும் அதில் எழுந்த ஒன்றுதானே?

நின்று பிரயோசனம் இல்லை. கீழண்டைப் பக்கம் திரும்பி நடந்தாள். அங்கே கூட்டம் இல்லை. எதிர்ப்பட்ட வாய்க்காலைத் தாண்டி வயல் வரப்பில் சென்றாள். நாலு வயல்களைக் கடந்து விட்டால் வண்டிப்பாதை. அதில் இரண்டு மைல் கிழக்கு நோக்கி நடந்தால் ஆயிங்குடிதான். முன் ஜாமத்தில் வரும் 'காரைக்குடி மாயவரம் பாஸஞ்சரை'ப் பிடித்து விட்டால் காலைப்பொழுது சென்னையில் விடியும்.

'விடியும் பொழுது நல்லபொழுதாக இருக்க வேண்டும்!' வயல் ஓரங்களில் பச்சைப் பயிர்களுக்கிடையே ஊன்றி வைத்திருந்த எரிந்து கருகிய சுளுந்துகள் இளம்விதவைகளின் உள்ளத்தைப் போல அழுது கொண்டிருந்தன

நிலவு சிரித்துக் கொண்டிருந்தது, பழியாடும் ஊரைப் போல.

நடந்த வேகத்தில், வரப்பில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தஇரண்டொரு நண்டுகள் நசுங்கின. பயிர்களின் தண்டுக் குருத்தைருசித்து மெல்லும் விட்டில் கூட்டங்கள் அரவம் கேட்டு 'உஸ்'ஸென்று பறந்தன; தவளைகள் தத்தி ஓடிப் பிலாக்கணம் பாடின; நீர்க்கால்களை ஒட்டியிருந்த நீர் முள்ளிகளின் சிவப்பு முட்கள் அவளுடைய மெல்லிய பாதங்களைக் கீறி அசைந்தன. எப்படியோ நாலு வயல்களைக் கடந்தாகிவிட்டது. இனி வண்டிப் பாதைதான். பிறகு அவ்வளவு சிரமம் இல்லை.

வண்டிப் பாதையில் கால் வைத்தாள். பின்னிருந்து ஒரு கை அவள் கையைப் பற்றியது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். இடிச் சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான் இன்னாசி.

''எங்கே போறே என்னை விட்டுட்டு? உன்னை ருசிக்காமே விடமாட்டேன்!'' என்று முரட்டுக்கையை அல்லியின் முழங்கைக்கு ஏற்றினான்.

பையைச் சுமந்துகொண்டிருந்த அல்லியின் மற்றொரு கையை வேறொரு கரம் வேகமாகப் பற்றியது. பக்கவாட்டில் பார்த்தாள். சிங்கப்பூர் பணக்காரன் சாத்தையா அவன்! ''எத்தனை நாளா உன் பேரிலே கண் போட்டிருக்கேன்! ஊரை விட்டு ஓடினா உன்னை விட்டுடுவேனா... ...?

'என்னோட போட்டிக்கு வருகிறாயா, சாத்தையா?'' ஏசுகிறான் இன்னாசி.

''அல்லிக்காக என் உயிரையே கொடுக்கத்தயாரா இருக்கேன்!''

''விடுடா அவள் கையை, சாத்தையா!''

''நீ விடு என் கண்ணாட்டியோட கையை!''

''கொன்றுடுவேன்!''

''வேல்க் கம்பாலே சரிச்சுடுவேன்!''

இருவரும் இழுத்த இழுப்பில் அல்லியின் கைகள் அழுந்திப் புண்ணாயின. அழுவதற்கோ அலறுவதற்கோ சக்தியை இழந்துவிட்டிருந்த அவள் அண்ணாந்து வானத்தை நோக்கினாள். மழை மேகங்கள் நிலவை மறைத்துக் கொண்டிருந்தன. மானத்தை மறைத்துக் கொள்ள வகை தெரியாமல் இருபக்கங்களிலும் சுவர்களைப்போல நெருங்கிக்கொண்டிருந்தவர்களுக்கிடையே நசுங்கிக் கொண்டிருந்தாள் அல்லி!

# ரசனைக்கு விருந்து

ஒரே ரகப் பொருள்களைத் தொகுத்து மகிழும் ரசிக உள்ளம் பல ரகங்களையும் ஒன்று கூட்டி ஆனந்தம் அடையவும் அவாவுகிறது. அதன் தூண்டுதலால் கிடைக்கும் விளைவுகளில் விசேஷக் கவர்ச்சியும், தனிச் சுவையும், அலாதி மணமும் அமைந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

பல ரக மலர்களைக் கொண்ட கதம்பம் தனிச் சிறப்பு உடையதுதானே? கலவைச் சந்தனத்தில் விசேஷ மணம் இல்லை என்று சொல்ல முடியுமா? அவியலி லும், கூட்டாஞ்சோற்றிலும், 'மிக்ஸ்ச'ரிலும் தனிச் சுவை இருப்பதனால்தானே நாவும் மனமும் அவற்றை மீண்டும் மீண்டும் நாடுகின்றன?

ரசிக உள்ளத்தின் இத்தகைய தூண்டுதல் தான் தொடர்கதையிலும் கதம்ப உத்தியைக் கையாளும் ஆசையை வளர்த்திருக்க வேண்டும். ஒரு சில முறைகள் வெற்றி கண்ட பிறகு, அதுவே விசேஷ மரபு ஆக வந்தாலும் வந்துவிடலாம்!

நண்பர் 'பூவை' அவர்களின் முயற்சியால் உரு வாகும் 'ஆடும் தீப'த்தில், முதல் சுடர் ஏற்றும் பொறுப்பை அன்பர் 'வாசவன்' அவர்கள் சிறப் பாகச் செய்துவிட்டார். சுடர் சுடரைக் கொளுத்து கிறது. தீபம் தீப வரிசைக்கு ஒளிதருகிறது. தீப வரிசையில் ஒரே ரக விளக்குகள் இருப்பதைவிட

வர்ண மாறுபாடுகள் இருந்தால், அழகாக இருக்கும் என்று ஆசைப்படும் ரசிக உள்ளம் வர்ணத் தாள்களைச் சுற்றி வைத்து மகிழ்கிறது.

'ஆடும் தீபம்' வளர வளர அவ்வித வர்ண விஸ்தாரங்களைப் பெறுவதும் சாத்தியமே. விதம் விதமான மனோபாவமும், வெவ்வேறு ரக நடையும் கொண்டவர்கள் அமைக்கும் கோலம் எதிர்பாராத புதுமைகளை ஏற்கலாமன்றோ? எதுஎவ்வாறுயினும், கெட்டுப் போகாத கன்னியாக மாங்குடியை விட்டு வெளியேற திரு. வாசவன் வழிகாட்டிய அல்லியை நல்லவளாகப் பட்டணம் கொண்டு வந்து சேர்த்து விட்டேன். இனி அவள் என்ன ஆவாள் என்பதை உங்களைப் போலவே நானும் ஆவலுடன் எதிர்பார்க்க வேண்டியவன் ஆகிவிட்டேன். அவள் கதியை நண்பர் 'பூவை' தான் அறிவாரா?

**வல்லிக்கண்ணன்,**

பொறி இரண்டு:

# பட்டணம் வந்த நாட்டுப் புறு!

அல்லியின் உடல் நடுங்கியது. பயம் என்பதை அறியாமல் வளர்ந்தவள் அவள். ஆனுல் இப்பொழுது அவள் பயத்தால் விதிர் விதிர்த்தாள்.

''எந்தராத்திரியிலும்எங்கு வேண்டுமானுலும்போவேன். பயம் என்னடி, பயம்? நான் யாருக்காக அல்லது எதுக்காகப் பயப்படவேண்டும்?'' என்று கேட்கும் துணிச்சல் அவளுக்கிருந்தது. அது முன்பு. அவளுடைய சிநேகிதி செந்தாமரையிடம்தான் அல்லி அப்படிக்கேட்டாள். ''முன்னிரவிலும், அதிகாலையிலும் குளத்துப் பக்கமெல்லாம் போகிருயா? தனியாகப் போய்வர உனக்குப் பயம் இல்லையா?'' என்று தோழி கேட்டபோதுதான் அல்லி அவ்வாறு பேசினுள்.

''அர்த்த ராத்திரியில் சுடுகாட்டுக்கு வேண்டுமானுலும் போய் வருவேன், பேய் பிசாசைக் கண்டால்கூட நான் பயப்பட மாட்டேன்!'' என்றும் அவள் சொன்னுள்.

அதே அல்லி ஊரை எண்ணிப் பயப்பட நேர்ந்தது. அவளைப் பொறுத்தவரை, சுடுகாட்டைவிட மாங்குடி மோசமாகிவிட்டது. அவளுக்கு உற்ற தோழியாக இருந்தவளும், அவள் வாழ்ந்து பெரியவளாக ஊக்கமும்

நம்பிக்கையும் அளித்த பெரியவரும் அந்நியராகி விட்டார்கள். அவளுக்கு இனி அவர்கள் செத்தவர்களே! அதனுல் அவள் தன் தனிமையை, அபலைத் தன்மையை, அனுதை நிலையை மிக அதிகமாக உணர்ந்தாள். அன்பு வறண்டுவிட்ட அந்த ஊர் திடீரென்று நம்பிக்கையையும் வறள வடித்து விட்டது. அச்சத்தை விதைத்தது. யாரும் அறியாதபடி இரவோடு இரவாகத் தப்பிவிடலாம் என்று துணிந்து வெளியேறினுள்.

அவள் எண்ணம் எவ்வளவு தவருனது! இருட்டிலே பூனையும் ஆந்தையும் விழித்திருந்து அனைத்தையும் கவனிக்க முடிவது போல, இரண்டு பேர் அவள் செயல்களைக் கவனித்திருக்கிருர்களே; அவளறியாமல் அவளைத் தொடர்ந்து வந்து பிடித்தும் விட்டார்களே!

அல்லியின் உடல் பயத்தால் மீண்டும் குலுங்கியது. அவள் பாம்புக்கும் கொடிய விலங்குக்கும் பயப்பட மாட்டாள். பேய் பிசாசுக்கும் பயப்படமாட்டாள்தான். ஆனுல் இப்போது மனிதரைக் கண்டு பயப்பட்டாள்.

மனிதர்களா அவர்கள்? வெறிபிடித்த மிருகங்கள்! ... ...இல்லை. அவற்றிலும் கேவலமானவர்கள்!

பெண் இனத்தை வசீகரிக்க—மோகம் எழுப்ப—ஆண் மிருகங்கள் சண்டையிடக்கூடும். இவர்களோ? துணையற்ற—அவர்களிடம் அன்பு காட்டும் மனமற்ற—பேதைப் பெண்ணின் இளம் உடலை ருசிக்கும் உரிமைக்காக ஒருவரை ஒருவர் முறைத்தார்கள். எரித்து விடுவது போல் வெறித்துப் பார்த்தார்கள். உறுமினுர்கள்.

ஒளித்திருநாளாம்! எங்கெங்கும் விளக்குகளாம்! ஊராரின் மனசிலே ஒளி இல்லையே! மனிதரின் உள்ளத்தில் இருள் தானே மண்டிக்கிடக்கிறது! தன்னந் தனியளாகிவிட்ட ஒற்றைப் பெண் பயப்படாமல் என்ன செய்ய இயலும்?

"டேய்... ... இன்னுசி!"

''அவள் கையை விடுடா, மூதை''

''சீ நாயே! இந்தா, இதை வாங்கிக்கொள்!''

மிருகங்களாக மாறிக் கொண்டிருந்தவர்கள் பேச்சு நிலை கடந்து, செயல்நிலையை அடைந்தார்கள். சாத்தையா எட்டி உதைத்தான். இன்னுசி காறித் துப்பினுன்.

அல்லி திண்டாடித் தவித்தாள்.

''ஓ இவ்வளவுக்கு ஆயிட்டுதா?'' என்று சாத்தையா சொல்லை எறிந்தான் முதலில். முஷ்டியை வீசினுன் தொடர்ந்து.

இன்னுசியின் முகம் பூரிமாவு அல்ல, குத்துகிற குத்தை யெல்லாம் இயல்பாக ஏற்றுக்கொள்ள. அவன் மூக்கு நசுங்கியது.வேதனை தந்தது. இடதுகண் 'கிண்'ணென்று வலித்தது. வெளிப்படையாகப்பட்ட அந்தக் குத்து அவன் உள்ளத்திலும் பலமாகப்பட்டு ஆங்காரத்தை எழுப்பியது.

''சிங்கப்பூர் காசுஉனக்குத்திமிர் ஏற்றிவிட்டதோ? ஓகோ, என்னிடம்வாலாட்டாதே தம்பி.ஒட்டநறுக்கிவிடுவேன்!'' என்று சொல்லி, பதில் குத்து விட்டான் இன்னுசி.

அழகியை முன் நிறுத்தி அசுரர்கள்தான் போராடுவர் என்பதில்லை. மனிதர்களும் அசுரர்களாக முடியும் என்று அவர்கள் நிரூபிக்கலானுர்கள்.

இன்னுசியையும் சாத்தையாவையும் சுந்த, உப சுந்த ராக்கிவிட்டு, திலோத்தமை மாதிரி வேடிக்கை பார்த்து மகிழும் மனம் அல்லிக்கு இல்லை.அவள்தப்பி ஓடுவதற்கு வாய்ப்புக்கிட்டாதா என்று காத்து நின்ருள்.

தன்மானமும் தணியாத வெறியும் அவ்விரு வாலிபர் களைத் தனித்தவர்களாக்கின. அவளை அவர்கள் பிடியி லிருந்து விலக்கி ஒதுக்கின.

இன்ஞசி இன்ஞசியாக இல்லே. வஞ்சிக்கப்பட்ட பசிக்காக வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் புலியாகிச் சுழன்ருன்.

சாத்தையா வெறும் சாத்தையாவாக இல்லே. அவமதிக்கப்பட்ட 'தான்' என்னும் அகந்தையும் பணக் கொழுப்பும் அவனேப் பழிதீர்க்கும் ரத்தவெறியஞக மாற்றின.

யார் கொலேக் கருவியை முதலில் எடுத்தது; யார் முதலில் குத்தியது என்று யாருக்கும் தெரியாது. அல்லிக்குக்கூடத் தெரியாது. அனேத்துக்கும் மௌன சாட்சியாக நின்ற அம்புலிக்கும் தெரியாது. அவ்வேளேயில் தான் அது கருமேகத்துள் சிக்கித்திணற நேரிட்டிருந்தது. பிறகு வெண் முகத்தை அதுவெளியே நீட்டி நோக்கியபோது, இன்ஞசியின் கத்தி சாத்தையாவின் விலாவில் குத்தியிருந்தது. சாத்தையாவின் வேல்கம்பு இன்ஞசியின் வயிற்றில் புகுந்து நின்றது. இருவரும் ஒரே ரகம் என்பதைப் பொங்கிப் பிரவகித்த ரத்தம் செம்மையாய் எடுத்துக் காட்டியது.

அவளே மறந்து, சூழ்நிலேமறந்து, ஒருவரை வீழ்த்திவிட வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு இயங்கிய அவ் வெறியர்களின் நிலே என்னவாகும் என்று ஆராயும் ஆசை அல்லிக்குக் கிடையாது. தான் தப்பிவிட வேண்டும் என்று தவித்த அவள் மெதுவாக நகர்ந்தாள். மெல்ல மெல்ல, பின்ஞடியே நடந்தாள். அனேத்தையும் அம்பலப்படுத்தும் பால் நிலவில் கார்மேகம் கருமை கலக்கி இருளேக் கொட்டிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டாள். அவள் போகவேண்டியவழியில் திரும்பி வேகமாக நடந்தாள். வெறித்தனம் அவள் எதிரிகளுக்கு வேலி கட்டிவிட்டது. அம்புலி அடிக்கடி இருள் மூடிப் போர்த்தி, அவளுக்குத் துணே செய்தது. சிறிதுதூரம் சென்றதும், அல்லி ஓடத்துவங்கிஞள். பையும் பணமும் அவளிடம் பத்திரமாக இருந்தன. அவ்வேளேயிலும்,

அவள் தன் அதிர்ஷ்டத்தை எண்ணிச் சிறிது மகிழ்வு கொள்ளத் தவறவில்லை.

அவளுக்குப் பின்னால் மாங்குடியின் மக்கள் கொளுத்திய சொக்கப் பனையின் ஒளிவீச்சு வானவெளியில் செஞ் சாயம் தடவியது. செம்புள்ளிகளும் கிருமிகளும் போல் கொள்ளித் துகள்கள் மிதந்து நெளிந்து, மேலே எவ் வின. அந்த அற்புத காட்சியைக் காணக் கண் இல்லை அவளுக்கு. இன்னிசியும் சாத்தையாவும் சண்டை போடு கிறார்களா, நிறுத்தி விட்டார்களாஎன்று கவனிக்க மனமு மில்லை.

'அவர்கள் தப்பித்துக்கொண்டு வராதிருக்கவேண்டுமே, கடவுளே' என்ற பிரார்த்தனை இருந்தது அவள் உள்ளத் தில். மேடு பள்ளம் பாராமல், கல்மண் கவனியாமல், ஓடுவதற்குப் பலம் இருந்தது அவள் கால்களில்.

பாதை நீண்டது. இரண்டு மைல் நீளம் கடந்த வண்டிப் பாதை அவளுக்கு முடிவற்றது போல்தோன்றியது. ஓடி யும் ஓட முடியாத போது நடந்தும்—ஆனால், நிற்காமல் திரும்பிப்பார்க்காமல்—அவள் அதன் முடிவைக்காண முயன்றாள்.

இயற்கை தூங்குவதே இல்லை. அமைதி நிறைந்ததாக சொல்லப்படுகிற இரவின் சாமத்திலே கூடத் தூங்குவ தில்லை. இப்பொழுது கண்ணுக்குப் புலனாகாத வண்டு களின் இரைச்சல் ஓயாது ஒலித்துக்கொண்டிருந்தது. எங்கோ ஒருமரத்தில் ஏதோ ஒரு பறவை, கண மயக்கத் தில் கீழே விழுந்தெழுந்து பின் சமாளித்துக் கொண்டது போல், இறக்கைகளைப் படபடவென அடித்தது. ஆந்தை அலறியது.

அல்லி அவற்றையெல்லாம் கவனிக்கவில்லை. பயத் தால் துடித்த அவள் உள்ளத்தில் ஓர் எண்ணம் ஏக்க

மாய் வளர்ந்து, அவள் இயக்கத்துக்கு வேகம் அளித்தது. ''பட்டணத்துக்குப் போகும் ரயில் கிடைக்குமோ கிடைக்காதோ? இப்ப மணி என்ன இருக்குமென்றே தெரியவில்லை. தெய்வமே ரயில் இன்னும் வந்திருக்கக் கூடாது!'' என்று நினைத்தாள்; ஆசைப்பட்டாள்.

அல்லி ஏமாறவில்லை. ரயில் நிலையம் தூங்கி வழிந்து கொண்டுதான் இருந்தது. அல்லி அங்கேபோய் சேர்ந்த போது, ராத்திரி வண்டியைப் பிடிப்பதற்காக முன்பே ஆஜராகியிருந்தவர்களில் பலர் நீட்டி நிமிர்ந்தும், கால் கைகளை முடக்கியும், உட்கார்ந்த படியே மூட்டை முடிச்சுக்கள் மீது சாய்ந்தும் விதம் விதமான நிலைகளைச் சித்தரித்து விளங்கினர். அநேகர் கண்ணும் பூச்சி விளையாடும் தூக்கத்தை விரட்ட வெற்றிலை சுவைத்தும் பீடி, சிகரெட் புகைத்தும், வம்பளந்தும் பொழுது போக்கிக்கொண்டிருந்தார்கள்.

அல்லி ஒதுக்கமான ஓர் இடத்தில் இருளைப் போர்வையாகக் கொண்டு மறைந்திருந்தாள். இன்னாசியோ, சாத்தையாவோ, அல்லது மாங்குடியார் எவருமோ தன்னைத் தேடிவந்து விடக்கூடாதே என்ற அச்சம், கறையான் மாதிரி அவள் உள்ளத்தை அரித்தது.

ஓடும் காலப்பூச்சி நிமிஷம் நிமிஷமாக அரித்து,மணியாய் கனத்து, மெதுவாக நகர்ந்து முன்னேறியது. ஸ்டேஷனில் விழிப்பு ஏற்பட ஆரம்பித்தது. விளக்குகள் ஒளி பெற்றன. மணி ஒலித்தது. மக்கள் எழுந்தனர்; பரபரப்புற்றனர். டிக்கட்டில் தேதி பொறிக்கும் இயந்திரம் 'டொக்-டொக்' என்று உறுமியது கூட இரவின் குரலில் கனமாய், கோரமாய் ஒலித்தது. ஒருவராய், இருவராய், பின் பலராய் முண்டிஅடித்து டிக்கட் வாங்க எல்லோரும் அவசரப்பட்டார்கள்.

அல்லியும் 'பட்டணத்துக்கு' ஒரு டிக்கட் வாங்கினாள். அதைப் பத்திரப்படுத்திக்கொண்டு பிளாட்பாரத்தை

அடைந்தாள்—இருள் தேடிக்காத்திருப்பதற்காகத்தான்.

இருளரக்கனின் பயங்கரப் பெருமூச்சுப்போல தூரத்தில் லேசாகக்கேட்க ஆரம்பித்தது. முன்னேறி வந்துகொண்டிருந்த வண்டித் தொடரின் இரும்பு ஒலி கொஞ்சம் கொஞ்சமாகக் கனமேற்று, வலுப்பெற்று பெரும் சிரிப்பாய், வேக இரைச்சலாய் வளர்ந்தது. தூரத்தை விழுங்கிவிட்டு, இன்னும் எவ்வளவோ தூரத்தை விழுங்க வேண்டிய துடிப்புடன்வந்த ரெயில் வண்டி சிரம பரிகாரமாகச் சற்றே நின்றது அந்தச் சிறு நிலையத்தில்.

சிலர் இறங்கினார்கள். இறங்கியவர்களைவிட அதிகமான பேர்கள் ஏறினார்கள், உள்ளே புகுந்து விட்டால் எப்படியும் இடம் பிடித்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு. நம்பிக்கைதானே மனிதர்கள் வாழ்ந்து அவதிப்படுவதற்குத் தெம்புதரும் ஜீவ சக்தியாகத் திகழ்கிறது!

அல்லியும் ஒரு பெட்டிக்குள் ஏறிவிட்டாள். ஆழ்ந்த பெருமூச்சுவிட்டு அசைய ஆரம்பித்த வண்டித்தொடர் நெடுமூச்சு விட்டபடி, காலத்தைக்கொல்லமுயன்று தூரத்தை மென்று துப்பிக்கொண்டு முன்னே, முன்னே ஓடியது. அல்லி இழந்த தைரியம் எங்கிருந்தோ, எப்படியோ வந்து அவள் உள்ளத்தில் புகுந்துவிட்டது.

''ஒரு மாதிரியாகத்தப்பியாச்சு. இனிமேல் பயமில்லை!'' என்று மூச்சுவிட்டாள் அவள். அவள் கண்கள் ரயில் வண்டியின் மங்கலான விளக்கொளியில் குறிப்பற்றுச் சுழலும் குருட்டு வண்டுகளாயின. அங்கு எவ்வளவோ பேர் எப்படி எப்படியோ இருந்தார்கள். ஆனால் அவளுக்குத் தெரிந்தவர் ஒருவருமே இல்லை. இனம் தெரியாத முகங்களுக்கு மத்தியில் தன்னந் தனியாக நின்ற அவளுக்கு அதுவே ஒரு பலமாக இருந்தது.

எண்ணத் தொடங்கினுல் அதுவே பலவீனமாகவும் தோன்றியது. மனிதக் காட்டிலே திக்குத் தெரியாமல் திண்டாடும் இளம் மாறுய் மிரளமிரள விழித்தாள் அவள். அந்த வண்டியில் மட்டும் தான் அவள் நிலே அப்படி என்பதில்லேயே! ஊரிலும் உலகத்திலும் அல்லியின் அந்தஸ்து அதுதானே? தன்னேயே—தனது தனித் தன்மையை—ஊருக்கு உணர்த்த முயன்று, தனக்கென இடமின்றி, தனக்குரிய இடம்தான் எதுவெனப் புரியாது தன்னந் தனியாகிவிட்ட அபலேதானே அவ்ள்.

இறந்த கால வாழ்வுபற்றி இனி எண்ணுவதில்லே என்று தீர்மானித்தாள் அல்லி—கற்பலகையில் தவருகவோ, சரியாகவோ போட்டிருந்த கணக்கை, எச்சிலேத் துப்பியோ அல்லது ஈரத்துணி தடவியோ அழித்துவிட்டுப் புதுக் கணக்குப்போட ஆசைப்படும் சிறுமிபோல. ஆனல் எதிர்காலம் அவளுக்காக என்ன வைத்துக்கொண்டு, எப்படிக் காத்திருந்தது என்பதை உணரத் துணேபுரியும் சிறு ஒளிக்கோடுகூட அவளது சித்த வெளியிலே மின் வெட்டவில்லே.

நிகழ்காலம் ரெயில் தொடரின் வேகத்துக்கேற்ப ஓடிக் கொண்டிருந்தது. ரயில் வண்டியோ, 'கடமையைச் செய்; பலனேக் கருதாதே' என்று உபதேசித்த கீதாசிரியனின் உண்மையான சீடன் போல் இயங்கியது.

வேருெரு சமயமாக இருந்தால், அல்லி சாளரத்தின் வழியாக வெளியே பார்த்து அனேத்தையும் கவனித்திருப்பாள். பாதை நெடுகிலும் அலங்கோலமாய் நிற்கும் ரயில்வேக் கற்ருழை மீது ஒளியும் நிழலும் சித்தரித்த காட்சிகளேயும் வெள்ளி நிலவில் குளிக்கும் இன்பத்தில் சொக்கிய சூழ்நிலேயையும் வேடிக்கை பார்த்திருப்பாள். இப்போது அவளுக்கு அதிலெல்லாம் நாட்டம் இல்லே. ரயில் நின்றதையோ, கிளம்பியதையோ, ஸ்டேஷன்கள் வந்ததையோ, போனதையோ அவள் கவனிக்கவில்லே.

இருப்பினும், மாயவரம், அவளுக்கும்—மற்றவர்களுக்கும்—எல்லோருக்கும் உணர்வு புகுத்தியவாறு வந்தது. இறங்கவேண்டியவர்கள் பரபரப்போடு எழுந்தார்கள். அவர்களைவிட அதிகமான பரபரப்புடன் ஏற வேண்டியவர்கள் எதிரிட்டார்கள். எப்படியோ ஏற வேண்டியவர்கள் ஏறியும், இறங்கவேண்டியவர்கள் இறங்கியும் ஆன பிறகுகூட வண்டி அசைவற்று நின்றது. எல்லோருக்கும் பொறுமை இருக்குமானால், எல்லாக் காரியங்களும் ஒழுங்காகவும், அமைதியாகவும், அழகாகவும் நிறைவுறும் என்பதை மனிதர்கள் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை என்பதற்கு ரயில்வே ஜங்ஷன்களே அருமையான உதாரணங்களாக அமையும்.

அத்தகைய பிரத்தியட்சப் பிரமாணங்களில் ஒன்ருகப் பணியாற்றிவிட்ட திருப்தியோடு விளங்கிய மாயவரத்தையும் பின்னுக்கு நிறுத்தி விட்டு முன்னேறியது சென்னை செல்லும் வண்டித்தொடர். அல்லி இருந்த பெட்டியில் பழைய முகங்கள் சில இருந்தன. புது முகங்கள் நிறையவே தென்பட்டன.

விசாலப் பார்வையாய் சுழன்ற அவள் கண்களை, உறுத்தும் நோக்கினுல் தொட்டன வேறு இரண்டு விழிகள். அப்பார்வையின் கூர்மை தாங்காத அல்லியின் கருவிழிகள் இமைத்திரை போர்த்தின. பின் சற்றே அதை நீக்கி அவனை ஆராய முயன்றன.

அவளைப் பார்த்துவிட்டுத் தன் கண்களை விலக்கிய இளைஞனின் தோற்றமே அவனை ஒரு போக்கிரி என்று விளம்பரப்படுத்திக்கொண்டிருந்தது. சிலிர்த்து நின்ற தலை முடியும், அருப்பு மீசையும், கனத்த புருவங்களுக்கு அடியில் சுழல் நெருப்புத் துண்டுகளாய் ஜொலித்த கண்களும், அவை வீசிய அலட்சிய நோக்கும், உதடுகளில்

மின்னிய கோணல் சிரிப்பும் அவன் தொழிலுக்கு ஏற்ற படைகளாகவே விளங்கின; யாரும் தனக்கு நிகரில்லை என்று எண்ணும் அகங்காரத்தோடு, அந்தப்பெட்டியை— ஏன், ரயில்வேயையே விலைக்கு வாங்கிவிட்டவனைப் போன்ற ஒரு தோரணையோடு அவன் காணப்பட்டான். சக பிரயாணிகளின் சௌகரிய அசௌகரியங்களைப் பற்றிக் கவலை எதுவுமில்லாமல், அவர்கள் அனுமதியும் ஆமோதிப்பும் பெற வேண்டும் என்கிற அறிவிப்பை சட்டை செய்யாமல், அவன் பீடி புகைத்தபடி பெஞ்சு மீது வீற்றிருந்தான்.

'மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார்' இனத்தைச் சேர்ந்த—கருமமே கண்ணான டிக்கட் பரிசோதகர் ஒருவர் அந்த நேரத்திலும் வந்து சேர்ந்தார். தூங்கியவர்கள் அருகே பலகையில் 'டக் டக்' என்று பென்சிலால் தட்டி தூக்கத்தை ஓட்டினார். 'டிக்கட், டிக்கட் ப்ளீஸ்' என்று கேட்டும் விழித்திருப்போரிடம் பேசாமலே விரல்களை நீட்டியும், டிக்கட்டுகளை வாங்கி விளக்கொளியில் பார்த்து விட்டு, புரட்டி, பின்பக்கத்தில் பென்சிலால் கோணல் கோடுகள் கிறுக்கிக் கொடுத்தார். ஒவ்வொருவரும் அவசரமாகவோ, சாவதானமாகவோ அவரவர் டிக்கட்டைக் காட்டி, கிறுக்கல் பெற்றுத் திருப்தி அடைந்தார்கள்.

அலட்சிய பாவத்தோடு இருந்தவன் அசையாமலே காணப்பட்டான். பரிசோதகரின் விரல் அசைவைக் காணாதவன் போலிருந்தான். 'டிக்கட்' என்ற ஒலியைக் கேளாதவன் போல் பாவித்த அவனை நெருங்கி நின்று, 'டிக்கட்டை எடய்யா!' என்று சற்று அதட்டலாகக் கேட்டார், அப்படிக் கேட்கும் உரிமை உடையவர். அவனோ அவரை எடை போடுவது போல் பார்த்தானே தவிர, எதுவும் பேசவில்லை.

''ஏய், எந்த ஊருக்குப் போகிறே? டிக்கட் எங்கே?'' அதிகாரக் குரல் கனமேற்று ஒலித்தது.

''இல்லே!'' என்று அலட்சியமாகச் சொன்னான் அவன்.

''ஏன் இல்லே? எங்கே போறதுக்காக வண்டி ஏறினே?''

''ஏனில்லே என்றால் எடுக்கவில்லே; அவ்வளவுதான்!'' என்று நாடகத் தோரணையில் பேசினான் அவன்.

''ஏண்டா எடுக்கல்லே? இது என்ன உங்க அப்பன் வீட்டு ரயிலா?''

''யாரு அப்பன் வீட்டு ரயிலுமில்லே!'' என்று முணகினான் அவன்.

''வீண் கதை எதற்கு? நீ எங்கே போகணும்?''

''மதராஸ்...''

பரிசோதகர் கணக்குப் பார்த்து ஒரு தொகையைக் குறிப்பிட்டார். 'உம்; பணத்தை எடு!' என்று கட்டளையிட்டார்.

''என்னிடம் பணமிருந்தால் நான் டிக்கட்டே எடுத்திருப்பேனே? உங்களிடம் தெண்டம் அழணுமிங்கிற ஆசையா என்ன, மடியிலே பணம் வைத்துக் கொண்டு சும்மா வர!'' என்று கெண்டையாகப் பேசி, 'வில்லன்' சிரிப்பு சிரித்தான் அவன்.

''வக்கத்த பயலுக்கு வாயைப் பாரேன்!'' என்று அவன் கன்னத்தில் ஓர் அறை கொடுத்தார் பரிசோதகர். ''துரைகளுக்கு ஸீட் வேறே! ஜம்னு உட்கார்ந்து விட்டார்.........சீ, எழுந்திரு!'' என்று சொல்லி அவன் கழுத்திலே கைவைத்தார்.

''என்மேலே கை போடாதே, ஸார்!'' என்ற முறைப்பு அவனிடமிருந்து பிறந்தது.

அவனை அடிக்க மீண்டும் கை ஓங்கினார் பரிசோதகர். அவர் எதிர்பாராத காரியம் ஒன்று நிகழ்ந்தது. அவன் எதிர்பார்த்திராதது அது. யாருமே எதிர்பார்க்க முடியாததுங்கூட.

''அவரை அடிக்க வேண்டாம். உங்களுக்குப் பணம் தானே வேண்டும்?'' என்ற குரல் கணீரென ஒலித்தது. பரிசோதகரின் பார்வையை இழுத்தது.

வியப்புடன் திரும்பிய அவர் திகைப்படைந்தார். போக்கிரியையும் பரிசோதகரையும் கவனித்தபடி இருந்து கவனம் கலையப் பெற்ற பிரயாணிகளும் திகைத்தார்கள். போக்கிரிகூட திகைத்துத்தான் நின்றான்.

பிறர் திகைப்பையோ, வேறெதையுமோ கவனிக்காமல், ''இந்தாங்க!'' என்றுபணத்தை நீட்டினாள் அல்லி. அவர் அவளை அதிசயமாகப் பார்த்தார். ''ஏன் யோசிக்கிறீங்க? இதோ வாங்கிக்கொள்ளுங்கள்,'' என்று அல்லி மீண்டும் சொன்னாள்.

அவர் பணத்தைப் பெற்று, ரசீது எழுதிக் கிழித்துக் கொடுத்து விட்டு நகர்ந்தார். அவனையும் அவளையும் ஒரு தினுசாகப் பார்த்து விட்டுத்தான் நகர்ந்தார். பிறகு மறுபெட்டிக்குத் தாவி மறைந்தார்.

பிரயாணிகள் பலரும் பலவிதமாகப் பேசலானார்கள்: 'அவனுக்கு வேண்டியவளாகத்தான் இருப்பாள்'; 'அப்படித்தோணலே!'; எவளாக இருந்தாலும்,பெயரெடுத்தவளாகத்தான் இருக்கவேணும். இல்லையென்றால் இவ்வளவு துணிவாக நடப்பாளா?'; 'இவளுக்கு ஏனோ இவ்வளவு அக்கறை?'

ஒருவன் தனது பாரதி ஞானத்தை அம்பலப்படுத்திக் கொண்டான்.

> ''காதலொருவனைக் கைபிடித்தே; அவன்
> காரியம் யாவினும கைகொடுத்து,
> மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
> மாட்சி பெறச் செய்து வாழ்வமடி!''

என்று அலறினான் அவ்விளைஞன்.

''அவளுக்கு வெட்கம் எதுவும் இல்லைபோலிருக்கு!'' என்று ஒரு பெரிய அம்மாள் அபிப்பிராயப்பட்டாள்.

''நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்!'' என்றான் பாட்டைக் கதறியவன்.

தனது தனித்துவத்தினால் மாங்குடியில் விபரீதமான கருத்துக்களை விதைத்துப் பயிரிட்டு விட்டு ஓடிவந்த அல்லி, அதே பண்பினால் விதம் விதமான பேச்சுக்களை ஓடும் ரயிலிலே விளையச் செய்தாள். அவள் ஏன் அப்படிச் செய்தாள்? எண்ணமிட்டுச் செயல்புரியவில்லை அவள். அந்த நேரத்திய உணர்வு எதுவோ உந்தி விட்ட செயலாகத்தான் இருக்கமுடியும் அது. ஏன் அவள் அவ்விதம் செயலாற்றினாள் என்பதை அவளாலேயே விளக்க முடிந்திருக்காது. மனித உணர்ச்சியை இழந்து விடாத ஈர இதயம் இருந்தது அவளுக்கு. சமூகக் கொடுமைகளும், வாழ்க்கை வெயிலும், அனுபவ நெருப்புத் துண்டுகளும் அவ்வுணர்ச்சியை இன்னும் வறளடித்து விடவில்லை. மனித இயல்புடன் நடந்து கொண்ட அவள் செயலை மற்றவர்கள் தவறாக மதித்தால் அதற்கு அவளா பொறுப்பு?

'ரொம்ப நன்றி!' என்ற சொல் அவளருகே தெறித்தது. அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள். அவன் நின்றான், புன்னகையோடு.

''நீ செய்த உதவி சரியான காலத்தில் செய்த பெரிய உதவி!'' என்றான்.

''இது என்ன பிரமாத உதவி?'' என்று முனங்கினாள் அவள்.

''என் பெயர் அருணாசலம், நான் மதராஸ் போகிறேன்.

எனக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. அதனால் என்னிடம் பணமும் இல்லை. ஆகவே டிக்கட் எடுக்க வில்லை.'' தனது செயலுக்கு விளக்கம் கொடுப்பவன் போலவும், தன்னை அறிமுகம் செய்து கொள்வது போலவும் பேசினான் அவன்.

''நீ எங்கே போகிறாய்... ...?"

''பட்டணத்துக்குத்தான்!''

''அங்கே உனக்கு யார் இருக்கிறார்கள்?''

''யாருமேயில்லை. எனக்கு எங்குமே யாருமில்லை!" என்றாள் அல்லி.

''பின்னே அங்கு ஏன் போகிறாய்!''

''பிழைப்புத் தேடித்தான்... ...!''

''உனக்குப் பாடத் தெரியுமா? ஆடத் தெரியுமா?''

அருணாசலம் இப்படிக் கேட்டதும் அல்லிக்குச் சிறு கோபம் வந்தது.''ஒரு பெண்ணுக்குத் தெரிய வேண்டிய வீட்டு வேலைகள் எல்லாம் எனக்குத் தெரியும்!'' என்று வெடுக்கெனச் சொன்னாள் அவள்.

அவன் உதடுகளைச் சுளித்தான். 'பிரயோசனமில்லை!' என்பது போல் தலையை ஆட்டினான். ''பட்டணத்திலே சுகமான பிழைப்பு கிடைப்பதற்கு ஆட்டமும் பாட்டும் தான் உதவி புரியும். வாயடியும் கையடியும் ஆணுக்குத் துணை நிற்கும்!'' என்று அவன் சொன்னான்.

இதற்குள், அல்லிக்கு எதிர்ப்பெஞ்சில் அவன் இடம் பிடித்து உட்கார்ந்துவிட்டான். அவளுக்கு அவனைப் பிடித்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவன் மீது அவளுக்கு வெறுப்பு ஏற்படவில்லை. அவளுடைய விருப்பு வெறுப்புகளை—பொதுவாக எவருடைய விருப்பு வெறுப்புகளையும்—பற்றி அக்கறை கொள்ளாது ரயில் வண்டி ஓடிக்கொண்டேயிருந்தது.

பிரயாணிகளில் முக்கால் வாசிப்பேர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். அநேகர் உட்கார்ந்த படியே 'சாமி ஆடி' விழுவதும் எழுவதுமாக இருந்தார்கள். விழித் திருந்தவர்கள் ஒரு சிலரே.

அல்லியும் அருணாசலமும் தூங்கவில்லை. தங்களைப் பற்றியும், பொதுவாக வாழ்க்கையின் வஞ்சனைகள், உலகத்தின் பொல்லாத குணம், ஏமாந்தவர்கள்—ஏமாற்றுகிறவர்கள் பற்றியும் பேசினார்கள். எந்த ஊரிலும் ஒரு பெண்—அதிலும், அல்லியைப் போன்ற வசீகரமுடைய இளம் பெண்—தனிமையாக வாழ்வது ஆபத்தை விலைகொடுத்து வாங்குவதுபோல்தான் என்று அவன் அறிவித்தான. துணை இல்லாமல் தான் வாழ முயல்வது அபாயகரமானது என்றே அவள் உள்ளுணர்வும் கூறியது. ''அதற்காக வழியோடு போன எவனையோ நம்பி விடுவதா?'' என்று அவளது மனக் குறளி ஐயவினு போட்டது. ''நம்புவோம். நம்பினூர் கெடுவதில்லை'' என்றது அவள் அறிவு.

ரயில் எழும்பூர் வந்து சேர்ந்தபோது அல்லியும் அருணாசலமும் வெவ்வேறு பெஞ்சுகளில் இருக்கவில்லை. பக்கத்தில் பக்கத்திலேதான் காணப்பட்டார்கள். ஒருவர் பின் ஒருவராக இறங்கி, ஒன்ருகச் சேர்ந்தே நடந்தார்கள்.

ரெயில் எழும்பூர் வந்து சேர்ந்ததும் அல்லிக்கு பிரமிப்பு அளித்தன. வெளியே வந்ததும், பெரிய ரஸ்தாவும், நாகரிக வாகனங்களும், பரபரப்பும், அவசரமயமான இயக்கமும் அவளைத் திகைப்புறுத்தின. தான் மட்டும் தனியளாய் வந்திருந்தால் திக்குமுக்காடித் தவிக்க நேரிட்டிருக்கும், நல்ல வேளையாக ஒரு துணை கிடைத்ததே என மகிழ்ந்தாள் அவள். அவளாகவே அவன்

கையைப்பற்றிக் கொண்டாள். அவனோடு நெருங்கி நடந்தாள்.

"அருணாசலம், இந்த வண்டியிலேதான் வாரீயா?" என்று ஒருவன் கேள்வி எழுப்பவும், அவன் நின்றான். அவளும் நின்றாள். "இது யாரு?" என்று கேட்பதுபோல் அல்லி மீது பார்வை எறிந்தான்.

"என் அக்கா மகள்!" என்று கூசாது சொன்னான் அருணாசலம்.

அப்பொழுது தன் முகத்தில் படர்ந்த நாணச் சிவப்பை மறைப்பதற்காக அல்லி தன் முகத்தை மிகவும் தாழ்த்தி நின்றாள்.

"வாத்தியார் இந்த வண்டியில் வருவதாக எழுதியிருந் தார். அதுதான் நான்......"என ஆரம்பித்த மற்றவன், "அடேடே, அவங்க எல்லோருமே அதோ வந்து விட் டாங்களே!"என்று கூறி முன் நகர்ந்தான்.

ஒரு கோஷ்டி ஸ்டேஷன் படிக்கட்டுகளை விட்டு இறங்கி நின்று சுற்றுமுற்றும் பார்த்தது. அதில்மிடுக்கானதோற்ற முடைய ஆண்களும், அலங்காரவல்லிகள் நான்குபேரும் காணப்பட்டனர். அவர்களின் 'வாத்தியார்' ஆடம்பர மாகத்தான் தோன்றினர்.

"அவர்தான் நடன ஆசிரியர் ராஜநாயகம். அவருடைய நடன கோஷ்டிதான் இது. நம்மோடு பேசியவன் அவ ரது சீடர்களில் ஒருவன். கோபிநாதன். இவனும் ஆடு வான்." என்று அருணாசலம் அல்லிக்கு அறிவித்தான். "வா, நாமும் வாத்தியாருக்கு ஒரு கும்பிடு போட்டு வைக்கலாம்." என்று சொல்லி, அவளை அழைத்துக் கொண்டு அவர்கள் அருகே சென்றான். "வணக்கம்" என்றான்.

புன்னகை பூத்தபடி, அவனைப் பார்த்தார் ராஜநாயகம்.

அவர் கண்கள் அல்லி மீது மேய்ந்தன. "உனக்குக் கல்யாணம் ஆகப் போவது பற்றி நமக்கு நீ சொல்லவே இல்லையே?'' என்று கேட்டார். பெருங் கனைப்பைச் சிரிப்பு என வினியோகித்தார்.

''எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை, அண்ணே. இது என் அக்கா மகள் அல்லி.'' என்றான் அருணாசலம்.

அவள் முகம் மாதுளம் பூவாய் மீண்டும் சிவந்தது. அவள் மனம் அரித்தது. உள்ளத்தில் தெளிவற்ற கலவரம்சிறிது படர்ந்தது.

''எல்லோரும் வண்டியிலே ஏறுங்க.'' என்றார் வாத்தியார். அவரது பட்டாளம், அங்கு நின்ற 'வேன்' ஒன்றில் ஏறி இடம் பிடித்தது. ''நீயும் ஏறப்பா அருணாசலம். அல்லியும் ஏறலாமே!'' என்றார் அவர்.

அவர்களும் ஏறிக்கொண்டார்கள். வண்டி பறந்தது.

அல்லிக்கு எல்லாமே புதுசாகவும்,புதிராகவும் இருந்தன. குழப்பமும் கலக்கமும் எழுந்தன.'பட்டணம்' 'பட்டணம்' என்று பெரிதாகக் கேள்விப்பட்டிருந்தாளே தவிர,அது இவ்வளவு பெரிதாக,பரபரப்பு மிக்கதாய், ஜன நெருக்கம் பெருத்ததாய், வேகமும் வேஷமும் நிறைந்ததாய் இருக்கும் என்று அவள் எண்ணியதேயில்லை. எண்ணியிருக்கவும் அவளால் முடியாது.

அருணாசலம் அவளைப் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று காட்டினான். அவளும் சிறுமி பொம்மைக்கடையைப் பார்த்து ரசிப்பது போல் எல்லாக் காட்சிகளையும் கண்டு களித்தாள். இவ்வளவு பெரிய பட்டணத்தில் எப்படி வாழ்வது, என்ன செய்து பிழைப்பது என்ற பிரச்னை ஏக்கமாய்,கவலையாய் எழுந்து அவளை அச்சுறுத்தியது.

தங்குவதற்கு நல்ல இடமும், சௌகரியமான வேலையும் கிடைப்பது வரை அவள் நடனக் கோஷ்டியின்

'கலைக்கூட'த்திலேயே தங்கியிருக்கலாம் என்று வாத்தியார் அனுமதித்து விட்டார்.

''உங்களுக்கும் நடனம் ஆடத் தெரியுமா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள் அல்லி—அருணாசலத்திடம், தனிமையில் தான்.

''ஊகுங்!'' எனத் தலையசைத்தான் அவன்.

''பின்னே?''

''நான் வாத்தியாருக்கு ரொம்பவும் வேண்டியவன்,'' என்றான் அவன்.

அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை அவளால் 'ரொம்பவும் வேண்டியவன்' என்றால் என்ன அர்த்தம்? அதுவும் அவளுக்குப் புரியவில்லை. ஆயினும் அவனிடம் அவள் விளக்கம் கோரவில்லை.

'வந்து இரண்டு தினங்கள் தானே ஆகின்றன. புரிந்து கொள்ளாமலா போகப் போகிறோம்'' என்று எண்ணினாள் அல்லி. 'இந்தப் பெரிய இடத்தில் பலரோடு வாழ வாய்ப்பு ஏற்பட்டதும் நல்லதுதான். திடீரென்று சந்தித்த ஒருவனோடு தனி இடத்தில் தங்க வேண்டும் என்றாள் தயக்கமாகவும் பயமாகவும்தான் இருக்கிறது' என்று அவள் மனம் குறுகுறுத்தது.

அப்பொழுது பிற்பகல். வெயிலின் கொடுமை பலரையும் கிறக்கிய நேரம். அல்லி ஓர் அறையில் தனியாகத்தான் இருந்தாள். அவள் மனம் எங்கெங்கோ சஞ்சரித்துக் கொண்டேயிருந்தது.

அப்பொழுது அறைக்கு வெளியே யாரோ வந்து நின்றது போல் தோன்றியது. அருணாசலமாக இருக்கும் என எண்ணினாள் அல்லி. ''யாரது? உள்ளே வரலாமே?'' என்றாள்.

அழைப்பை ஏற்று உள்ளே வந்தது அருணாசலம் அல்ல; 'வாத்தியார்' ராஜநாயகம்!

அவர் முகமெல்லாம் சிரிப்புப்பூத்துக் கிடந்தது. இதழ்கள் சிரித்தன. வெற்றிலைக் காவிஏறிய பற்கள் பளிச்சிட்டன. கண்கள் சிரித்தன.

படுக்கையில் சாய்ந்து கிடந்த அல்லி பதறி எழுந்தாள். ஆடையைச் சரிப்படுத்திக்கொண்டு ஒடுங்கி நின்றாள்.

'வாத்தியார்' அறைக்கதவைச் சாத்திவிட்டு அவளைப் பார்த்தார். சிரித்தார். ''என்ன அல்லி, எப்படி இருக்கிறே?'' என்று கேட்டபடி முன்னே நகர்ந்தார்.

# கதம்பத்தின் மணம்

தனி மல்லிகைச் சரத்துக்கும், ரோஜாச் செண்டுக்கும் இருக்கும் சிறப்பு கதம்பத்துக்கும் உண்டு. முல்லை, இருவாட்சி தாழம்பூ, மருக்கொழுந்து முதலிய மலர்களை அருகருகே வைத்து இணைக்கும் போதுதோற்றத்திலும் மணத்திலும் தனிச்சிறப்பை அடைந்து விடுகிறது அந்த மாலை.கதம்பச்சரத்தின் பல மலர்களைப்போல, பல்வேறு கருத்துக்களை— கற்பனைகளை எண்ணங்களை நாங்கள் ஒன்றுசேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். திரு.வாசவன் அவர்கள் தீபாவளித் திருநாளில் ஆடும் தீபத்தில் சுடரை ஏற்றிவைத்து விட்டார்.அது உமிழும் ஒளியிலே அல்லியை அரக்கர் வாயிலிருந்து கம்பீரமாக மீட்டுப் பட்டணம் கொண்டுவந்து சேர்த்து விட்டார் திரு. வல்லிக்கண்ணன் அவர்கள். நாட்டுப்புறத்து அல்லிமலரை நகரத்து மேஜை ஜாடியில் வைத்து அழகு பார்க்க வேண்டிய பொறுப்பு என் மீது விழுந்திருக்கிறது. கள்ளமில்லாத நாட்டுப்புறத்துப் பெண் அல்லியின் வாழ்க்கையிலே இனி நாட்டியமும் நடிப்பும் இடம் பெற வாய்ப்பு ஏற்படுத்தத்தான் ராஜநாயகம் அவளைத் தேடி வருவதாக நாம் ஏன் எண்ணலாகாது?

ஸரோஜா ராமமூர்த்தி

பொறி மூன்று:

# கைவழி நயனம் செல்ல,
# கண்வழி மனமும் செல்ல...!

வாத்தியார் ராஜநாயகம் உள்ளே நுழைந்ததும், அல்லியின் நற்குணங்கள் யாவும் அவளிடம் ஓடிவந்து அடைக்கலம் புகுந்தன. பெற்ற தந்தையை மீண்டும் உயிருடன் பார்ப்பதுபோல் அவள் மனத்துள் அன்பு கொப்புளித்து எழுந்தது.பரபரப்புடன் எழுந்துமேலாப்பை போர்த்தியவாறு அவர் எதிரில் வந்து பய பக்தியுடன் நின்ருள்.

ராஜநாயகம் அன்று எழும்பூர் ரெயிலடியில் தான் பார்த்த எழிலுருவத்தினை மறுபடியும் ஏற இறங்கப் பார்த்தார். காரில் ஏறிய அல்லி சற்று நடுங்கியவாறு ஒரு மூலையில் இடம்பிடித்துக்கொண்டு சென்னை நகரத்துத் தெருக்களையே வெறித்துப் பார்த்துக்கொண்டு வந்தாள். வழியெங்கும் பெரிய சினிமா சுவரொட்டி விளம்பரங்கள்! காதளவு நீண்ட தன் கருவிழிகளை இமைக்க மறந்தவாறு, ஏதோ கனவு லோகத்தில் காணப்பட வேண்டியவை தன் முன் பரந்து கிடப்பது போன்ற பிரமையுடன் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டே வந்தாள் அல்லி. வண்டியில் இருந்தவர்கள் அவ்வளவு பேரும் அல்லியையே பார்த்தவாறு இருந்தனர். அருணசலம் பார்க்கும்போது, ராஜநாயகம் பொங்கித் தணிந்தவாறு பெருமூச்சுவிட்டார். ராஜநாயகம் பார்க்கும்பொழுது, அருணசலத்தின் உள்ளம்

'திகு திகுவென்று' எரிந்தது. ஒருத்தியை நடுவில் வைத்து, அவளைச்சுற்றி தத்தம் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் திண்டாடுவதை வண்டியிலே இருந்த மற்ற அலங்கார வல்லிகள் கவனித்துத் தமக்குள் லேசாகச் சிரித்துக் கொண்டனர். அவர்களுக்கு இந்தப் பட்டணத் துக்காரர்களின் பார்வை ஒன்றும் புதிதில்லை. பழகிப் புளித்துப்போன விஷயம்தான்.

'கலைக்கூட'த்தில் வந்து இறங்கிய அல்லிக்கு அங்கு யாவுமே புதுமையாயிருந்தன. புது வர்ணத்தினால் திகு திகுவென்று பிரகாசிக்கும் சுவர்களில் கலைகுடியிருந்தது. நடனத்தில் அரசனாகிய நடராஜன் தன்னைச்சுற்றி ஒளிரும் தீப்பிழம்பின் மையத்தில் நின்று நடனம் ஆடினான். அவன் அருகில் பெண்மைக்கு விளக்கம் தருவது போல் அன்னை சிவகாமி நின்றிருந்தாள். ராதையும் கண்ணனும் கை கோர்த்து நின்ற காட்சி காதலின் தத்துவத்தை உணர்த்துவதாக இருந்தது.

சுவரைப் பார்த்தவாறு மெய்ம்மறந்து கூடத்தில் நின்ற அல்லியிடம் விடைபெற்றுக்கொண்டு அருணசலம் வெளியே போய்விட்டான். அவ்வளவு பெரிய வீட்டில்— அந்தக் கலைக்கூடத்தில் அவள் ஒருத்தி மட்டும் நின்றிருந்தாள். கூட வந்திருந்த அலங்கார வல்லிகள் அவரவர் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

உள்ளே இருந்து வற்றிச் சருகாய்க் காய்ந்த உடலுடன் ஒரு கிழவி வெளியே வந்தாள். கூடத்தில் நின்றிருந்த அல்லியின் எதிரில் வந்து நின்று அவளை ஏற இறங்கப் பார்த்தாள். வானத்து நிலவு கீழே விழுந்து விட்டாற் போல இருந்தது அல்லியின் தோற்றம்.

நிலவுக்குக் கண்கள் உண்டா? செம்பவழவாய் உண்டா? முத்துப் பற்கள் உண்டா? மோகனச் சிரிப்புத்தான் உண்டா? ஒரே உருண்டையாய்த் தேய்ந்து, தேய்ந்து, இப்படிப் பொழுது போக்குவதுதான் அதற்குவேலையோ?

கிழவி கலை உள்ளம் படைத்தவள். பெரிய ரசிகை. அவள் வியந்தவாறு நின்றபோது, ராஜநாயகம் அங்கு வந்து, ''நாச்சியாரம்மா, இது ஒரு புதுப் பொண்ணு. பட்டிக் காட்டிலே வளர்ந்த பொண்ணுன்னு அதன் பார்வையைப் பார்த்தாலே தெரியுது. மாடியிலே நம்ப ராஜவல்லியின் அறையை இதுக்கு ஒழிச்சுக்கொடு,'' என்று கூறிவிட்டு வெளியே போய்விட்டார்.

மாங்குடியிலிருந்து வயலிலும், வரப்பிலும் நடந்து வந்த களைப்பு வேறு, இரவின் இருளில்காமத்தால் சிவந்திருந்த நான்கு கொள்ளிக் கண்களின் பார்வையை விட்டு விலகி ஓடிவந்த பதைப்பு வேறாக, அவள் மாடி அறையில் சாப்பிட்டுப் படுத்தவள்தான்; உறக்கம் இமைகளைத் தழுவ, உள்ளம் சற்றே ஆறுதல் அடைய, பகல் பொழுது மேற்கே சரிந்து போவது கூடத் தெரியாமல் தூங்கிப் போனாள்.

பளபளவென்று தங்கம்போல் மின்னும் ரெயில் பெட்டி ஒன்றில் அவளும் அவனும், அதுதான் அருணாசலமும்—திசை தெரியாமல் எங்கோ பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். ரெயிலின் இருபக்கங்களிலும் கண்ணாடிப் பலகை போல் தெளிந்த நீர் நிலைகள். அங்கே பூத்துக் குவிந்திருக்கும் அல்லி மலர்கள்! வெண் தாமரைகள் வானத்தில் உலவும் கதிரவனைப் பார்த்து இதழ்கள் விரித்து அவை ஆடும் அழகை அல்லி கண் கொட்டாமல் பார்த்து வந்தாள். எங்கோ பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் சுடர்விடும் அந்தக் கதிரவனிடம் அவற்றுக்கு எத்துணைக் காதல் என்று வியந்தாள் அவள். அருணாசலம் அவளுக்கு அண்மையில் உட்கார்ந்து அவள் முகத்தையே பார்த்துக்கொண்டு வந்தான். இருவருமே பேசவில்லை. சொல்லால் அளக்க முடியாதவற்றை அவர்களின் இரு உள்ளங்களும் அளந்து பார்த்துக் களித்துக் கொண்டிருந்தன.

திடீரென்று அல்லி பட பட வென்று கைகளைக் கொட்டினுள். குளத்தில் முழுகி எழும் பெண்ணொருத்தி சற்றுத் தொலைவில் மலர்ந்திருந்த தாமரையைக் கொய்ய முடியாமல் திண்டாடுவது அவளுக்கு வியப்பாக இருந்தது. ஒரே பாய்ச்சலில் குளத்திலே குதித்து, ஒரு மலர் என்ன, கை நிறைய மலர்களைக் கொய்துவிட வேண்டும் என்கிற துடிப்பு அவள் கைதட்டலில் பிரதிபலித்தது.

அல்லி கனவு கண்டு விழித்தாள். வாசற் கதவைப் போய்த் திறந்ததும், ராஜநாயகம் தம் காவிப்பற்கள் தெரிய நகைத்தவாறு உள்ளே வந்து சேர்ந்தார்.

கோவிலின் சிற்பம் தன் இடம் விட்டுப் பெயர்ந்து வந்து தம் அருகில் நிற்பது போலிருந்தது ராஜநாயகத்துக்கு.

''என்னம்மா, அல்லி! எப்படி இருக்கிறே? ஊரெல்லாம் பிடிச்சிருக்கா?'' என்று, அடக்கத்துடன் நிற்கும் அவளைப் பார்த்துக் கேட்டார் அவர்.

நிலத்தை நோக்கியிருந்த நீள் விழிகளை மேலும் உயர்த்தினுள் அல்லி.

''உட்காருங்க வாத்தியார் ஐயா! ஊரைப் பார்த்தா எல்லாமே புதுமையா இருக்கு; பட்டணத்திலே பிறந்தவங்களுக்குத் தரையிலே கால் பாவாதாமே?'' என்று குறும்பாகக் கேட்டுத் தனக்குள் சிரித்துக்கொண்டாள் அவள்.

''ஏன்? நாங்க எல்லாம் பிசாசா? நீ ஒண்ணு...!'' என்று கூறிய ராஜநாயகம் அங்கு கிடந்த பெஞ்சியில் உட்கார்ந்தவாறு அல்லி மீது பார்வையைச் செலுத்தினுர்.

வாயிற்கதவு லேசாகத் திறந்திருந்தது. பகல் பொழுதின் வெப்பம் சற்று தணிந்து, மாலைக்காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது. வாத்தியாரின் பார்வையும் பேச்சும்

அல்லிக்கு அவ்வளவாக ரசிக்கவில்லே. மாங்குடி வயலில் பார்த்த அந்த இருவரின் பார்வையில் சுழன்ற பேராசையும், அக்கிரமும் வாத்தியாரின் பார்வையில் இல்லே. நாகரிகமாக, சாமர்த்தியமாக கொடுமையை மறைத்து, குளிர்ந்த பார்வை பார்த்தார் ராஜநாயகம். பட்டினத்தின் நாகரீகத்தின் முதற்படி இது. அரக்கத்தனத்தை மறைக்கும் ஆற்றலேப் பட்டணத்தார்கள் நன்ருகப் பயின்றிருக்கிருர்கள் என்பது அவளுக்குப் புரிந்தது. 'இந்தப் புலி திடீரென்று பாய்ந்து விடாது; குறி வைத்துத்தான் பாயும்' என்பதும் அவளுக்குப் புரிந்து விட்டது.

ராஜநாயகம் தொண்டையைக் கனேத்தவாறு, ''அல்லி! அந்த அருணுசலம் உனக்கு மாமனு? அவனுடைய அக்காள் மகளா நீ?'' என்று கேட்டார்.

அருணுசலத்தைப் பற்றி அவர் பேசியதும், அல்லியின் முகத்தில் நாணம் ஏற்பட்டது. சற்றுமுன் கண்டகனவை நினேத்துப் பார்த்தாள். வாத்தியாரின் பக்கம் திரும்பி, ''வாத்தியாரிடம் நான் எதற்குப் பொய் சொல்லணும்? குருவிடம் பக்தியோடு இருந்தால் தான் ஏதாவது வித்தை கத்துக்கிட்டாலும் சரியாக வரும். அவர் எனக்கு உறவு இல்லீங்க, ரயிலிலே சந்திச்சோம் அவ்வளவு தான்...!'' என்ருள் அல்லி.

''பூ! இவ்வளவுதானு? பயல் சரியான பிடியாகத்தான் பிடித்திருக்கிருன். அவனே நம்பி—ஹூம்—ஏம்மா, இப்படித் தனியாக வரலாமா?...''

அல்லியின் நீண்ட விழிகள் வியப்பால் மலர்ந்தன.

''அவரை நம்பியா? நானு...'' கட கடவென்று மணியோசை போல அவள் சிரித்து விட்டு, ''ஐயா, நான் யாரை நம்பியும் ஊரை விட்டுக் கிளம்பவில்லே. என்னே நம்பித்தான் நான் வெளியில் வந்தேன்.'' என்ருள்.

"தன்னம்பிக்கை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியது தான். ஆனால் உன் வயசு, காலம் எல்லாம் நீ தனியாக வாழ முடியாதென்று கூறுகின்றன. மீன்விழிகளும் எள்ளுப்பூ நாசியும், மாதுளை மொட்டன்ன இதழ்களும், முத்துப் பற்களும் கொண்ட நிலவு முகத்தினளாக ஒரு பெண் இருந்து விட்டால், பேராசைக்கழுகுகள் கொத்திப் பிடுங்க வராமலிருக்குமா அல்லி? சமூகத்தில் நீ தகுந்த துணையுடன் வாழவேண்டும். கண்டவனை நம்பக் கூடாது. இந்த வீடு எனக்குச் சொந்தமானது. பெயருக்கும் புகழுக்கும் எனக்கொன்றும் குறைச்சல் இல்லை. எப்பொழுதோ என் மனைவி என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டாள். அவள் வெறுமனேபோகவில்லை. அழகுப் பதுமை போல் ஒரு மகளை எனக்குக் கொடுத்து விட்டுத் தான் போனாள். என் மகள் ராஜவல்லி மேகத் திரளில் தோன்றும் மின்னல் கீற்றென பன்னிரண்டு வயசுக்குள் பரதக்கலையைப் பழுதில்லாமல் ஆடிஎன்னைக் களிப்பில் ஆழ்த்தி விட்டு நான்கு நாள் ஜுரத்தில் இறந்து விட்டாள்.

வாத்தியார் ராஜநாயகம் கண்ணீர் பெருக மகளை நினைத்துத் தேம்பினார். அல்லி திறந்த வாய் மூடாமல் அவர் முகத்தையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மேல் துண்டினால் கண்ணீரைத் துடைத்து விட்டு ராஜநாயகம் அவளை மீண்டும் ஆசை பொங்கப் பார்த்தார்.

"வெறிச்சோடிப்போன என் வீட்டிற்கும், வாழ்க்கைக்கும் நீ ஏன் ஆடும் தீபமாக இருக்கக் கூடாது, அல்லி? அன்று ரெயிலடியில் உன்னைப் பார்த்தபோதே என் இதயம் பொங்கி வழிந்தது. அந்த அருணாசலம் உன் கூட இருந்ததால், என்உணர்ச்சிகளைஅடக்கிக்கொண்டேன்."

ராஜநாயகம் சற்று முன் மகளைப் பறிகொடுத்த தந்தையாக இருந்தவர், மூன்றும்தர மனிதராக மாறிச் சாக

கடைக் குழியில் தலை குப்புற விழ தம்மையே ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தார்.

''ஐயோ பாவம்!'' என்று அல்லி அனுதாபப்பட்டுக் கொண்டிருந்தபோது, அவர் பேச்சுக்கள் அவளைச் சிலிர்த்தெழச் செய்தன. கண்கள் 'ஜிவு ஜிவு' என்று சிவக்க அவள் அவரை ஏறிட்டுப் பார்த்தவாறு "அன்று ரெயிலடியில் என்னுடன் அருணசலம் மட்டும் இராமல் இருந்தால், என்னை நீங்கள் என்ன செய்து விடுவீர்களாம்? வளர்த்த மகளுக்குத் திருமணத்தைச் செய்து கண்குளிரப் பார்க்கவேண்டிய தாங்கள், இந்த வயதில் திருமணத்திற்கு ஆசைப்படுகிறீர்களே? ஒரு பெண்ணைத் தன் சகோதரியாகவோ, மகளாகவோ பார்க்கவே உங்களில் அநேகருக்குத் தெரியாதோ? வாத்தியார் ஐயா! இறந்துபோன என் தந்தையெனவே உங்களை நம்பி நான் இந்த வீட்டுக்கு வந்தேன். மானமாக வாழ எனக்கு எத்துணையோ வழிகள் உண்டு. உலகம் பரந்து கிடந்த போதிலும், மனித இதயம் சூம்பிப்போய் இருந்தால் நாம் என்ன செய்ய முடியும்? ஐயா! என்னை உங்கள் மகளாகவே நினைத்துக் கொள்ளுங்கள்... ...!'' என்று தேம்பினாள்.

அல்லியின் கண்ணாடிக் கன்னங்களில் கண்ணீர்த் திவலைகள் தாரை தாரையாக இறங்கி வந்தன.

ராஜநாயகம் பால்யந்தொட்டுப் பயின்று வளர்த்து வந்த பரதக்கலை தெய்வீகமானது. கடவுளுடைய அருளோடு கூடியது. படிப்பால் உயர்ந்த அக்கலைஞனின் இதயத்தில் மூடியிருந்த இருள் விலகிற்று.

''அல்லி, நீ என் மகள்தான் அம்மா. என்னவோ என் மனம் சரியாக இல்லை. ஏதேதோ பேசிவிட்டேன். கீழே போய் முகம் கழுவி, தலை வாரிக்கொண்டு வா. இன்றே பாடம் ஆரம்பிக்கலாம்!'' என்று கூறியவாறு ராஜ

நாயகம் படிகளில் இறங்கிச் சென்ருர். மேலே வந்த போது இருந்த படபடப்பும், மன உளேச்சலும் குறைந்த வராக, தெளிந்த உள்ளத்துடன் அவர் செல்லுவதைக் கவனித்துவிட்டு அல்லி அவர் பின்னுலேயே கீழே சென்ருள்.

கூடத்தில் விளக்கேற்றப்பட்டிருந்தது. பசும் பொன்னேப் போல் மின்னும் வெண்கலத்தாம்பாளத்தில் நாச்சியாரம்மாள் முல்லே மலர்களேத் தொடுத்த மாலேயைப் பந்து போல் சுருட்டி வைத்திருந்தாள். அரும்புகள் வெடித்து, மெல்லிய மணம் கூடம் முழுவதும் பரவியது.

"நாச்சியாரம்மா, குழந்தைக்குத் தலேவாரிப் பின்னிப் பூச்சூட்டிவிடு. நம்ப ராஜவல்லியின் பட்டுச் சிற்ருடை ஒன்றை எடுத்து அல்லியிடம் கொடு. இன்றைக்குப் பாடம் ஆரம்பம் ஆகிறது. ஹூம், சீக்கிரம்," என்ற வாறு வெற்றிலே சக்கையைத் துப்ப கொல்லேப்புறம் போனுர் ராஜநாயகம்.

நாச்சியாரம்மாள் கொட்டக் கொட்ட கண்களே விழித்து அவரைப் பார்த்துவிட்டு, அல்லியையும் பார்த்தாள். வாத்தியாரின் பேச்சு, அல்லியின் நிதானம் முதலியவற்றைக் கண்டதும், வாத்தியார் பகலில் போட்டிருந்த திட்டம் தலேகீழாகி விட்டது என்பதை உணர்ந்து கொண்டாள்.

அரக்குப் பட்டுக்கட்டி, கண்களுக்கு மை தீட்டி, விற்புருவம் எழுதி, செஞ்சாந்தில் திலகம் வைத்து, மின்னற் கொடிபோல்வந்து. மன்றிலாடும் மணியாம் நடராஜரின் சிலேக்கு முன்னுள் நின்ருள் அல்லி.

மேல் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு தேங்காய் உடைத்துச் சூடம் காட்டினுர் வாத்தியார். சூடத்தை இரு கரங்களிலும் ஏற்றுக் கண்களில் ஒற்றிக் கொண்டு நடராஜரின் முன்பாக வீழ்ந்து வணங்கி

எழுந்தாள் அல்லி. பிறகு வாத்தியாரையும் வணங்கினாள்.

''தக...தைய்ய...தீம்...தக ... தாம்...தைய்ய ...தீம்!'' என்று தாளமும், இசையும் ஒலிக்க அல்லி நாட்டியம் பயில ஆரம்பித்தாள்.

வாயிற் கதவைத்திறந்து கொண்டு நேற்று வந்த அலங்கார வல்லிகள் நால்வர் உள்ளே வந்தனர். உதட்டுச் சாயமும் குதிரை வால் கொண்டையுமாக அவர்கள் வந்து அங்கே நின்றபோது, கோயில் சிற்பத்தின் அருகில் தற்கால நவராத்திரி நடனப் பொம்மைகளைக் கொண்டு வந்து வைத்தாற் போல் இருந்தது.

''என்னங்க வாத்தியார் ஐயா! நீங்க இன்னிக்கு அல்லிக்குப் பாடம் ஆரம்பிக்கப் போறேன்னு எங்களிடம் ஒன்றுமே சொல்ல வில்லையே?'' என்று கேட்டவாறு அல்லியின் மீது தங்கள் பார்வைகளைப் பதித்தனர்.

அல்லி பழைய நாட்டுப்புற அல்லி அல்ல. மாங்குடியிலிருந்து வெள்ளை மனத்துடன் வெளியேறிய அவள் இப்பொழுது நாலும் தெரிந்தவள் ஆகிவிட்டாள். ஓடும் ரெயிலில் அருணாசலத்தின் மீது அவளுக்கு ஏற்பட்ட அனுதாபம் நிலைத்து நின்று விட்டது. அத்துடன் மட்டும் இல்லாமல், அருணாசலத்தின் வாசாலகப் பேச்சிலும், கம்பீரச் சிரிப்பிலும், குளிர்ந்த பார்வையிலும் தன் மனத்தைப் பறிகொடுத்து விட்டாள் அவள். அவன் யாராயிருந்தால் என்ன? எங்கே பிறந்திருந்தால் என்ன? அவனுக்கும் அவளுக்கும் நெடுநாளாகப் பிணைப்பு ஏற்பட்டது போன்ற பிரமையை அவள் இதயம் உணர்த்திக் கொண்டேயிருந்தது.

நடனக் கலையை அவள் ஆவலுடன் பயின்று வந்தாள். இன்னிசையும், சிங்கப்பூரானும் ஒரு விதத்தில் அவளுக்கு

நன்மையே செய்துவிட்டதாக அவள் நினைத்தாள். இன்னுசி மட்டும் அப்படி விரட்டி அடிக்காமல் இருந்தால், அந்த மாங்குடிக் கிராமத்தின் வம்புச் சேற்றுக்குள் அழுந்திக்கிடந்து உழலவேண்டியதுதான். தீமையில் நன்மை ஒளிந்து கிடக்கும் விந்தையை அறிந்து கொண்டாள் அல்லி.

கார்த்திகைத் தீபம் அவளை ஊரை விட்டு விரட்டினலும், தைப் பொங்கலை அவள் வெகு விமரிசையாகத் தன் ஆசிரியருடன் கொண்டாடினுள். ராஜநாயகம் தம் மகளைப் போலவே நினைத்து அல்லியிடம் அன்பு செலுத்தினுர். நாச்சியாரம்மாவுக்கு ராஜநாயகம் இப்படித் திடீரென்று மாறிப்போனது வியப்பாகத்தான் இருந்தது. பெண்களைப் பார்த்துச் சிரித்துக் கேலி செய்தவர் முற்றிலும் புதிய தோரணையுடன் நடந்து கொண்டார்.

அன்று கன்னிப் பொங்கல். திரள் திரளாக மக்கள் சென்னையைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பியிருந்தனர், கட்டுச்சோறும் புதுச்சேலையும், கொண்டையில் மருக்கொழுந்துக் கதம்பத்துடன் பெண்களும், புது வேட்டியும் சட்டையுமாக ஆண்களும் கடற்கரை என்றும், காட்சி சாலை என்றும் சுற்றிச் சுற்றி வந்தனர்.

அல்லி, மாடி அறை ஜன்னல்அருகில் நின்று தெருவிலே செல்பவரைக் கவனித்தவாறு இருந்தாள். வாத்தியார் ஐயா யாரோ ஒரு பணக்காரப் பெண்ணுக்கு நாட்டியம் பயில்விக்க வெளியே போயிருந்தார். நாச்சியாரம்மாள் தன் வழக்கப்படி அண்டை வாசலில் பேசப் போய் விட்டாள்.

தொலைவில் தெரியும் மாளிகைகளும், எழும்பூர் ரெயில் நிலையமும், தூங்குமூஞ்சி மரங்களும் மாலைச் சூரியனின் மஞ்சள் ஒளியில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தன.

திருமாலின் சக்கரமான ஆதவன் சுழன்று மலை வாச லுக்குப் போயிருந்தான். அல்லி தன்னை மறந்த நிலையில் நின்றிருந்தாள்.

''அல்லி!''

தேனும், பாகும் கலந்தாற்போல் இனிப்பாக அந்தக் குரல் காற்றில் மிதந்து வந்தது.

அலை அலையாக வாரிவிடப்பட்ட கிராப்புத் தலையும், பள பளக்கும் 'சிலாக்' சட்டையுமாக அருணாசலம் வாயிற் படியைத் தாங்கியவாறு நின்றிருந்தான்.

குறுகுறுத்த தன் விழிகளை அவன்பால் திருப்பி, புருவங்களை 'என்ன?' என்ற பாவனையால் அல்லி கேட்டாள்.

''இங்கே வாயேன், சொல்கிறேன். அது ஒரு பெரிய ரகசியம்!'' என்று சிரித்தவாறு கூறினான் அருணாசலம்.

அல்லி அவனுக்கு அருகில் வந்து நின்றாள். பிறகு ஆவ லுடன், ''என்ன அது?'' என்று கேட்டாள்.

''ஊரெல்லாம் ஒரே மக்கள் கூட்டமாக இருக்கிறது. அங்கே, இங்கே என்று வேடிக்கை பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறார்கள். நீயும், நானும் தனிமையில் பேச இங்கு சந்தர்ப்பமே இல்லையே? வாயேன். இப்படி வெளியே போய்விட்டு வரலாம்'' என்று அழைத்தான் அவன்.

''ஐயா வீட்டிலே இல்லையே?'' என்றாள் அவள்.

''நீ என்ன இன்னும் பச்சைக் குழந்தையா? உன்னைப் பற்றி ஒரு தீர்மானத்துக்கு வர உனக்கு வயசாக வில்லையா? கிளம்பு அல்லி; ஹூம் சீக்கிரம்!'' என்று அவசரப் படுத்தினான் அவன்.

ஆமாம்; அல்லிக்கும் வெளியே சுதந்திரமாகப் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று ஆசையாக இருந்தது. ஐயாவுக்குப் பழக்கமான மனிதர் அருணாசலம். ஐயா ஒன்றும் சொல்ல மாட்டார் என்ற துணிச்சலுடன், அல்லி வெளியே கிளம்பி விட்டாள்.

தெருக்கோடியை அடைந்ததும் அங்கு விரைந்து செல்லும் 'டாக்ஸி'யைக் கைதட்டி அழைத்தான் அருணாசலம். இருவரும் ஏறி அமர்ந்தபின் பள பளவென்று நீல நிறத்தில் அன்னப் படகென அது தரையில் ஓடுவது தெரியாமல் விரைந்தது. ஒரே வியப்பில் ஆழ்ந்து போன அல்லி சென்னை நகரத்தின் தெருக்களையே பார்த்து வந்தாள். அவளுக்கு வெகு அருகில் மிகமிக நெருக்கமாக அருணாசலம் உட்கார்ந்திருந்தது அவளுடைய மனசுக்குத் தெம்பாக இருந்தது. அவன் ஒருவனே அவளுக்குஎல்லா மாக விளங்கினான். ஆயிரம் உறவினர்கள் ஏற்படுத்த முடியாத ஒரு நிறைவை அவன் ஒருவன் அவளது உள்ளத்தில் ஏற்படுத்தினான். நாட்டியம் என்ற பெயரில் ஒருமங்கை இடுப்பை வளைக்க முடியாமல், கையை மட்டும் ஒயிலாக அசைத்தபடி நிற்கும் கோலத்தை சுவரொட்டி சினிமா விளம்பரத்தில் பார்த்த அவள் 'களுக்'கென்று சிரித்தாள்.

''சினிமாவில் நாட்டியம் என்றால் இப்படித்தான் இருக்குமா?'' என்று கேட்டவாறு அல்லி அவனைத்திரும்பிப் பார்த்தாள்.

''பெரும்பாலான படங்களில் நாட்டியம் இப்படித்தான் இருக்கும். உயர்ந்த நடனத்தை மக்கள் ரசிக்க மாட்டார்கள் என்பது அவர்கள் எண்ணம். ஒரு வேளை உன்னைப் போல ஒரு நாட்டியக்காரி அவர்களுக்கு அகப் படவில்லையோ என்னவோ?'' கையில் புகைந்து கொண்

டிருந்த சிகரெட்டை உதட்டிலே சாய்த்துப் பொருத்திய வாறு அருணாசலம் கூறினான்.

''என்னைப் போல ஒரு நாட்டியக்காரியா? அப்படி நான் அந்தக் கலையில் கரை கண்டு விட்டேனா, என்ன? இன்னும் நான் படிக்க வேண்டியது எவ்வளவோ உண்டே?''

குழந்தைபோல தற் பெருமை எதுவும் இல்லாமல்அடக்க மாகப் பேசினாள் அல்லி.

அருணாசலம் தன் முன் சுழன்று செல்லும் சுருளைக் கவனித்தவாறு குறுநகை புரிந்தான்.

''உனக்குத் தெரிந்தவரை போதும். தாளத்தைப் பற்றி அறியாதவர்கள் சினிமாவில் நாட்டியம் ஆடவந்து விடு கிறார்கள். உனக்கென்ன? அன்று ஒரு நாள வெள்ளி யன்று ஆடினாயே, 'எதைக் கண்டு நீ இச்சை கொண் டாய்' என்கிற பாடலுக்கு! பாவம் அப்படியே ததும்பி நின்றதே உன் சிரிப்பிலும் கண் வீச்சிலும்! அது போதுமே!''

அல்லி திகைப்புடன் அவனைப் பார்த்துக்கொண்டே, 'நீங்கள் எவ்வளவு படித்திருக்கிறீர்கள்? உங்கள் சொந்த ஊர் எது? உங்களுடைய விருத்தாந்தம் தான் என்ன?'' என்று வினவினாள்.

'ஊரென்ன, பெயரென்ன, சம்பாத்தியமென்ன என்று ஆரம்பித்து விட்டாயே? ஊரும் பெயரும் தெரிந்தால் உன் காதலுக்கே கத்தரிக்கோல்போட்டு விடுவாயோ, சினிமா தணிக்கையாளர் மாதிரி?'' என்று கேட்டு கட கட வென்று சிரித்தான் அவன்.

''ஏதேது, சினிமா ஞானம் அபாரமாக இருக்கிறதே! கேட்ட கேள்விக்குப் பதிலைக் காணோம்!'' என்று சிணுங்

கிக் கொண்டே முகத்தை 'உர்' ரென்று வைத்துக் கொண்டு ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிப் பார்த்தாள்.

அருணசலம் சட்டைப் பையிலிருந்து சிகரெட்பெட்டியை வெளியே எடுத்தான். 'லைட்'டரால் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தவாறு ''நான் கொஞ்சம் பசை உள்ளவன் தான். ஒவ்வொரு சமயம் திடீரென்று வீட்டிலே சொல் லாமல் பட்டணம் வந்து விடுவேன்'' என்றான்.

''ஏன் அப்படி?''

''நீ ஏன் திடுதிப்பென்று வீட்டை விட்டுக் கிளம்பி ணயாய்? உனக்குத் தெரியுமா, இப்படி நீ திடீரென்று பட்டிணப்போய் காரில் சவாரிசெய்து கொண்டே என்னுடையபூர்வ கதையைக் கேட்கப்போகிறாய் என்று. உலகத்திலே அப்படி அப்படித்தான் சில நிகழ்ச்சிகள் நடக்கின்றன. மதுரைப் பக்கத்துப் பசுமலைக்காரனுக்கும் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த மாங்குடிப் பெண்ணுக் கும் நான்முகன் முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறானே, நீயும் நானும் பின்னே எப்படித்தான் சந்தித்துக்கொள் கிறதாய்?...''

அல்லிக்கு அவனைப் புரியவில்லை. பசை உள்ள குடும் பத்து இளைஞன் பிரயாணச் சீட்டு இல்லாமல், ரெயிலில் பலர் முன்னிலையில் அவமானப்படுவது அவளுக்கு வேதனையாகவும், விசித்திரமாகவும் இருந்தது.

''பணம் இருக்கிற நீங்கள், இல்லாதவர்களைப்போல ஏன் வேஷம் போட்டீர்களாம்? அன்று ரெயிலில் டிக்கட் பரிசோதகர் முன்பு பல்லை இளித்து உறுமினீர்களே? அபாரமாக இருந்தது.''

அல்லி பாதிகேலியாகவும் பாதிவருத்தமாகவும் பேசினாள் அவள் முகத்திலே வேதனை நிழலாடியது. மையுண்ட கருவிழிகளின் ஓரத்திலே முத்துப்போல் கண்ணீர்த்

துளிகள் தேங்கி நின்றன. உதடுகள் சொல்லொண்ணுத் துயரத்தால் மெல்ல அசைந்தன.

அவன் அவளைக் கவனித்தான்.

''அல்லி, ஏன் கலங்குகிருய்? ஓரளவு வீட்டுக்கு அடங்காத பிள்ளை நான். சேற்றிலும் சகதியிலும் பாடுபடும் தந்தைக்கு உதவியாக இராமல் ஊரைவிட்டு ஊர் ஓடி வருகிறவன்தான் வளர்ந்து பலன் தரவேண்டிய விவசாயக் குடும்பங்களில் எங்களுடையதும் ஒன்று. என் பெற்ரேர் என்னை நம்பித்தான் இருக்கிருர்கள். ஆனல் ஏதோ ஒரு பலஹீனம், நிலையாமை, பட்டிணத்து நாகரீகத்திலே ஏற்பட்டிருக்கிற பிரமை எல்லாமாகச் சேர்ந்து என்னை இப்படி இயங்க வைக்கின்றன. என் குற்றங்கள் எனக்குப் புரிகின்றன. அவைகளை வெல்லத்தான் எனக்குத் துணிச்சல் இல்லை. திறமை இல்லை.''

அல்லி கண் மை கரைய அழுதுவிட்டாள். சற்று முன் ரோஜா மலரெனச் சிவந்திருந்த அவள் முகம் அதன் மையத்தைப்போலச் சிறிது வெளுத்து விட்டது.

அருணசலத்திடம் ஒரு குணம் உண்டு. எதையுமே நினைத்துச் செய்து முடிக்கும் ஆற்றலும், செய்யமுடியா விட்டால் மறந்துபோகும் குணமும் அவனுக்கு உண்டு.

அருணசலம் தன் ஊரைப்பற்றியும், பெற்ருேரைப் பற்றியும் மறந்துவிட்டு, தனக்கே உரித்தான குறுநகையுடன் சோகமே உருவாக உட்கார்ந்திருக்கும் அல்லியைப் பார்த்தான். அவன் பார்வையின் தன்மையைத் தாள முடியாமல், ''ஹூக்கும், போங்கள்! எது எப்படி வேணுமானுலும் இருக்கட்டும். நீங்கள் சொல்கிற கெட்ட குணங்கள் எல்லாவற்றையும் தூக்கி மூலையில் எறிந்து விட்டு நேர்மையாக நடக்க வேண்டும். ஒருவரையும் ஏமாற்றக் கூடாது. என்ன, தெரிந்ததா?'' என்று அவன் முகத்துக்கு நேராக மருதோன்றி இட்டிருந்த தன் அழகிய கையை ஆட்டிப் பேசினுள்.

''தெரிந்தது, தெரிந்தது, இப்பொழுது நாம் எங்கே போகிறோம், தெரியுமா?''

''எனக்கென்ன தெரியும்?'' என்று உதட்டைக் குவித்த வாறு கூறினாள் அல்லி.

காரோட்டியின் பக்கம் தன் தலையைச் சாய்த்து அவன் காதருகில் ஏதோ கிசுகிசுத்தான் அருணாசலம். கார் 'விர்' ரென பறந்துவந்து அடையாற்றில் ஒரு பெரிய மாளிகை யின் முன்பாக நின்றது. வாயிற்கதவைத் திறந்து விட்டு வணங்கினான் வாயிற் காப்போன்.

'அழகி படத் தயாரிப்பாளர்கள்' என்று கொட்டை எழுத்தில் இருப்பதை வெகு சிரமத்துடன் கூட்டிப் படித்தாள் அல்லி. அவள் எழுத்துப் பயின்றதும் ராஜ நாயகத்திடம்தான்.

''என்ன இது? எங்கே போகிறோம் நாம்'' என்று மெல்லக் கேட்டு அவனைப் பார்த்தாள் அல்லி.

''ஒரு படக் கம்பெனியின் முதலாளியிடம் உன்னைப் பற்றி நிறையக் கூறி இருந்தேன் அல்லி. அவரைப் பார்த்து உன்னை ஒரு படத்தில் நடிக்கச் சேர்க்கத்தான் அழைத்து வந்தேன்.''

அல்லியின் திகைப்பு அடங்குவதற்குள், நெடிதுயர்ந்து பருத்த பிரமுகர் ஒருவர் தம் தங்கப் பல் தெரிய பெரிய ஹாஸ்ய நிகழ்ச்சியைக் கண்டவர் போல் சிரித்து அவர்களை வரவேற்றார்.

உள்ளமும் உடலும் பதைக்க, உள்ளே செல்வதா வேண்டாமா என்று திகைத்தவாறு, அல்லி காரின் கதவைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

# தென் மலைச் சந்தனம்

ஆடும் தீபம்!

சிந்தனையைத் தூண்டிவிடும் சிறப்புப்பெயர். ஈராறு உள்ளங்களிலும் பெருகிவரும் இன்பக்கற்பனைகள் ஒருமிக்கச் சங்கமிக்கும் எழிலாழி.

வாழ்க்கைத் தீபத்திலே கற்புநெறி காத்து, அன்பைப் பெருக்கி, பண்பை வளர்த்து, இல்லறத் தவத்திலே சிறப்புற வாழ்ந்து, எழில்மக்களைஈன்று தன்னையும் தன் குடும்பத்துக்காக அர்ப்பணித்துக் கொள்ளும் சந்தனம்,பெண்; தேய்வில் மணம்பெறும் தியாகப்பிறவி. துன்பம் அவளுக்குத் துணைச்சக்தி. இல்லற எல்லைக் கோட்டினுள் அடங்குகையில், பெண்மையின் தியாகம் நற்பயனுறுகிறது. இல்லறத்தின் புறத்தே நோக்குங்கால், அவள்தெருவில் எறியப்பட்ட மாணிக்கம்! உடைமையில்லாத ஒரு பொருளைக் கைப்பற்றி உரிமையாக்கிக்கொள்வதும் அவசியமில்லையென்றால், அதை உமிழ்ந்து விடுவதும், இன்றையச் சமூகத்தில் சிலருக்குச் சர்வ சாதாரணமான காரியமாகிவிட்டது. ஆனால், சந்தனத்தின் தேய்வைப் பொருட்படுத்தாமல், மணத்தினை மட்டும் விரும்புகிறது உல்லாச உலகம்!

நீள் விசும்பும் நீலக்கடலும் இணையும் கோட்டினைக் குறிக்கோளாக்கி ஒருசுடர் பிரயாணம்செய்ய ஆரம்பித்து விட்டது. அதுவே அல்லிச் சுடர், தமிழ் மணம்தந்த சீதனச்சொத்து.

பரிதிக் கோளமாம் பேரொளியுடன் இரண்டறக் கலந்து இன்பம் துய்க்க விரும்பும் அச்சுடருக்கு இதோ, என்னுலியன்ற பணி.

எழுதுவது எப்படி எழுத்தாளரின் உரிமையோ, அதுபோல் ரசிப்பது வாசக நேயர்களின் உரிமை. ரசிகர்களும் இலக்கியமும், ஒன்று சேரும்பொழுது, ஆசிரியரோ, ஆசிரியையோ விலகி நின்றுதான் பார்க்கவேண்டும்.

கிருஷ்ணு

பொறி நான்கு:

# கண் கண்டதெல்லாம் மாயைதானே?

காரின் கதவைப் பிடித்துக்கொண்டு, தயக்கம் காட்டிய அல்லியைச் சற்று வியப்புடன் ஏறிட்டு நோக்கிய அருணு சலம் ''வா, அல்லி. ஏன் அங்கேயே நின்று விட்டாய்? சும்மா வா.'' என்ருன்.

தானகப் போகாவிட்டால் கையைப் பிடித்து அழைத்துப் போய்விடுவான் போல இருந்தது. பேச்சில் காட்டிய துடிப்பும் வேகமும் அப்படியிருந்தன.

மெல்லடி பெயர்த்து ஒவ்வொரு படியாக ஏறிய அல்லி, அருணுசலத்தைப் பின்தொடர்ந்து பிரம்மாண்டமான அந்தப் பங்களாவினுள் நுழைந்தாள். வழவழ வென்ற 'மொஸெய்க்' தள வரிசைகளில் கால்கள் சிரமமில்லாமல் நீந்துவது போலிருந்தன.

விஸ்தாரமான ஹால்ஒன்றினுள் நுழைந்த பரமானந்தம் உடல் புதையும் வண்ணம் அமுங்கும் சோபா ஒன்றில் 'தொப்'பென உட்கார்ந்தபடி ''உட்காரம்மா அல்லி; நீயும் உட்கார் அருணுசலம்'' என்ருர்.

'ஏர் கண்டிஷன்' செய்யப்பட்டிருந்த அவ்வறையின் சிலிர்ப்புணர்விஞலோ, அல்லது உள்ளத்துறையும் அச்சத்தின் உந்தலிஞலோ அல்லியின் உடலில் லேசாக ஒரு நடுக்கம்!... கால் பெருவிரலில் பதித்த பார்வையை

மீட்க அவள் ஏனோ விரும்பவில்லை. மௌனச் சிலையாய்—மொழியற்ற வடிவமாய் சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

அவளையே சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்த அவர், ''ஏன் அம்மா! இப்படி ஒரேயடியாய் வெட்கப்படுகிறாயே?'' என்றுகூறி அருணாசலத்தின் பக்கம் முகத்தைத் திருப்பி ''என்னப்பா அருணாசலம்... ... ...?'' என்று முடித்தார்.

அவர் பார்வையின் கருத்தை உள்வாங்கிக்கொண்ட அருணாசலம் ''புதிது பாருங்கள், கூச்சமாயிருப்பது சகஜம்தானே?... ... ... அதெல்லாம் கவலைப்படாதீங்க... ... காலில் சலங்கையைக கட்டிக்கொண்டால் போதும். அப்புறம் நீங்களே ஆச்சரியப்படுவீங்க...... என்ன அல்லி அப்படித்தானே...?'' என்றான்.

அல்லி மேலும் தலையைக் குனிந்து கொண்டாள். ''ஆல்ரைட்! ஆல்ரைட்! பார்க்கலாம், என்றார் பட முதலாளி பரமானந்தம்.

அல்லியின் இதழ்கள் மென்மையாகப் பிரிந்து இள நகையைச் சிந்தின. ஓரக்கண்ணால் அவளதுமுக பாவத்தைகவனித்த பரமானந்தம் திருப்தியடைந்தார்.

'சரி; எதற்கும் நாளைகாலை ஸ்டுடியோவிற்குவாருங்கள். நடன டைரக்டர் நடராஜன் ஆட்டத்தைக் கவனிக்கட்டும்; திருப்திகரமாக இருந்தால் அடுத்த வாரம் ரிலீசாகப் போகும் 'குழந்தையே குடும்பத்தின் விளக்கு' படத்திலேயே ஒரு சந்தர்ப்பம் கொடுக்கலாம்!''

அன்று அல்லி கலைக்கூடத்திற்குத் திரும்புகையில் இரவு மணி எட்டடித்துவிட்டது. அடையாற்றிலிருந்து கிளம்பிய அருணாசலம் அல்லியையும் அழைத்துக்கொண்டு சென்னையின் வழுவழுப்பான தார்ப்பாதைகளில் உல்லாசமாக நடந்தான்.

மறி திரைகடலின் வெண் மணலில் கால்கள் தோய நடந்த இருவரும் நீரும் நிலவும் கூடும் எல்லேகண்டனர். வெண்நுரை மலர்கள் பாதங்களை வருடிச் செல்லும் பொழுது அந்த ஸ்பரிசம் நெஞ்சத் துயரை இதமாக நீக்குவது போல இருந்தது.

அல்லி நினைத்தாள்:

'...சுண்டக் காய்ச்சிய பாலில் கொம்புத்தேன் கலந்தாற் போன்ற சுவையோடு பழகிய தோழி செந்தாமரை.

மலர்ந்து குலுங்கும் மலர்த்தோட்டத்துக்கு அன்புக் காவலாக நின்ற வெண்டியப்ப அண்ணன்.

கருத்தைக் கன்னியரிடத்தில் சிதற விட்டுத் தன்னைத் தானே மாசுபடுத்திக்கொள்ளும் சுய துரோகி இன்னசி.

திருவின் நோக்கினுல் பண்பு பெருமல், எவரும் தன்னிகரில்லையென்று இறுமாந்து திரியும் சிங்கப்பூர் சாத்தையா.

நட்பு முறிய, அன்பு ஒடிய, நள்ளிரவில் வீட்டை விட்டுப் புறப்பட்டு இரு வேங்கைகளினடையே சிக்கி மீண்டு வந்த தான், முற்றிலும் போக்கிரியாய்—பொய்யனுய்த் தோன்றிய அருணசலத்தின் சொல்லுக்கு உட்பட்டு நடப்பதின் மர்மமென்ன?

இன்னசியை நினைத்தால் பீதி; சாத்தையாவை எண்ணினலோ பயம்! ஏறக்குறைய அவர்களை ஒத்தவன் தான் இவனும். சற்று நாகரீகமானவன் என்று வேண்டுமானுல் கூறலாமேயொழிய மற்றபடி அவர்களுக்கும் இவனுக்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா?......அரும்பு மீசையும், சுருண்ட கேசமும் வெளிப் பார்வைக்கு அழகுதான். கண்களின் போக்கிரித்தனத்தைக்கூட அவை கவர்ச்சிகரமாகவன்ருே மாற்றிவிட்டன!

அந்த அழகில் நான் மயங்கிவிட்டேனா? இல்லை... ... ... இல்லை. வெளியழகில் மட்டும் நான் மயங்கவில்லை; அருணாசலத்துக்கும் இவர்களுக்கும் ஒரு வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

மற்றவர்கள் ஊருக்கு உயர்ந்தவர்களாக வேஷம், உள்ளுக்குள் உலுத்தர்களாக —உளுத்தவர்களாக வாழ்ந்து வந்தார்கள்.

'என்னிடம் பணமிருந்தால் நான் டிக்கெட்டேஎடுத்திருப்பேனே?' என்றான் அருணாசலம். அன்றைய நிலையை கூசாமல் தெள்ளத் தெளியக் காட்டிக்கொண்டான். உண்மையில் வாழ்க்கை வசதியுள்ளவர் என்பது இப்பொழுதுதானே தெரிந்தது?...

பொய்யிலும் ஓர் உண்மை!—அதுதானே அவளை முதன் முதலில் பணப்பையை அவிழ்க்கச் செய்தது? சுருக்குப் பையின் முடிச்சை அருணாசலத்துக்காக அவிழ்க்கையில் கூடவே அவளுடைய இதயமும் அவளையறியாமலேயே திறந்துகொண்டு விட்டதோ? இல்லாவிட்டால் இரு போக்கிரிகளுக்கும்அபவாதப் புயலுக்கும் தப்பிவந்தவள், தனக்கு முற்றிலும்புதியதான சென்னையில் ஓர் ஆடவனை-அதுவும் வழியில் சந்தித்தவனை எப்படி நம்பமுடியும்? நம்புவதோடு மட்டுமா? உள்ளம் ஏன் இப்படிக் கரைந்து அவனுக்காக உருகுகிறது...?

காலின் அடியில் மண் கரைந்தது. அதே வேகத்தில் முழங்காலுக்கு மேல் உவர் நீர் ஏறியது.

"'என்ன அல்லி, நெனப்பு எல்லாம் எங்கே கிடக்கு?'"

அருணாசலம் இரு கரங்களினாலும் அவளைப்பிடித்து இழுத்தான் அலைக்குப் போட்டியாக.

உடலைச் சிலுப்பிக் கொண்டாள் அல்லி. அருணசலத்தை நோக்கி அவள் வீசிய புன்னகை, தொடுவானில் அப்பொழுதுதான் கிளம்ப ஆரம்பித்திருந்த தண்கதிரைப் போல் குளிர்ந்திருந்தது. "நேரமாகி விட்டது; போகலாமா?" என்றாள் அல்லி.

"ஓ.போகலாம், அல்லி."

அருணசலம் புறப்பட்டுவிட்டான். காரில் செல்கையில் "ஏன் அல்லி, ஒரு மாதிரியாய் இருக்கிறே? உனக்கு நடிப்பதில் திருப்திதானே" என்று கேட்ட அவனுக்குஒரு சிறு தலையசைப்பின்மூலம் விடையிறுத்த அல்லியின் உள்ளம் அவனை மீறியதொரு நிலையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. உணர்ச்சியின் எல்லையை அடையுங் கால் அங்கு சொல்லுக்கு இடமேது? நெருங்கி வருவது இன்பமோ துன்பமோ, எதுவென்றே உணராத நிலையில், மௌனமே அவளுக்குத் துணையாக நின்றது.

கலைக்கூடத்தின் வாயிலில் கார் நின்றதும்தான் இரவின் திரை உலகை மூடிவிட்டதை உணர்ந்தாள் அல்லி. ஏதோ பிழை செய்துவிட்டாற் போன்றதொரு உள்கூச்சத்துடன் படியேறினாள் அவள். கூடத்து வாசற்படியருகிலேயே வெற்றிலைப் பெட்டி சகிதமாக நாற்காலியில் உட்கார்ந்திருந்த ராஜநாயகம் அவளுடைய தவிப்பைக் கண்டதும் ஒரு புன்னகை பூத்தார். பொருள் பொதிந்த அப் புன்னகையின் விளக்கத்தை உணர்ந்துகொண்ட அல்லிக்கு, அவர் தன்னைக் கடிந்து கொண்டிருந்தால்கூட அவ்வளவு வேதனை ஏற்பட்டிராது என்றே தோன்றியது.

அல்லி மாடிப்படிகளில் ஏறுகையில் மேலேயிருந்து, காமினி, திலோத்தமா, நீலா, கல்யாணி ஆக நால்வரும் இறங்கி வந்து கொண்டிருந்தனர். அன்று கன்றுப் பொங்கலல்லவா? மாலையில் கலைக்கூடத்தில் விசேஷ

நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார் ராஜ நாயகம். தீப வரிசைகள் சூழ ஆனந்த நடனமிடும் நிருத்தியக் கடவுளின் முன்பு அவரவர்கள் கற்ற கலையைக் காணிக்கையாக்கி மகிழ்ந்து குருவின் ஆசி பெற்றுப்போக வந்திருந்தார்கள் அவர்கள். ராஜ நாயகம் கூடச் சொல்லியிருந்தாரே, 'அல்லி, இன்று மாலையில் உன் ஆட்டம் பிரமாதமாக இருக்கவேண்டு மென்று?' —அது அல்லிக்கு இப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. சந்திரகாந்தக்கல் பட்டவுடன் இரும்பு ஒளிபெற்று உருகுவது போல் அருணாசலத்துட னிருக்கும் அவளும் அவனது இயல்போடு ஒன்றி விடு கிறாளே!.. உலகமே மறந்து விடுகிறதா என்ன...?... ஆசிரியரின் உத்தரவு உலகிற்குள் அடங்கியதுதானே? அதையும் சுலபமாக மறந்து அவனோடு கிளம்பி விட்டாள் போலும்!

நீலாவை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கண்சிமிட்டிய படியே "ஏன் அல்லி, நீ இப்பொழுது தான் வரு கிறாயா"—என்றாள் காமினி.

"அவளுக்கென்னடியம்மா; நம்மைப்போலவா அவள்?" இது நீலா.

தொடர்ந்து ஜலதரங்கத்தை துரிதகதியில் தட்டி விட்டது போல் நால்வரும் கூட்டுச் சிரிப்புச் சிரித்தனர். சிரிப்பா அது?

அல்லியின் ரத்த நாளங்கள் சுண்டின. 'ஐயோ உலகமே! எந்தப் பக்கம் திரும்பினாலும் உனக்குத் தப்புக் கணக்குத்தான் போடத் தெரியுமோ? உண்மையை உணர உனக்கு சக்தியற்றுப் போகக் கடவது என்று கண்ணகி சபித்தாளா? கற்புக்கரசியின் வாக்கு பொய்க்க லாகாதென்று நீ வாளாவிருக்கின்றாயா?..

வான் நின்று வீழ்ந்த உயிர்ச் சுடர் போலத் துடி துடித்தாள் அல்லி. கட்டிலில் வீழ்ந்த அவள், பெருகிய கண்ணீரைத் தாங்கி, அவள் துயரில் பங்கு கொண்டது அந்த வெண் உறை பொதிந்த தலையணை.

சிஷ்யைகள் விடை பெற்றுப் போனபின், ராஜநாயகம் அருணாசலத்தை நோக்கினார்.

''என்னப்பா அருணாசலம், 'அக்கா மகளுடன்' எங்கெல்லாம் சுற்றிவிட்டு வருகிறாய்? உட்கார்ந்தே பதில் சொல்; பரவாயில்லை,'' என்று தன் எதிரில் இருந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டினார் ராஜநாயகம்.

மௌனச் சாமிபோல் அதில் உட்கார்ந்த அருணாசலம் இரண்டொரு வினாடி தன்னை நிதானப்படுத்திக் கொண்டான். அந்த அவகாசம் அவனது பழைய கில்லாடித்தனத்தை மீட்டு விட்டது. தன் மானத்தை அடக்கி அதன் மேல் இறுமாப்பைப் போர்த்திக் கொண்டான் அவன். கண்களிலே பணிவற்ற போக்கிரித் தனம் கூத்தாடியது. பேர்பெற்ற வில்லன் போல் ராஜநாயகத்தை நிமிர்ந்து பார்த்தான்.

''முதலாளி வீட்டுக்குக் கூட்டிப் போனேன்!''

'நீ யார் அதைக் கேட்பதற்கு?' என்ற வினா அதில் ஒலித்தது.

''முதலாளி வீட்டுக்கா? எந்த முதலாளி வீட்டுக்கு?''

''அழகி படக்கம்பெனிக்கு; பரமானந்தம் வீட்டுக்கு?''

'எதற்கோ?'—ஒருமாதிரியாகக் கேட்டார் ராஜநாயகம். அருணாசலத்தை அல்லிபுரிந்துகொண்டதை விட அதிகம் புரிந்து கொண்டவரல்லவா அவர்? பாம்பின்காலைப் பாம்பறியுமே!

ரத்தம் வேகவிசையில் முகத்தில் ஏறஉதடுகள் துடித்தன; ''எதற்குப் போவார்கள்? கலையைக் கையில்வைத்துக் கொண்டு, பின் இரும்புக் கடைக்கா போவார்கள்?''

ராஜநாயகம் வாய்விட்டுச் சிரித்தார்.

''இரும்பு கரும்பொன். பொன்னைவிடச் சிறந்தது தம்பி! கலை என்றால் என்னவென்று தெரியுமா உனக்கு? பொன்னின் பகட்டு இருந்தாலும் இரும்பைவிட உறுதி யானதாக அது இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதில் தெய்வீகம் இருக்கும். கடை தேடிப் போய் விலை கூறும் சரக்கல்ல கலை. அது ஈசுவர உபாசனைக்குரியது; மலரின் மென்மையும் அதற்கு உண்டு!... ...''

''மண்ணாங்கட்டி!'' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான் அருணாசலம்.

ராஜநாயகம் அதைப் பொருட்படுத்தாமல் மேலும் தொடர்ந்தார்: ''நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள். அல்லி என் மகள்! அனுபவமில்லாத அவள் எளிதில் உன்னிடத்தில் மயங்கியது பெரிதல்ல; அவளைத் திருத்த எனக்கு வழி தெரியும். நான் உனக்குச் சொல்லப் போவது என்னவென்றால்—சுருக்கமாகவே சொல்லி விடுகிறேன்—அல்லியின் வழிக்கு இனி நீ வரக்கூடாது... இன்று போகட்டும், இனி இதுமாதிரி என் உத்தர வன்னியில் அவளைக்கூட்டிக்கொண்டு போனால் அப்புறம் நான் ரொம்பவும் பொல்லாதவனாக இருப்பேன் ஆமாம்''!

சற்றுக் கோபமாகவே பேசினார் ராஜநாயகம். சத்தம் போட்டுப் பேசினால் தம் உணர்ச்சியை அருணாசலம் எளிதில் புரிந்து கொள்வான் என்று நினைத்தாரோ என்னமோ?—குரல் ஓங்கிப் பேசினார்.

அருணாசலம் இதைக் கேட்டதும் பயம் நிரம்பிய சிரிப்புச் சிரித்தான்.

''நானாக அல்லியைக் கூட்டிக்கிட்டுப் போயிருக்கிற தாகத் தானே நீங்க நினைக்கறீங்க?''

''அவளாக வரமாட்டாளே?''

''அது எனக்குத் தெரியாது. ஆனா, படத்திலே நடிக்க அவளுக்கு விருப்பம். அது எனக்குத் தெரியும். பரமானந் தத்திடமும் ஒப்புக்கொண்டு விட்டாள். நாளைக்காலையில் அவர் ஸ்டுடியோவிற்கு வரச்சொல்லியிருக்கார்...!''

''ஆ!...''

''அதுமட்டுமா? அல்லியை நானே கட்டிக்கிடவும் போறேன்!''

இப்படிச் சொல்லி விட்டுப் பெருமிதத்துடன் இருதோள் களையும் குலுக்கி விட்டுக்கொண்டான் அருணாசலம்.

ராஜநாயகத்துக்குத் திகைப்பும் அருவருப்பும், ஒருங்கே ஏற்பட்டன. தான் குற்றம் புரிகையில் தன்னோடு சேர்ந்து பிறரும் குற்றமிழைக்கையில் அது வெகு நியாயமாகவே தோன்றுகின்றது. தோழமை பூண்டு திட்டம் வகுத்து சேர்ந்தே பாதகங்கள் செய்வதில் சலிப்பில்லை. தான் திருந்திவிட்டால் தான் செய்த குற்றங்கள் பூதாகாரமாகத் தோற்றமளிப்பதோடு, நேற்றுவரையிலும் தோழனாக இருந்தவனின் கயமைத் தனமும், துடைத்த பளிங்கு பிரதிபலிப்பதுபோல் நன்றாகத் தெரிகின்றன.

பெண்ணைப் பெண்ணாகவே பாவிக்க அவருக்குக் கற்றுக் கொடுத்தவள் அல்லி. அவளது தலை அவர் பாதத்தில் தோய்ந்த அதே வேளையில் அதலபாதாளத்தில் உழன்று கொண்டிருந்த அவரது உள்ளமும் உயர்ந்துவிட்டது. உண்மையில் திருந்தியவன் ஒரு நாளும் தவறுவதில்லை.

தனது சென்ற காலத்திற்காகவும், அருணாசலத்தின் தற்போதைய போக்கிற்காகவும் ராஜநாயகத்தின் உள்

ளம் கண்ணீர் வடித்தது. ஒரு சந்தேகம்! இந்தப் பயல் எந்த ஆதாரத்தைக்கொண்டு அல்லியைத் தான் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறேன் என்று ஜம்பம் பேசுகின்றான்? ஒருவேளை அவளே உடன் பட்டிருப்பாளோ? இருவரும் ஒரே ரயிலில் இறங்கினார்களே?...'

"அல்லி சம்மதித்து விட்டாளா?" என்று மட்டுமே அழுத்தமாகக் கேட்டார் ராஜநாயகம்.

"சம்மதிப்பாள் என்ற நம்பிக்கை எனக்குண்டு!" அதே அழுத்தத்துடன் பதில் வந்தது.

"சரி, நானே கேட்டுக்கொள்கிறேன். இனி நீ போகலாம்." என்று கடுமையாக மொழிந்த ராஜநாயகம் மேலும் அங்கு உட்கார்ந்திருக்க விருப்பமற்றவராக எழுந்தார்.

"நான் வருகிறேன், வாத்தியாரே! நாளைக் காலை பத்தரை மணிக்கு வண்டியுடன் வருவேன், அல்லியைத் தயாராக இருக்கச் சொல்லுங்கள்," என்று மிடுக்குடன் கூறிய அருணாசலம் 'சரக் சரக்' என பாதரட்சைகள் ஒலிக்க படிகளில் இறங்கித் தெருவின் ஜனத்திரளில் மறைந்தான்.

வெற்றிலைப் பெட்டியை சடக்கென்று அறைந்து மூடினார் ராஜநாயகம். அருணாசலத்தின் பேச்சோ அவர் இதயத்தில் அறைந்த மாதிரி இருந்தது.

"நாச்சியாரம்மா இலையைப் போடு, அல்லி எங்கே?" என்று வினவியவாறே உள்ளே நுழைந்தார் ராஜநாயகம்.

நாச்சியாரம்மாள் இரண்டு இலைகளைப்போட்டு அருகில் தண்ணீரையும் எடுத்து வைத்தாள்.

"அல்லி மாடியில் படுத்திருக்குதுங்க; போய் சாப்பிடக் கூப்பிட்டேன்; 'நீ போ; பசியில்லை'ன்னு ஒரு மாதிரியாகப்

பேசிடுச்சு!''என்று நாச்சியாரம்மாள் கைகளைப் பிசைந்த வாறு கூறினாள்.

'ஓஹோ!' என்று ராஜநாயகம் தடதடவென்று மாடிப் படிகளில் ஏறலானார். காலடி ஓசை சமீபித்ததும் அல்லி நிமிர்ந்து பார்த்தாள். கலங்கியிருந்த விழிகளை லேசாகப் புடவைத்தலைப்பால்ஒத்திக்கொண்டாள்.ராஜநாயகத்தை நோக்கிப் புன்னகை புரிய முயன்றதின் அடையாளமாக அதரங்கள் சற்றேபிரிந்தன.கருமுகிலினூடே பிறைநிலவு எட்டிப்பார்க்குமே, அதேபோல, பல்வரிசை மின்னி மறைந்தது.

''என்னம்மா உடம்புக்கு? சாப்பாடு வேண்டாமென்று யாமே?'' என பரிவுடன் விசாரித்தபடியே அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தார் ராஜநாயகம். அவருக்குத் தெரியும்—பரிவு சாதிக்கும் காரியத்தை அதி காரம் சாதிக்காது என்று. நைந்த உள்ளத்தில் பரிவுடன் கூடிய அமுதப் பேச்சுப் பரவியவுடன் மதகுச் சீப்பைத் திறந்ததும், அடைபட்டுக் கிடந்த அணைவெள்ளம் பாய்வது போல அவளது உணர்ச்சிகள் வெளிப்பட்டு விட்டன.

அருணசலத்தின் மேல் அவள் கொண்டுள்ள அன்பே அவளைக் காட்டிக்கொடுத்து விட்டது.

பொறுமையுடன் அத்தனையையும் கேட்ட ராஜநாயகம் நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

''அருணசலத்தைக் கட்டிக்க உனக்குச் சம்மதம்; அப்படித்தானே?''

'ஆம்' என்ற பாவனையில் தலையைக் குனிந்து கொண் டாள் அல்லி. ''சரிஅம்மா,முதலிலே எழுந்து சாப்பிடவா. உன் இஷ்டப்படியே ஆகட்டும்.அருணசலம் உள்ளத்தில்

நல்லவன்தான். வெளிச் சவகாசமும், வாலிபக் கோளாறுமாக பெற்றோருக்கு அடங்காத பிள்ளையாக அவன் வளர்ந்து விட்டான்; நீ அவனை நல்லவனாக்கி விடு!...'' என்று இதமாக மொழிந்தார் அவர்.

ராஜநாயகம் பேசிய கருத்து அவளை இன்பம் அடையச் செய்தது. நாணம் கன்னங்களில் செம்பஞ்சுக் குழம்பை அப்ப மனம் மெய் நிலையிலிருந்து நழுவி அதற்கப் பாலுள்ள ஓர் உயர்ந்த நிலையில் சஞ்சரிக்க ஆரம்பித்தது.

மாட்டுக்குத் தீனி அரைக்கவும், நெல் குத்தவும், கழனிக்குக் கஞ்சிகொண்டு போகவும், கண்மாய்க்கரையில் ஓரணா மலிவுச் சவுக்காரம் போட்டு அடித்துத் துவைக்கவும், இடை கொள்ளாமல் பெருங்குடத்தில் நீரேந்தி வரவும், கேட்ட வார்த்தைகளுக்கு மட்டுமே பதில் சொல்வதோடு அனாவசிய கற்பனைகளுக்கு இடம் கொடுக்காமலும் வளர்ந்திருந்த அந்த உரம் மிகுந்த பட்டிக்காட்டுப் பெண் இப்பொழுது சதா கற்பனையிலேயே மூழ்கிக் கிடக்க விரும்பினாள்...!

பொழுது அலர்ந்தது.

அழகி படத் தயாரிப்பாளர்களுக்காகப் போடப்பட்டிருந்த ராமாயணப் பின்னனி கொண்ட 'ஸெட்' ஒன்றில் அல்லி நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தாள்.

ராஜநாயகம் கூட துணைக்கு வந்திருந்தார் என்றால் அல்லியின் பால் கொண்டுள்ள வாத்ஸல்யம் எத்தகையது?

''ஓ, கே!'' என்றார் டைரக்டர்.

படப்பிடிப்பு முடிந்து வீட்டுக்கு வந்ததுமே ராஜநாயகம் அருணாசலத்திடம் கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டார்.

''அருணாசலம், அல்லியை நீ கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்றது நிச்சயம்தானே?''

''ஆமாம்; உறுதியாக!''

''சரி, எனக்கும் சம்மதம் தான்; ஆனால் எப்படிச் செய்து கொள்ள வேண்டும் தெரியுமா? இரண்டாம் பேர் அறியாமல் மோதிரம் மாற்றியோ பதிவு செய்துகொண்டோ அல்ல. ஊருக்குக் கடிதம் போடு;உன் அப்பா அம்மாவை வரவழை. அவர்கள் சம்மதம்தான் முக்கியம். வடபழனி கோவிலில் அல்லிக்குத் தாலிகட்டிக் கல்யாணம் செய்து கொள்!''

காலம் ஓடியது.

அறந்தாங்கியில் ஷண்முகானந்தா டாக்கீஸ் ஆரம்பமானது. 'குழந்தையே குடும்பத்தின் விளக்கு' என்ற புதுப் படத்தைப் பணம் செலவழித்துக் கொண்டு வந்து காண்பித்தார்கள்.

பத்தணா கொடுத்து சேர் டிக்கட் வாங்கிக் கொண்டு வெகு மிடுக்குடன் சென்று அமர்ந்த இன்னாசி யதேச்சையாகப் பின்புறம் திரும்பிப் பார்த்தான். மடிப்புக் கலையாத சலவை உடைகளில் தெளிக்கப்பட்ட மருக் கொழுந்து 'சென்ட்'டின் மணம் மூக்கைக் குடைய சிங்கப்பூரான் உட்கார்ந்திருந்தான்.

இரண்டு பேரும் நினைவின்றி வரப்பில் ரத்த வெள்ளத்தில் கிடந்ததும், இரவுக் காவலுக்காக லயன் கரைக்குப் போகும் ரெயில்வே காங்கி ஒருவன் அவர்களைக் கண்டு பாவ புண்ணியத்துக்குப் பயந்து, ஊருக்குள் போய் ஜனங்களைக் கூட்டிவந்து இருவரையும் தஞ்சை பெரிய ஆஸ்பத்திரியில் சேர்த்ததும் இன்னாசிக்கு நினைவில் எழுந்தன.

சாமான்களை ஏற்றிவரும் லாரி அப்பால் சென்றவுடன் அது எழுப்பிய புழுதியும் அடங்கி விடுவது போல திருக்

கார்த்திகைக்கு மறுநாள் வெகு வேகமாகவும், விதம் விதமாகவும் கிளம்பிய வம்புப் புழுதி காலக் கிரமத்தில் தானுகவே அடங்கிவிட்டது. மாங்குடி மண் எப்போதும் போல் வெயிலிலும் நிலவிலும் மாறி மாறிக் குளித்து வந்தது.

இன்னுசியும், சிங்கப்பூரானும் ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலை அடைந்து வந்தனர். ஒன்றும் அறியாத வேஷம் போட்டனர். யாரோ திருடர்கள் இருவரையும் தாக்கிப் பணப்பையைப் பறித்துப் போனதாகக் காயத்துக்கு ஒரு காரணம் கற்பித்தனர்.

விளக்குகள் அணைந்த வேகத்தில், வெண்திரையில் காட்சிகள் ஓடலாயின.

கதையில் சிந்தை செலுத்திய இன்னுசியும் சிங்கப் பூரானும் கண்களை எடுக்காமல் கவனித்தனர். திரைப் படத்தில் ஒரு நாட்டிய நாடகம்.

வண்ணுனின் சொற்கேட்டு, சீதையை அபராதியாக்கிக் காட்டுக்கு மீண்டும் அனுப்பிய கட்டம். வால்மீகி ஆசிரமம்; லவகுசர் பிறப்பு.

உத்தர ராமாயணக் காட்சிகளை நாட்டிய நாடகமாக உருவகப்படுத்தியிருந்தனர் படத் தயாரிப்பாளர்கள். மாங்குடி அல்லிதான் சீதையாகத் திரையில் மின்னிஞள். இன்னுசி மீசையை உற்சாகத்துடன் தடவிக்கொண்டான்.

சிங்கப்பூரானைத் திரும்பிப் பார்த்த அதே வேளையில் சிங்கப்பூரானும் இன்னுசியைப் பார்த்தான். "நானும் கவனித்து விட்டேனடா பயலே!" என்ற பாவனை அதில் நன்கு தெரிந்தது.

''அண்ணுச்சி, ஊரிலே எல்லோரும் பேசிக்கிறுங்க;அந்த பாயாஸ்கோப்பிலே நம்ம அல்லி ஆடுதாம்!'' செந்தாமரை வருத்தத்துடன் கூறிஞள்.

"ஆடிட்டுப் போகட்டுமே?அது ஆடப்பொறந்தது. அடங்கிக்கெடக்கப்பொறக்கல்லே!அதுக்கு நீ ஏன்அழுவுறே?"

''நீ இப்படிச் சொல்லாதே அண்ணுச்சி! என்னேடு உசிருக்கு உசிராகப் பழகிய சிநேகிதி அவ எனக்கு அவளேப் பத்தின பேச்சு நாலுபேர் வாயிலே புரளறப்போ எப்படியிருக்கு, தெரியுமா?''

''என்னே என்ன செய்யச்சொல்றே இப்போ?''

'' அண்ணுச்சி,எனக்கு அல்லியை இப்பவே பார்க்கணும். பார்த்து, 'பாவி, நம்ம பழக்க வழக்கத்தையெல்லாம் மறந்திட்டியா? ஓடினதுதான் ஓடின; இப்படி பகிரங்கமாகவே வெளிப்பட்டுப்பிட்டியே?'...அப்படின்னு கேக்கணும். அவள் கன்னத்திலே என் கையாலே நாலு அறை வைக்கணும்!''

வெண்டியப்பன் வாய்விட்டுச் சிரித்தான்.

''பைத்தியக்காரி!...அல்லியைப்பத்தி உனக்கு ஏன் கவலே?... பணம் கைக்கு வந்தவுடன் நாமும் பட்டணம் பொறப்படலாம். அந்தப்பீடையை பார்க்கறதுக்கல்ல!... நம்ம அத்தைமகன் கண்ணப்பன் பட்டணத்துலே இருக்கான்லே... அந்தச் செண்பகத்து அத்தை வீட்டுக்குப் போகப்போறேன்.உன்னேயும் கூட்டிககிட்டுவரச்சொல்லி அத்தை எழுதியிருக்குதே!'' அவளது நினேவுப்பந்தலில் இளமை நினேவுகள் படர்ந்தன. வெள்ளேச் சட்டையும் கிராப்புத் தலேயுமாக விளங்கும் பட்டணத்து அத்தான் கண்ணப்பனின் உருவம் நிழலாடியது.

மௌபரீஸ் சாலேயின் தருக்கள் கவிழ்ந்த நிழலின் கீழ், கப்பல் போன்ற நிறமுள்ள கார் வழுக்கிக்கொண்டு ஓடியது; ஆழ்வார்ப்பேட்டைத் திருப்பத்தைக் கடந்து லஸ் மாதாகோயில் சாலேயினூடே விரைந்தது.

பிரம்மாண்டமான தியேட்டர் வாசலில் நுழைந்து நின் றது அந்தக் கார். அல்லியும் அருணுசலமும் இறங்கினுர் கள்.

''அல்லி!...அல்லி'...''

''செந்தாமரையா?''அல்லியின் குரல் வியப்பு மேலோடி யது.

,'நீ ஆட்டம் பார்க்க வந்தியா?'' என்ருள்செந்தாமரை. அல்லியை ஏறிட்டுப் பார்த்தாள். மின்னல் பாய்ந்தது. ''கண்டவங்க கிட்டெல்லாம் பேசிக்கிட்டுநிக்கவந்தியா?'' என்று வெண்டியப்பன் அல்லியை நோக்கி முறைத்துப் பார்த்துவிட்டு, செந்தாமரையின் கையைப் பிடித்து இழுத்துச் சென்ருன்.

'கண்டவங்க' என்று வெண்டியப்பன் சொன்னதைக் கேட்ட அருணுசலம் பொங்கியெழுந்தான். கையை ஓங் கவும் தயாராகிவிட்டான். அடிக்கத் துடித்த அவனது கைகளைப் பிடித்தபடியே, ''என்னப்பா அருணுசலம், யாரை அடிக்க இப்படித் துடிக்கிறே?'' என்று விஷம மாகக் கேட்டதை உணர்ந்த அருணுசலம் திரும்பிப் பார்த்தான்,

சிரித்தபடியே நின்ற சாத்தையாவைக் கண்டதும், ''அடேடே! சாத்தையாவா? நீ எப்போ பட்டணம் வந்தே? வரப்போறேன்னு ஒரு வார்த்தைகூட எழுதல் லியே?'' என்றவாறு அருணுசலம் வெகு உரிமையுடன் அவன் தோள்மேல் கையைப் போட்டுக்கொண்டான்.

அண்டசராசரத்தின் உயிர்ப்புச் சக்தி அடங்கிவிட்டாற் போல, அல்லியின் ஐம்புலன்களும் ஒடுங்கின; அமைதி யாயின. அல்லியின்முன் ஒரு பிரளயமே உருவானது போலிருந்தது.

''அல்லி என்ன உடம்புக்கு?'' என்று திடுக்கிட்டு வினவிய அருணுசலம் தள்ளாடிய அல்லியைக் கீழே விழுந்துவிடாமல் தாங்கியணைத்துக்கொண்டான்.

# ஆடுகின்ற அன்பு

எழுத்தாளருக்குப் பிறரைப்பற்றி எழுத வாய்ப்புக் கிடைக்கும்: ஆனால். தன்னைப்பற்றி எழுதிக்கொள்ளும் நிலை அபூர்வமாகவே கிடைக்கிறது. அந்த ஒரு நல்வாய்ப்பைப் பலருக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது 'உமா.' 'ஆடும் தீபம்' வாயிலாக என்னுடைய இதயமும் பேசத் தொடங்குகிறது.

அல்லிக்கொடியாள் அன்புப் பெண். அவள் ஆடும் தீபமாக இயங்கி நின்று, மற்றவர்களின் நெஞ்சங்களை ஆட்டி வைக்கிறாள் ஏனென்றால் அவள் ஆடுகிறாள்: ஆட்டுவிக்கப்படுகிறாள்! அல்லியின் உள்ளத்தைப் படம்பிடிக்கவேண்டிய கட்டங்களை உணர்ந்தும் உணர்த்தியும் துணை ஆசிரியர் கொடுத்த குறிப்புக்கள் சகோதரிகள் ஸரோஜா ராமமூர்த்தி, கிருஷ்ணா ஆகியவர்களுக்கு உதவியது போல, எனக்கும் பயன் தந்தன. கொடுத்த பொறுப்பை ஏற்றேன். ஆனால், அல்லியின் எதிர்கால வாழ்வைத் தொடர்ந்து இயக்கப் பயந்து ஒதுங்க நேர்ந்து விட்டது. சகோதரி அல்லியின் வாழ்வும் வளமும் சிறப்படைய வேண்டும். இதுவே என்னுடைய இதயபூர்வமான ஆவல்.

ஸி. ஆர். ராஜம்மா

பொறி ஐந்து:

# இதயம் எனும் எழில் விளக்கு

உலகத்தின் கண்களிலே அல்லி கண் மலர்ந்தாள். அருகில் நின்று கொண்டிருந்த டாக்டரின் கண்கள் அவளை இமைமூடாமல் பார்த்தது பார்த்தபடி இருந்தன.

''அம்மா அல்லி, நீ என் வயிற்றிலே பாலை வார்த்தாயம்மா?'' என்று தம்மை மறந்து கூறினர் ராஜநாயகம். பிறக்காமல் பிறந்த பாசத்துக்கும் 'கண்' இருக்கத்தானே செய்கிறது?.

துவண்டு கீழே விழ இருந்த அல்லியைத் துணைக்கரம் கொடுத்துக் காத்தான் அருணசலம். ஆனால் அந்த அரவணைப்பும் அன்புத் தாங்கலும், அவள் வாழ்வு முழுமைக்குமே உரித்தானதாய் இருக்கக் கூடியவை தானா? 'பெண் பேதையாக இருக்கும் வரை அவளுடன் வாழ், விழித்துக்கொண்டு விட்டால், விட்டுவிட்டுப் போய்விடு!' என்று யாரோ சொல்லிச் சென்ற வாக்கை மெய்ப்பிப்பது போலத்தான் ஆண்கள் இருப்பார்களோ? அருணசலமும் அந்த வர்க்கத்தைச் சார்ந்தவன் தானே?

அல்லியைக் காரில் வைத்துக் கொண்டு ராஜநாயகத்திடம் வந்தான் அருணசலம். அவன் மட்டும் வரவில்லை; கூட, சிங்கப்பூரான் என்று அழைக்கப்படுகின்ற சாத்தையாவும் வந்தான். மயக்கம் அடைந்து விழுந்தாள்

அல்லி. மயக்கம் அடையாத நிலையில், மயங்கி மருண்டு தவித்து நின்றது அருணாசலத்தின் மனம். ராஜநாயகம் அல்லியின் நிலைக்காகப் பதறி டாக்டர் உதவியை நாடினார். அல்லிக்கு மயக்கம் தெளிந்துவிட்டது என்றாலும், பூரணமாகத் தெளியவில்லை. சாத்தையா, செந்தாமரை, வெண்டியப்பன் என்று சம்பந்தமில்லாமல் அவளது செவ்விதழ்கள் முணமுணத்தன.

தியேட்டரில் அருணாசலம் கண்டதெல்லாம் கனவோ என்னும் குழப்பநிலை அவனுள்ளே இருந்தது.

'யாரோ நாட்டுப்புற மங்கை ஒருத்தி அல்லியைப் பெயரிட்டு அழைத்துக்கொண்டே வந்து அணைத்தது; அவளை ஓர் ஆண்மகன் அடக்கி அல்லியைக் குறிப்பிட்டு ரசமில்லாத வகையில் பேசியது; சிங்கப்பூரானைக் கண்டதும் அல்லி பேயைப் பார்ப்பதுபோல் பார்த்து மயங்கி விழுந்தது — இத்தனைக்குமாக ஏதோ ஒரு பிணைப்பு இருக்கிறது. இப்பொழுது அவனுடைய வேதனை அல்லியின் நிலைபற்றியல்ல; சாத்தையா சொன்ன சேதியைப் பற்றியது.

சாத்தையா அருணாசலத்துடன் சும்மா காரில் வரவில்லை. வந்த பின்னும் அருணாசலத்தைச் சும்மா இருக்க விடவில்லை. காற்றடிக்கும் திசையில் நெருப்பை ஊதிவிட அவனுக்குத் தெரியும். அடிபட்டு ஓடி ஒழிந்துவிடும் சர்ப்பம் மிகவும் ஆபத்தை உண்டாக்கக்கூடியது. அது வன்மம் வைத்து, தன்னை அடித்தவர்களை காதவழி சென்றாலும் சமயம் பார்த்திருந்து கடித்தே தீரும். சாத்தையாவும் அம்மாதிரியானவன்தான் என்பதைப் பேதைப் பெண் அல்லி உணரவில்லை.

சாத்தையா சாமர்த்தியசாலி. இல்லாது போனால் இந்த வயதுக்குள் சிங்கப்பூர் சென்று செல்வந்தனாகத் திரும்பி வர முடியுமா? ஆனால் அவனுடைய சாமர்த்தியம் நல்ல வழியில் பயன்படவில்லை.

எப்பொழுதுமே பெற்றோருக்கு அடங்காமல் ஊர் சுற்றும் பழக்கம் ஏற்பட்டது. குணத்தில் இருவருக்கும் ஏறத்தாழ ஒற்றுமை இருந்ததால் மற்ற விஷயங்களிலும் ஒன்றிப் பழகினார்கள். கையிலிருந்த காசு கரைந்தது. மேற் கொண்டு வாழ வழியில்லாது போகவே, வழக்கம்போல பெற்றோரை நாடி வந்து விட்டான் அருணாசலம். அப் புறம் கடல்தாண்டி ஓடுவதில்லை என்று உறுதியும்செய்து கொண்டான். அங்கிருந்து வர அவன் பட்டபாடு அவ னுக்கு நல்ல பாடத்தைக் கற்றுக்கொடுத்தது.

மல்லிகை அழகான மலர். அசாதாரணமான மணத்தை உடையதுதான். அன்னை பராசக்தியான ஜெகன்மாதா வின் முடிமீது இருக்கும்போது, பக்திப் பரவச உணர்ச்சி யில் மணத்தைவிட்டு மலரைப் பிரிக்க முடியாததுபோல, அம்பிகையின் நினைவைவிட்டு நம்மைப் பிரிக்கமுடியாத நிலையடைய விரும்புகிறோம். அதே மல்லிகை, கீழ்மக ளான ஒருபெண்ணின் தலையில் இருக்கும்போது,சாத்தை யாவைப் போன்றவர்களின் உணர்ச்சி எப்படிப் பாதிக்கப் படும்? இருவருமே பெண் இனத்தைச் சார்ந்தவர்கள். இருவர் முடிமீதும் இருப்பது ஒரே ஜாதிப்பூ. மனிதனும் அவன் மனமும்தான் வித்தியாசம். காலமும் சூழ்நிலை யும் மாற்றியமைக்கும் வல்லமை வாய்ந்தது. மல்லிகைப் பூவின் உபயோகத்தில் சாத்தையா இரண்டாவது ரகத்தைச் சார்ந்தவன். கெட்டிக்காரத்தனம் இருந்தது. ஆனால் பிரயோகிக்கும் வழிதான் தவறானதாக அமைந்து வந்தது.

'என் அக்கா மகள்தான் அல்லி!' என்று எல்லோரிடமும் கூசாமல் சொல்லி வந்த அருணாசலம் சாத்தையாவிடம் அந்தப் பொய்யைச் சொல்லவில்லை. அவனுக்கு அல்லி யைத் தெரியலாம் என்று அவனது உள்ளுணர்வு கூறி

யது. ஆகவே, ''நான் இவளைத்தான் கட்டிக்கப் போறேன், சாத்தையா!'' என்று மட்டுமே பதில் கூறி ஞன் அருணாசலம்.

''சரிதான், உங்க அப்பாவும் அம்மாவும் சம்மதிச்சிட்டாங் களா?''

''என்னைப்பற்றித்தான் தெரியுமே, சாத்தையா! முன்ன ளைய அருணாசலமேதான் நான்; கிராமத்திலே கட்டிப் போட்டாப்போல் இருக்கப் பிடிக்கலை. இப்படித்தான் நினைத்த இடத்திற்குப் போய்க்கொண்டிருக்கேன். நான் அல்லியை ரெயிலிலே பார்த்தேன். இரண்டு பேருக்குள் ளும் ஒரு பிடிப்பு ஏற்பட்டுப்போச்சு. அப்பாவுக்கு விஷ யத்தை எழுதினேன். நான் எப்படியாவது உருப்பிட்டு இருந்தாப்போதும்! என்கிறது அவர்கள் நினைப்பு. சம்ம தம் தெரிவித்து விட்டாங்க!''

''அல்லியைப் பாத்தா, சம்மதிச்சிருக்கவே மாட்டாங்க!'' என்றான் சாத்தையா.

''ஏன்!''

அருணாசலத்தின் கண்கள் ஆச்சரியமாக விரிந்தன.

''அவுங்க உலக அனுபவம் உள்ளவங்க; அல்லியைப் பத்தி உன்னைவிடத் தெரிஞ்சுக்குவாங்க!''

அருணாசலத்தின் மனத்தில் இடி இடித்தது.

''என்ன சொல்கிறாய், சாத்தையா?'' என்று கேட்டான் அவன்.

''நான் சொல்றது இருக்கட்டும். அல்லி தன்னைப் பத்தி என்ன சொன்னாள்?''

அவள் ரெயிலில் தன்னிடம் சொன்னதைக் கூறினன் அருணசலம். இதைக் கேட்டுவிட்டு மறுபடியும் அட்டகாசமாகச் சிரிப்பைக் கொட்டினன் சாத்தையா.

''அல்லி சொல்றதை நீ நம்புறீயா?''

''ஏன், அல்லியைப்பற்றி உனக்குத் தெரியுமா?'' என்று அருணசலம் கேட்ட குரலில் ஆர்வம் குமிழியிட்டது.

''உன்னைவிட எனக்குத் தெரியும் அருணசலம்!''

''ஓஹோ...?''

''அருணசலம்! சொல்றேன், கேளு; அல்லிக்கு என் ஊர் தான். பெத்தவங்களை முழுங்கி ஏப்பம் விட்டது என்னமோ நெசம். அவுங்க ஒருத்தர்பின் ஒருத்தராகத் தற்கொலை பண்ணிக்கிட்டாங்களே, தெரியுமா?'' என்று கேட்டுவிட்டு நிறுத்தினன் சாத்தையா.

''தற்கொலையா பண்ணிக்கொண்டார்கள்?''

''ஆமாம்: பின்னே மகளுடைய நடத்தைக்காக ஆயிரங் காலம் ஆயிசோடு இருக்கவா வரம் கேட்பாங்க?'' —அவனுடைய இந்தக்கூற்று அருணசலத்தின் நெற்றிப் பொட்டில் கோடரியால் தாக்கியதுபோல் இருந்தது.

சற்று நேரம் அவனைச் சிந்திக்க விட்டு, மேற்கொண்டு தொடர்ந்து பேசினன் சாத்தையா.

''பெத்தவங்க இல்லாதுபோனு, சொந்தக்காரங்க கூடவா ஊரிலே இல்லாது போயிடுவாங்க? நல்ல மாடானு, உள்ளூரிலே விலை போகாதா, அருணசலம்? நீ கொஞ்சம் யோசிச்சுப் பாரு. யாருக்கும் அடங்காமே அல்லி ஓடிவந்தான்னு, அங்கேதான் இருக்கப்பா ரகசியம்!''

தான் அல்லிகூட பழகத் தொடங்கிக் கொஞ்ச நாட்களே ஆகியிருந்தனவென்றாலும், அவளைப் பற்றி மேலான ஓர் அபிப்பிராயம் அருணாசலத்தின் உள்ளத்தில் எழுந்திருந்தது. ஆகவே, அவன் விட்டுக்கொடுக்காமல் சட்டென்று ''உலகம் நாலும் சொல்லும் சாத்தையா. எல்லாவற்றையும் கேட்டு நடந்தால் அப்பனும் மகனும் கழுதை தூக்கின கதைதான். அல்லி அப்படிப்பட்டவளாகத் தோன்றவில்லை,'' என்றான்.

இப்பொழுது பெரிதாகக் கொக்கரித்த சாத்தையா, ''என் மேலே பொறுமையோ, கோபமோ படாமல் இருந்தியானா சொல்றேன்: அல்லி என்னுடைய உடைமையாகி வெகுநாளாச்சு, அருணாசலம்!'' என்று அலட்சியமாகத் தெரிவித்தான்.

' நிஜமாகவா?...,''

''ஆமாம்; முன்னாலேயே மாங்குடியிலே அவள் பேரு கெட்டுப்போச்சு. அப்பனும் அம்மாவும் போனப்புறம் நான்தான் ஆதரிச்சேன். இந்தஅல்லி சும்மாகெடக்காம, தன்னைப் பகிரங்கமாக கட்டிக்கணும்னு ஆரம்பிச்சுது! என் அந்தஸ்தென்ன, ஆள் பலம் என்ன, குடும்ப கௌரவம் என்ன? இது நடக்குமா? எங்களுக்குள்ளே தகராறு ஆரம்பமாச்சுது; ஒரு நாள் பார்த்தா, கம்பி நீட்டிட்டா மகராசி. அப்புறம் நடந்ததெல்லாம்தான் உனக்குத் தெரியுமே?'' என்று முடித்தான் சாத்தையா.

பொய்யானாலும் சொல் வன்மையினால் மெய்யாகி விடும் என்பது உண்மை. தெளிவில்லாத உளைச்சலோடு கலங்கிப் போயிருந்த அருணாசலத்தின் மனக்குளத்தில் மதம் கொண்ட யானைபோல் இறங்கி சேற்றையும் மண்ணையும் கிளப்பி விட்டு விட்டான் சாத்தையா. அருணாசலத்தின் உள்ளத்தில் அல்லியைப் பற்றிய வெறுப்பின் விதை

ஊன்றி விட்டது. அது முளையிலேயே கருகி விடுமா? அதைக் கருக்கும் சக்தி யாருக்கு உண்டு? இல்லை, வளர்ந்து கிளைத்தெழுமா? அப்படியானல் அல்லியின் கதி என்னவாகும்? சிறு காற்று தன்னுடைய இன்ப மன விளக்கை அணைத்து விடாமல் இருக்கவேண்டுமே என்று எண்ணி அருணசலம் என்கின்ற ஆதரவைத் தேடி வந் தாள் அல்லி. அங்கே அதை அணைக்க ஒரு சுருவளியே தயாராகும் என்பதை அந்த அறியாப் பெண் உணர வில்லையே?

சாத்தையா சொல்வது ஏன் உண்மையாக இருக்கக் கூடாது? என்னைப்பற்றி அவள் எல்லாம் கேட்டறிந்து கொண்டாள்; ஆனல் அவளைப்பற்றி ஏதாவது கூறி ளை? நான் தூண்டித் துளைத்துக் கேட்கவில்லைதான்: இல்லாது போனலும், அவள் மாசற்றவளானல் தான கவே சொல்லியிருக்கலாமே? பழங்கதையைக் கிளறி தன் அவல வாழ்வை அம்பலப்படுத்த வேண்டாம் என்ற எண்ணமாக இருக்கலாம். 'மாங்குடியில் வந்து கேள்!' என்று கூறினனே சாத்தையா? அன்றைக்கு சினிமாத் தியேட்டருக்கு முன்னுள் செந்தாமரையின் அண்ணன் கூறின வார்த்தைகளிலிருந்தே மாங்குடிக்காரர்களின் மனம் புரிகிறதே?...

'இந்த சாத்தையாவிடம் அல்லிக்கு எவ்வித பயமும் இல் லாது போனல்,அவள் அவனைக்கண்டவுடன் ஏன் மயங்கி விழவேண்டும்? சம்பந்தமில்லாமல் ஏன் புலம்ப வேண் டும்? ஆம்; அல்லியின் வாழ்க்கையில் ஏதோ மர்மம் ஒளிந்து கொண்டுதான் இருக்கிறது. அதை அவள் மறைத்து என்னை ஏமாற்றப் பார்க்கிருள்!'

இந்த எண்ணம் எழுந்தவுடன் வெறி கொண்ட வேங்கை யானன் அருணசலம்.

ராஜநாயகத்தின் அழைப்பின் பேரில் அருணசலம் அவர்

எதிரில் போய் நின்றபோது, அவனுடைய சுருண்ட கேசம் கலைந்து கிடந்தது; முகம் வெளிறியிருந்தது. கண்கள் கனலைப்போல் சிவந்து கிடந்தன. ராஜநாயகத்துக்கு அவனுடைய நிலையைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

''அருணாசலம் கவலைப்படாதேப்பா. அல்லிக்கு ஒன்றுமில்லை,'' என்றார் அவர், தைரியம் சொல்லும் பாவனையில். அவர்களிடையே இருக்கும் பரஸ்பர அன்பை எண்ணியபோது அவர் மனம் உருகத்தான் செய்தது.

''கல்யாணத்துக்கு நாள் ரொம்ப கிட்ட நெருங்கிவந்து விட்டதே, அல்லிக்கு அதுக்குள்ளே சௌக்கியமாகுமா என்கிற கவலை உனக்குஇருக்கத்தான் இருக்கும். அருணாசலம், கல்லெறி படலாம்; கண் எறியிலிருந்து தப்பிக்கமுடியாதப்பா. அல்லியைப்பற்றிரொம்பபேருக்குப்பொறுமை. அதுவும் அவள் படத்திலே நடிச்சதிலிருந்து கேட்கவே வேண்டாம்.'' என்று சொல்லிக்கொண்டே வந்தபோது, அருணாசலம் குறுக்கிட்டான்;

''போதும் வாத்தியாரையா, அல்லிக்கும் எனக்கும் கல்யாணம் வேண்டாம்... ...!''

ஒரு க்ஷண காலம் உலகத்தில் உள்ள உயிர்களெல்லாவற்றினுடைய மூச்சுக்களும் நின்றுவிட்டன போன்ற பேரமைதி அங்கே ஏற்பட்டது. நடப்பது கனவல்ல என்றறியவும் சிறிது அவகாசம் வேண்டியிருந்தது. அறிந்து கொண்டதும் உள்ளத்தில் ஆத்திரக்கடல் குமுறியது. எரிமலையின் கற்களென வெடித்துச் சிதறின வார்த்தைகள்; ''என்னப்பா, குழந்தை விளையாட்டா விளையாடறே?'' என்றார் ராஜநாயகம். 'தந்தைமனம்' வெடித்தது.

''இத்தனை நாளும் குழந்தைத் தனமாய் இருந்தேன். இனிமே அப்படி இருக்கவே மாட்டேன்,'' என்று அதே சூட்டுடன் கூறினான் அருணாசலம்.

''உன்னுடைய இந்த தில்லுமுல்லுச் சமாச்சாரம் எனக்குத் தெரியாதா அருணாசலம்? மலருக்கு மலர் தாவும்வண்டுபோலத்தான் நீ. இதையெல்லாம் தெரிந்து கொண்டுதான் முன்னமேயே நான் இந்த சம்பந்தத் தைத் தடுத்தேன். அப்பொழுது நீ பிடிவாதம் பிடித்தாய். இப்பொழுது அதே உன் வாய்தான் 'மாட்டேன்' என் கிறது! அல்லியின் மனசு இந்தப்பேரிடியைத் தாங்குமா? அவள் உன்னுடைய பயங்கரமான முடிவைக் கேட்கச் சகிப்பாளா? அல்லிப்பூ வாடிவிடுமே, அருணாசலம்?''

ராஜநாயகத்தின் விழிகள் கலங்கி வந்தன.

''அவளுக்கும் எனக்கும் இனிமே ஒரு தொடர்புமில்லை!'' என்று தீர்மானத்துடன் கூறி நிறுத்தினான் அருணாசலம்.

''எப்பொழுதிலிருந்து இந்த முடிவுக்கு வந்தாய்?''

''கொஞ்சநேரம்தான் ஆயிற்று!'' என்று கடுகடுத்த குரலில் அருணாசலம் சொன்னான்.

''காரணம்...?''

''இப்போது என்னை ஒன்றும் கேட்கக்கூடாது, வாத்தி யாரையா. அப்புறம் நம் சினேகம் முறிஞ்சு போகும்!''

''இப்போ மட்டும் ஒட்டிக்கொண்டிருக்கிறதாக எண் ணமோ? வாத்தியாரையா என்று கூப்பிட்ட வாயைக் கழுவிவிடு அருணாசலம். அல்லியை வேண்டாம் என்று சொன்னபின் உனக்கும் எனக்கும் என்ன இருக்கிறது?''

''வாத்தியாரையா!''

''அருணாசலம், திகைப்பாயிருக்கிறதோ?''

''ஆமாம், அல்லி இடையில் வந்தவள். நம் பழக்கம் வெகுநாளையது!''

''முதலில் பெண் கணவனைத்தான் அடைகிருள். இடையிலே வந்ததுதான் குழந்தை என்று அதை உதாசீனம் செய்கிருளா? அந்தக் குழந்தைக்காக வேண்டித் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிருளே?

கணவனையும் அன்பென்னும் கயிற்றில் பிணைத்துப்போட முயலுகிருள். சமயம் வருங்கால்—கணவன் மீறிப் போகுங்கால்—வாழ்வை வகுத்துக் கொடுத்த கணவனை குழந்தையின் நலனுக்காக வேண்டி அவள் உதறிவிடவும் சித்தமாகிருள்.!''

''எனக்கு உபமான உபமேயங்கள் எல்லாம் மூளையிலே ஏறவும் இல்லை; பிடிக்கவும் இல்லை!'' என்ருன் அருணுசலம்.

''உனக்கு மூளை என்று ஏதாவது இருந்தாலல்லவா ஏறும்?''

ராஜநாயகத்தின் இந்தப் பேச்சைக் கேட்டுச் சிலிர்த்தெழுந்தான் அருணுசலம்.

''அதிகம் பேச வேண்டாம், ஐயா. அல்லி மாசுபட்டவள்!'' என்று அருணுசலம் கனல் சிரிக்கச் சொன்னபோது, அவன் உடல உணர்ச்சி வசப்பட்டு நடுங்கியது.

அந்தப் பேரிடியை எதிர்பார்த்திருந்தவர் போன்று அலட்சியமாகச் சிரித்தார் ராஜநாயகம்.

''இந்த மந்திரத்தை உனக்குச் சொன்னவன் அந்த அயோக்கியன் சாத்தையாதானே?'' என்ருர் ராஜநாயகம். வந்தது முதற்கொண்டு சாத்தையாவையும் அவர் கவனிக்கத் தவறவில்லை. நடன ஆசிரியர் அல்லவா? பாட்

டையும், தாளத்தையும், பாவத்தையும், முத்திரையை யும் ஒருமிக்கக் கவனித்துப் பழக்கப்பட்டவராயிற்றே? சாத்தையாவைக் கண்டவுடன் அவருடைய அனுபவ மனம் எடை போட்டு விட்டது; 'சாத்தையன் ஓர் அயோக் கியன்!' அருணசலமும், அவனும் கூடிக்கூடிப் பேசியது. அதற்குப்பின் அருணசலத்திடம் ஏற்பட்ட முகமாறுதல், அவனுடைய போக்கு, எல்லாவற்றையும் ராஜநாயகம் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். ஆனல் அவன் மனத்தை இத்துணை விரைவில் மாற்றும் அத்தனை சக்தி சாத்தையாவுக்கு இருக்கும் என்றுஅவர் எண்ணவில்லை.

பூனையின் கண்கள் மூடிவிடலாம்; அதற்காக உலகம் தன் பேரில் இருள் திரையை விரித்துக் கொண்டு விடுமா, என்ன?

இந்தச் சமயத்தில் வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கியவர்களைக் கண்டதும் சாத்தையா இடியால் தாக்குண்டவன் போல் நின்ருன். ஆம்; அவர் கள் செந்தாமரையும், அவளுடைய ஆசை அத்தானன கண்ணப்பனும்தான்.

கண்ணப்பனுக்கு அல்லியைப் பற்றிச் செந்தாமரை சேதி சொன்ஞள். அல்லி திரைப்பட நடிகை என்றவுடனேயே கண்ணப்பனுக்கு அந்த விஷயத்தில்அக்கறை உண்டாகி விட்டது. சினிமாநட்சத்திரங்களின் பாதையில் தலையிடு வது எப்பொழுதுமே அவனுக்கு மிகவும் பிடித்தமான செயல். இந்த விஷயத்தில் தான் பிரவேசிப்பதன் மூலம் தன் காதலி செந்தாமரையின் பெருமதிப்பைச் சம்பாதித் துக் கொள்ளலாம் என்பதும் அவன் குதூகலத்துக்குக் காரணமாக அமைந்தது. வெண்டியப்பனுக்குத் தெரி யாமல் அவர்களிருவரும் புறப்பட்டு வந்தார்கள். அல்லி நாட்டியமாடியிருந்த படக் கம்பெனியில் போய் அவளு டைய விலாசத்தை விசாரித்துக் கொண்டுவந்திருந்தார்

கள். அல்லியை வாசலில் கண்டவுடனேயே, செந்தாமரையின் மனத்தில் நீறுபூத்திருந்த பழைய நட்புக் கனல் காற்றடிக்கப்பட்டு விலகிப் பிரகாசிக்க ஆரம்பித்திருந்தது. அவளுடன் தொடர்ந்த ஓர் ஆவலுடன் சாத்தையாவும் பேசி நட்புக் கொண்டாடிக் கொண்டு காரில் சென்றபோது, செந்தாமரையின் மூளை தீவிரமாக வேலை செய்யத் துவங்கிவிட்டது. 'பாம்பு கொத்தப்படம் விரிந்து விட்டது. விஷம் உடலில் பரவுமுன் நாம் போய்த் தடுக்க வேண்டும். தாமதம் செய்யக் கூடாது. அல்லி தன்னிடம் கொண்டிருந்த மாசற்ற அன்பிற்கு இதுதான் கைம்மாறு' என்று முடிவு கட்டினுள் செந்தாமரை. படிப்பு வாசனை அதிகம் இல்லாத பாமரப் பெண்ணானாலும், பகுத்தறிவு அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தது.

அல்லியின் பெயரைச் சொன்னவுடனேயே, அவர்களை ராஜநாயகம் மரியாதை கொடுத்து வரவேற்றார்.

சாத்தையாவைக் கண்டவுடன் செந்தாமரை படமெடுத்தாடும் நாகமென மாறிச் சீறினாள். அவள்முகம் சிவந்தது; உடல் துடித்தது. ''பாவி, இங்கேயும் ஏன் வந்தே? மாங்குடியில் உன் அட்டகாசங்களையும், அக்கிரமச்செயல்களையும் வச்சுக்கொண்டது போதாதா? வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலே உண்டு, தெரியுமா? கெட்டிக்காரன் புளுகே எட்டு நாளில் தாங்காதபோது, கையாலாகாதவன் புளுகு ஒரு பொழுது கூட நிலைக்காது தெரியுமா?'' என்றாள் அவள்.

வாத்தியார் ராஜநாயகம் கதைச் சுருக்கத்தை செந்தாமரையிடம் தெரிவித்தார்.

''அருணாசலம் இவங்க பேச்சை எல்லாம் நீ கேக்காதே. அல்லிக்கு பரிஞ்சிபேச வருகிறவ, அல்லியைப்போல ஓடுகாலியாகத்தானே இருப்பா!'' என்று சாத்தையா

பேசி முடியுமுன், முஷ்டியைக் காட்டிக் கொண்டு பாய்ந்து வந்தான் கண்ணப்பன்.

''செந்தாமரையைப் பத்தி மேலே ஒரு பேச்சுப் பேசினே, உடம்பிலே உள்ள எலும்பை எல்லாம் எண்ணிக்கொடுப் பேன் கையிலே!'' என்று கர்ஜனை செய்தான்.

''அத்தான் நீங்க சும்மா இருங்க!'' என்று அவனைக் கையமர்த்திய செந்தாமரை, ''தன்னைப்போலத் தானே மத்தவங்களையும் எண்ணுவான் சாத்தையா. ஊரை விட்டு ஓடி சிங்கப்பூரிலே போய் வாழ்ந்த இந்த சாத்தையா வைப்பத்தி மாங்குடியிலே போய் கேட்டுப் பார்த்தா யோக்கியதை தெரியும். இந்தச் செந்தாமரையோ, அல்லியோ இவனுக்குப் பயப்படமாட்டாங்க!'' என்று மீண்டும் சீறிய செந்தாமரை உணர்ச்சி வசத்தால் தடு மாறினள்.

அருணசலம் சாத்தையாவைப்பார்த்தபோது அவன் தலை குனிந்திருந்தது. தன் அக்கிரமச் செயல்கள் முழுவதும் அம்பலமாகிப் போய்விடுமோ, அருணசலம் தன் பேச்சை நம்பாது போய்விடுவானே என்று திக்குமுக்காடினன்; இந்தச் செந்தாமரை எங்கிருந்து இப்பொழுது வந்து முளைத்தாள்?' என்று கலங்கிப்போய்த் தலை குனிந்து நின்றிருந்தான் சாத்தையா.

'தெய்வமே! என் மகள் அல்லிக்கு வாழ்வு கொடுத்து எங்களைக் காப்பாற்று!' என்ற ராஜநாயகத்தின் பிரார்த் தனை உலகமெங்கணும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆண்டவன்பால்புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது...

'யார் சொல்வதை நம்புவது? யார் சொல்வதை நம்பா மல் விடுவது? உண்மை எது? உண்மைக் கலப்பற்ற பொய் எது? தெய்வமே நீ தான் எனக்கு நல்ல வழியைக் காட்டவேணும்!'

அருணசலத்தின் இதயதீபம் சூருவளிக்கு நடுவே அகப் பட்டு ஆடிக்கொண்டேயிருந்தது.

# ஆத்ம சோதனை

என்னைச் சார்ந்த எல்லா விஷயங்களுமே, என்னி லிருந்து தொடங்க வேண்டுமென்று விரும்புபவன் நான். ஆனால் அதற்கு விதி விலக்காக, இந்தச் சேவையில்மட்டும் என்னுடைய சகோதரர்களையும்; சகோதரிகளையும் பின்பற்றியிருக்கிறேன்.

மயக்கம் அடைந்த நிலையில் என்னிடம் ஒப்படைக் கப்பட்ட அல்லிக்கு மேலும் தொல்லை தரக்கூடா தென்று எண்ணி, இந்தப் பகுதியின் முடிவு வரை அவளது ஆத்ம சோதனையிலேயே என்னை ஈடுபடுத் தினேன். ஆனால் முடிவிலோ, என்னையும் மீறி அவளுக்குச் சுகுணாவின் மூலம் ஒரு பேரதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. அதற்கு நான் என்ன செய்வேன்?

'சிருஷ்டியின் முன் சிருஷ்டிகர்த்தன் சாமான்யமான வன்' என்பது உண்மைதானே, என்னவோ...?

மா. கு. நெடுமாறன்

## பொறி ஆறு:

# கனவு

உதயத்தின் சௌந்தர்யம் உலகத்தையே சுவர்க்க மாகத்தான் ஆக்கிவிடுகிறது.

இருள் விலகாத வானம். பனி விலகாத பூமி. இவற்றின் மத்தியிலே அருணோதயத்தின் ஜோதிக் கதிர்கள் ஊச லாடுவதைப் பார்க்கும் போது, இயற்கையின் எல்லை யற்ற பேரழகிற்கே ஓர் எல்லை ஏற்பட்டு விட்டதைப் போன்ற பிரமை இதயத்தில் ஏற்படுகிறது.

படுக்கையில் படுத்தபடி வைகறையின் இந்த வரம்பு கடந்த வனப்பைக் கண்ட அல்லியின் நெஞ்சம் மகிழ்ச்சி யால் துள்ளியது. அதன் அடிவாரத்தில் ஆயிரம் கற் பனைகள் எழுந்தன.

'சில்'லென்று வீசிய இளங்காற்று அவளது உடலின் வழியாகப் புகுந்து, அவளுடைய உள்ளத்தைத் தொட்டது. வீசும் தென்றலின் ஸ்பரிசம் இவ்வளவு மென்மையானதா...?

அல்லியின் விழிகள் ஒருமுறை குதூகலத்தால் மூடித் திறந்தன. திறந்த விழிகள் சிவந்திருந்தன. ஆமாம்; இரவு முழுவதும் அவள் தூங்கவே இல்லை.

அளவுக்கு மீறிய துன்பத்தைப் போலவே, அளவைக் கடந்த இன்பமும் மனத்தின் சாந்தியைக் கெடுத்துத் தான் விடுகிறது.

அல்லியின் நெஞ்சில் நினைவுகள் குறுகுறுத்தன. அந்த நினைவுகளின் ஒவ்வொரு அணுவிலும் கோடிக்கனவுகள்.

''அத்தான்...!''

பெருமூச்சோடு அவளது உதடுகளில் பிறந்த இவ் வார்த்தையில் ஆழம் காண முடியாத பந்தமும் பாசமும் தொனித்தன. அந்தத் தொனியில் துயின்ற எண்ணங்கள் காதலியின் அற்புதத்தை கதையாகச் சொல்லி மகிழ்ந்தன.

''அத்தான், நீங்க எவ்வளவு நல்லவங்க...! அனுதையா யிருந்த எனக்கு ஆதரவு தந்ததும் இல்லாம உங்க வாழ்க்கையிலே பங்கு பெறுகிற பாக்கியத்தையும் தந்திட்டீங்களே! நெசமாகவே நான் அதிர்ஷ்டக்காரி தானு அத்தான்?''

அல்லி தன் இதயத்தோடு பேசினுள்.

'... ... ...புழுதியிலே கிடந்த பூமாலையை எடுத்து சாமிக்குச் சாத்துறது மாதிரி, விதி என்னை எங்க அத்தானேட கொண்டு சேர்த்திடுச்சு. இதுக்காக நான் இப்போ யாருக்கு நன்றி சொல்றது? அத்தானுக்கா?... இல்லாட்டி தெய்வத்துக்கா...? ம்... இனிமே என்னைப் பொறுத்தவரையிலே என்னேட அத்தான் தானே எனக்குத் தெய்வம்...?...'

அல்லியின் இதயம் பேசிற்று;

'நானும் அவுங்களும் மணையிலே உட்காருறப்போ...ம் தூரத்திலே நிக்கிறபோதே 'திருட்டுப் பார்வை' பாக்கிற திலே குறைச்சல் இல்லே. இதிலே பக்கத்திலே போயும் உட்கார்ந்திட்டா! அவ்வளவு தான்!... என்னதான் பிரியம் இருந்தாலும் இவுங்களுக்கு இவ்வளவு அவசரம் கூடாது; பாவம் அவுங்களுக்குத் தான் என்மேலே

எவ்வளவு அன்பு! இதுக்கெல்லாம் வட்டியும்முதலுமா... இருக்கட்டும் இருக்கட்டும்; இன்னும் பத்து நாளுதானே? அப்புறம் கல்யாணம் ஆன மறுநாளைக்கே...!''

எதையோ நினைத்துக் கொண்ட அல்லி 'களுக்' கென்று சிரித்தாள். அழகுச் சிரிப்பின் மெல்லிய அலைகள் மிதந்து நின்ற தென்றலோடு தேய்ந்து மறைந்தன.

ஓர் இளம் பெண்ணுக்கு, அவளுடைய திருமணச்செய்தி இவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்குமா? ஆமாம், அல்லியைப் பார்த்தால் தெரியவில்லையா...?

பத்து நாட்களுக்குப் பின், பங்குனித் திருநாள் ஒன்றில் நடக்க இருக்கும் தன்திருமணத்தை நினைத்து நினைத்துப் பூரித்தாள் அல்லி.

''அத்தான், அத்தான்!'' என்று அவளது உள்ளம் அடிக்கு ஆயிரம் முறை அருணசலத்தை அழைத்து அழைத்துக் கொண்டாட்டம் போட்டது.

நேற்றுவரை யாரோ ஒரு 'அவர்' ஆக இருந்த ஒருவன், இன்று படீரென்று தன் இதயம் முழுவதும் எதிரொலிக்கும் 'அத்தான்' என்ற பந்தச் சொல்லுக்குப் பாத்தியம் ஆகிவிட்டதை நினைத்தபோது, அவளுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது!

காதலின் ஜீவ சக்தி, உணர்ச்சிகளின் இயல்புகளில் மட்டுமல்ல, உயிரின் பாசத்திலே கூட புதுமையை மலர வைத்து விடுகின்றது.

நெருக்கமற்றுக் கிடந்த இரண்டு இதயங்களுக்கு மத்தியில் வாஞ்சைகளின் சிறகுகள் விரிக்கப்படும்போது, எல்லாவற்றையும் கடந்த ஒரு பிணைப்பு—எல்லா உணர்வுகளையும் ஊடுருவிய ஓர் இணைப்பு நிகழ்ந்துதான் விடுகிறது. இந்தச் சங்கமத்திற்குப் பெயர்தான் காதலா? ஆமாம்!

அல்லிக்கு எப்பொழுதுமே இன்றுபோல இவ்வளவு அழகானதாக உலகம் இருந்ததில்லை. கண்ணில் பட்ட பொருளெல்லாம் 'காவிய மகத்துவம்' பெற்றுவிட்டதாக தோன்றச் செய்யும் இந்தச் சக்தி, காதலைத் தவிர வேறு எதில் இருக்கிறது?

அல்லியின் விழிகள் கிழக்கு வானத்தைச் சந்தித்தன. இப்போது, அங்கு சற்று முன் சிந்திக்கிடந்த இரத்த சிவப்பு இல்லை. மங்கலான வெண்மை—பயத்தால் வெளிறிய முகத்தைப் போல மங்கியதொரு வெளுப்பு அதில் பரவியிருந்தது. அந்த சிவப்பைப் போல இந்த வெளுப்பு, அப்படி ஒன்றும் பார்ப்பதற்கு நன்றாகத் தோற்றம் தரவில்லை. இதைக்கண்ட அல்லியின் முகம் ஏனோ திடீரென்று வாடியது. திருப்தியற்ற நினைவுகள் அவளது உள்ளத்தை முற்றுகையிடத் தொடங்கி விட்டன.

ஒரு விதத்திலே நம்ம அத்தானோட மனசும் இந்த கிழக்கு வானத்தைப்போலத்தானே இருக்கு! ஒரு சமயத் திலே சிவப்பு: இன்னொரு நேரத்திலே வெளுபபு; இன்னும் ஒரு வேளையிலே காட்டேரி'யைப்போல கறுப்பு! அவுங்க மனசும் கிட்டத்தட்ட இப்படித்தானே இருக்குது?

'அன்னிக்கு ஒரு நாள் 'டிக்கெட்டுக்காரர்' கிட்டே அகப் பட்டுக்கிட்டபோது அவுங்க பேசின சட்டம், போன வாரம் அந்த சாத்தையன் தன்னைப்பத்தி ஏதோ சொன் னதைக் கேட்டுக்கிட்டு உண்மை புரியாம அவுங்க செஞ்ச ஆர்ப்பாட்டம்!... ... அம்மம்மா!... ...'

நடந்ததை இப்போது நினைத்துப் பார்த்தபோது அடி வயிற்றிலிருந்து எழுந்த விம்மலை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள் அல்லி. ஆனால் நெஞ்சிலிருந்து பிரவகிக்கும் நினைவுகளை அவளால் அடக்க முடியவில்லையே!

நினைவுகளே இப்படித்தான், சனியன்கள்! அவைகள் 'வா' என்ருலும் வருவதில்லை. 'போ' என்ருலும் போவதில்லை. இஷ்டப்பட்டால், வருவதும் இஷ்டம் போலப் போவதும்!...அடப் பிசாசுகளா!

'அன்னிக்கு அந்தச் சிங்கப்பூரு 'சாத்தானை'க் கண்டுப் பிட்டு மயக்கம்போட்டு விழுந்தவ மறு நாள் சாயந்தரம் தான் கண் விழிச்சுப் பார்த்தேன். என் எதிர்த்தாப்பிலே நின்னுக்கிட்டுஇருந்தாங்க. நான் மயக்கம்தெளிஞ்சதைப் பாத்திட்டு, அவுங்க ஆசையோட பாசமா பேசுவாங்கன்னு நினைச்சு நான் அவுங்களையே ஆவலோடே பார்த்தேன். ஆனல் அவுங்க என்னைப் பார்த்து 'உர்'ன்னு மூஞ்சியை வச்சிக்கிட்டு''ஏ அல்லி! நான் ஒன்னை கேட்கிற கேள்விக்கெல்லாம் ஒளிக்காம 'டக்' 'டக்'குன்னு பதில் சொல்லணும். ஏதாவது ஒளிச்சியோ, அப்புறம் தெரியும்சேதி! ஆமாஞ்சாமிஆணை'ன்னு பீடிகைபோட்டுக்கிட்டு அவுங்க கேள்விகளைக் கேட்டப்போ, 'இந்தக் கேள்விகளைக் கேட்கிறதுக்கு முன்னலே,எனக்கு அவுங்க கையாலேயே ஒரு துளி விஷத்தைக் கொடுத்திருக்கக் கூடாதா?'ன்னுதான் தோணிச்சு.

'என்னென்ன கேள்விங்க?... ... ...? எப்படிப்பட்ட வார்த்தைங்க?' இங்கே நீ வர்றதுக்கு முன்னலே ஊரிலே என்ன செஞ்சிக்கிட்டிருந்தே? உனக்கும் சிங்கப்பூர் சாத்தையாவுக்கும் எத்தனை நாளாத் தொடர்பு? அப்புறம் ஏன் அவனை விட்டுட்டு ஓடியாந்தே?'ன்னுல்லாம் கேட்டு என்னேட உசிரையே கருக வெச்சாங்களே! அதுக்கப்புறம் நான் அவுங்க காலிலே விழுந்து, நடந்த விஷயத்தை எல்லாம் ஒண்ணு விடாம சொல்லி அழுத பிறபாடு, அவுங்க துடிச்சத் துடிப்பு...!

''உன்னைப்போயி சந்தேகப்பட்டேனே அல்லி? உண்மையை உனக்கு முன்னமேயே செந்தாமரைசொல்லிச்சு.

இருந்தாலும் எனக்கு சந்தேகம் நீங்கலே; அதனுலே தான் உன்னையே கேட்டேன்; தப்பா நினைச்சுக்காதே அல்லி; தயவு செஞ்சு என்னை, மன்னிச்சுக்க அல்லி''ன்னு அவுங்க கெஞ்சின கெஞ்சல்! பாவம், அதைப் பாத்தப்போ எனக்கே கூட மனசு கஷ்டமாகத்தான் இருந்துச்சு.

'அன்புள்ள இடத்திலேதான் ஆத்திரமும் இருக்கும்! என்மேலே அவுங்களுக்கு அவ்வளவுபிரியம்இல்லேன்னு, எதுக்காக இந்தசிங்கப்பூர்க்காரன்சொன்னதைக் கேட்டுப் புட்டு அவ்வளவு துடிதுடிக்கணும்?கடைசியிலே, உண்மை புரிஞ்சதுக்கப்புறம் என்னோட முகத்தை நிமிர்த்தி 'கண்ணுல்லே' இதுக்காகவா அழுகிறது? யாரு கோவிச்சுக்கிட்டது! உனக்குச் சொந்தமானவன்தானே?அதுக்காக இப்படிக் கண்ணுலே தண்ணி விடலாமா? எங்கே, என்னைப் பாத்துக் கொஞ்சம் சிரி; கொஞ்சம்! ம்... ... இன்னும் கொஞ்சம் ...!'ன்னு அவுங்க கொஞ்சின கொஞ்சல்; இருந்தாலும் அவுங்களுக்குக் கொஞ்சம் கூட வெட்கமே இல்லே; பாவம், அத்தான்!''

பாசத்தின் உணர்வுகள் பச்சாதாபத்தினுல் பதை பதைத்தன.

அல்லியின் கடை விழிகளில் லேசாக நீர் தேங்கியிருந்தது. அது என்ன, ஆனந்தக் கண்ணீரா? ஆமாம், அப்படித்தான் இருக்கும்!

தாபத்தின் துடிப்புக்களை தாளமாகக் கொண்டு மீண்டும் நினைவுகள் இசைபாடத் துவங்கின.

''என்ன இருந்தாலும் அவுங்களுக்கு இவ்வளவு கோபமும் முரட்டுத் தனமும் இருக்கக் கூடாது. இஷ்டப் படி பேசுறதும் கட்டுப்பாடு இல்லாமல் நாலு பேர் நாலு சொல்லும்படியா நடக்கிறதும்...! இருக்கட்டும்; என்

கழுத்திலே தாலி ஏறட்டும். பிறகு நான் சொன்னபடி தான் அவுங்க நடக்கணும். இதுபோல,கண்டபடி'காளை' மாதிரி சுத்தறதுங்கிற பேச்சு, அதுக்கப்பாலே இந்த அல்லிக்கிட்டே நடக்காது.''

இனம் புரியாத நம்பிக்கையும் பலமும் அவளதுசோர்ந்து கிடந்த மனசை நிமிர்த்திவிட்டன. அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவளது விழிகள் வெளிவானின் விளிம்பு கட்குத் தாவின. அந்தப் பார்வையில் 'மகத்தான்தோர் புதிய பொறுப்பினை ஏற்கப் போகிறோம்' என்ற பெருமிதம் மட்டுமா இருந்தது? இல்லை; பாவத்தின் பாதங்களில் சுருண்டு கிடக்கும் ஓர் ஆத்மாவைத் தூக்கி நிமிர்த்தப் போகிறோம், என்ற நிறைவும், 'இருண்டு கிடக்கும் ஒரு வாழ்க்கைக்கு ஒளி ஊட்டப் போகிறோம்' என்ற நிம்மதியும் கூடத் தான் சுடர் விட்டன.

அருணாசலத்தின் இருட்டிப் போன வாழ்வில் ஒளி ஏற்ற வந்த அழகுத் தீபமா அல்லி?

ஆமாம், அவள் அப்படித்தான் நினைத்தாள்.

அருணாசலத்தின் 'பாலைவன' உள்ளத்தில் 'வசந்த'த்தைப் பரப்ப வந்த தெய்வமா அல்லி...?

ஆமாம், அல்லி அப்படித்தான் கருதினாள்.

அருணாசலத்தின் பொய்மை சூழ் வாழ்விற்குப் புது ரத்தம் பாய்ச்சவந்த 'சத்தியதேவதை'யா அல்லி... ...?

ஆமாம், ஆமாம்! அல்லியின் மனக் குரலில் இந்த எண்ணங்கள் தாம் ஒலித்துக் கொண்டிருக்கின்றன!

அழகுத் தீபத்தின் அற்புதச் சுடரை காலமெனும் புயற் காற்று அசைக்கலாம். ஆனால், அந்தப் புனிதச் சுடரை அதனால் அணைத்து விட முடியாது. எந்தப் புயலுக்கு நடுவிலும் அந்தப் புனித தீபம்—அழகுத் தீபம்—'ஆடும் தீப'மாக நின்று ஒளி வீசிக்கொண்டே இருக்கும்!

பாலையிலே வந்துதித்த அந்த வசந்தத்தைஇயற்கையின் கொடுமைகள் சாகடிக்கநினைக்கலாம். ஆனால் 'வசந்தம்' சாகாது. அதன் இலட்சியங்கள் முடிவு பெறும் வரை அது சாகவே சாகாது.

பொய்மையின் இருண்ட நகங்களில் 'சத்திய தேவதை' யின் இரத்தக் கறை படியலாம். ஆனால் வாழ்வின் உயிர்ப்பாக இருக்கும் அவளை அதனால் கொன்றுவிட முடியாது. நிச்சயமாக, சத்தியமாக முடியவே முடியாது!

அல்லி ஒரு தீபம்; அல்லி ஒரு வசந்தம்; அல்லி ஒரு சத்திய தேவதை! அவள் வாழ்வாள்; அவளது இலட்சியங்களும் வாழும்; அருணாசலம் வாழும்வரை; அல்லது அவளது தடம் புரண்ட வாழ்வு செத்து வீழும் வரை!

விதியின் சட்டமா இது? இல்லை; விதியே இதுதான்!

அல்லியின் சிந்தனைகள் அவளது உள்ளத்தைப் போலவே மெய்ம்மறந்து திரிந்தன.

சுவர்க் கடிகாரம் ஏழு முறை ஒலித்து நிறுத்தியது.

''ஐயய்யோ, இவ்வளவு நேரம் ஆயிடுச்சே?'' என்று அவசர அவசரமாக எழுந்த அல்லி அறைக்கு வெளியே நடந்தாள்.

எதிரே வந்தாள் நாச்சியாரம்மா. ''ஏம்மா, இப்பத்தான் எழுந்திரிச்சியோ? சீக்கிரம் பல் விளக்கிவிட்டு வா;சூடா இட்லி தர்றேன்!''

''சரிங்கம்மா.''

அல்லி நடந்தாள். அவள் நடையில் ஒரு துள்ளல். ''அவுங்களுக்குத்தான் என் மேலே எவ்வளவு பிரியம்.''—அவளது மனம் நினைத்தது.

இலைக்கு முன் உட்கார்ந்து கொண்டு ''ஏன் ஆச்சி, வாத்தியாரய்யா வரலியா?'' என்று கேட்டாள் அல்லி.

''அவரு பூஜை பண்ணிக்கிட்டு இருக்காரு அம்மா; வர நாழி செல்லும்; நீ சாப்பிடு.''-என்ற நாச்சியாரம்மா வின் குரலில் பரிவு இருந்தது.

சாப்பிட்டுக் கொண்டிருந்த அல்லியின் விழிகளைக் கூடத்தில் வைக்கப்பட்டிருந்த 'சலங்கை' இழுத்தது.

'இனிமே அதை நாம்ப கட்டிக்கிடவே முடியாதா? நிரந் தரமா அதை விட்டுட வேண்டியதுதானா? ம்! கல்யாணம் ஆயிட்டப்புறம் 'குடும்பம்' நடக்கிறதை கவனிக்கிறதா, அல்லது 'சலங்கை'யைக் கட்டிக்கிட்டு ஆடறதுக்குப் போறதா? வேணுமானா எப்பவாச்சும் நான் ஆடறதைப் பார்க்கணுமுன்னு அத்தான் சொன்னா அப்ப கட்டிக்கிட லாம்... ...!

முடிவுகளே முடிவுகளுக்கு மருந்தாக இருந்தன.

''நாளன்னிக்குத்தானே அம்மா, நிச்சயதாம்பூலம்?''

''ஆமாம்மா!''

அல்லிக்குச் சொல்வதற்கே வெட்கமாக இருந்தது.

''அப்போ, நாளை ராத்திரிக்கே அவுங்க எல்லாம் வந்தி டுவாங்க. அவுங்களோட 'அது'வும் கூட வருமில்லே?''

நாச்சியாரம்மாவின் குரலில் ஏன் அந்தக் குறும்பு?

''எது?''

தெரியாதவள்போல் கேட்டாள் அல்லி.

''எதுவா? புரியாததுபோல நடிக்கலாமுன்னு பார்த் தாயா? எங்கே என் முகத்தைப்பார்த்துச் சொல்லு. நான் எதைக்கேட்டேன்னு நெசமா உனக்குத் தெரியாதா அல்லி?''

அல்லிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

''போங்க ஆச்சி''!

கையைக் கழுவிவிட்டு மானைப்போலத் துள்ளி அறைக்கு ஓடினாள் அல்லி.

படுக்கையில் புரண்ட அல்லி மீண்டும்கனவில்ஆழ்ந்தாள். கனவுகளைப்போல உயிருக்குப் பலம் தரக் கூடியது உலகத்தில் வேறு என்ன இருக்கிறது? எதுவுமில்லை. ஆகையினால், வாழ்க கனவுகள்!

''உனக்கு ஒரு தபால் வந்திருக்கும்மா!''

''அவுங்க லெட்டராத்தான் இருக்கும். இப்ப வேறுயாரு நமக்குக் கடுதாசு எழுதப் போறாங்க?''

கடிதத்தை எடுத்தாள்.

'அவுங்கள்து இல்லியே? யாரு, சுகுணாவா...? ...பேரே புதுசா இருக்கே... ...'

கடிதத்தைப் பரபரப்புடன் படிக்கத்துவங்கினாள். அவளது உதடுகள் நடுங்கின... ...!

''அன்புள்ள அல்லி,

முன்னே பின்னே தெரியாம லெட்டர் எழுதறேன்னு தப்பா நினைச்சுக்காதே; சந்தர்ப்பம் இப்படி ஆயிடுச்சு.

என்னோட அத்தான் அருணாசலத்தை நீ கட்டிக்கப்போறியாமே? இது உனக்கே நல்லா இருக்கா?

அவுங்க அப்பா-என்னோட அம்மாவோட அண்ணன். எங்க அம்மா சாகிறபோது அவுங்க கையாலேதான் என்னைப் பிடிச்சுக் கொடுத்திட்டுச் செத்தாங்க. அதிலேருந்து 'அதுக்கு நான்தான்; எனக்கு அதுதான்'னு பெரியவங்களே தீர்மானிச்சு வச்சுட்டாங்க.

இப்போ இடையிலே வந்த நீ அந்த முடிவை மாத்தி விடப் போறியா?

எனக்குக் கடவுள் தந்த ஒரேஒருநாதியே எங்க அத்தான் தானே?அதையும் நீ பிடுங்கிக்கப்போறியா? அப்படின்னு என்னோட ஆசையெல்லாம் மண்ணுதானு? என்னோட நெனைப்பு எல்லாம் பகலிலே கண்ட கனவைப் போல, பழசாப்போன கதையைப்போல பாழாகப் போகவேண்டியதுதானு?

நீயே நல்லா யோசிச்சுப்பாரு அல்லி. யோசிச்சுப் பார்த்திட்டு ஒரு முடிவுக்கு வா!

என்னோட அத்தான்தான் எனக்கு எல்லாம். அவுங்களை நான் பிரிஞ்சுட்டா,நீ எங்களைப் பிரிச்சுட்டா அப்புறம்என் கதி... ...?

ஒரு பொண்ணை நீயே வீணு கொன்றுபோடப் போறியா அல்லி?...'!

அதற்குமேல் அல்லியால் படிக்க முடியவில்லை.

அல்லியின் தலை சுழன்றது. பிரளயத்தின் கொந்தளிப்பில் அகப்பட்டுக்கொண்ட துரும்பைப்போல அவள் தத்தளித்தாள்.

இதயத்தில் கூடவா எரிமலை இருக்கிறது.

''ஐயோ அத்தான்! அத்தான்!'' அவளது நெஞ்சின் கதறல் அவளைக் கொன்று விடும்போல் ஒலித்தது.

''ஆ...கடவுளே...!''

பாவம் அல்லிக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது.

# நாட்டுக்குத் தேவையான கூட்டுறவு முறை

''பன்னிரண்டு பேர் சேர்ந்து, தொடர்ந்து ஒரு நாவலை எழுதுவதாவது? சுவாரசியப்படுமா? நடை மாறுபாடுகளும், கருத்து வேற்றுமைகளும் குறுக்கிட்டு நாவலின் சுவையைக் குறைத்து விடாவா?'' என்று என்னிடம் சிலர் 'ஆடும் தீபம்' பற்றி ஐய வினா எழுப்பினார்கள். மழுப்பினாற்போல் பதில் சொன்னேன். எனக்குள்ளேயே இந்த ஐயம் இருந்ததுதான் மழுப்பலுக்குக் காரணம்.

ஆனால்—

இதுவரை வளர்ந்து வந்திருக்கிற கதைப்பகுதி அந்த ஐயம் வீண் என்பதை மெய்ப்பித்து விட்டது.

கதாநாயகி அல்லியின் நிலை—அதாவது அவளுடைய அந்தஸ்து சிறுகச் சிறுக, மறைமுகமாக, வெகு அழகாக வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. இப்போது அவளிடம் கிலி இல்லை. மருட்சி இல்லை. தன்னைப் பற்றி, தன்னைச் சுற்றி உள்ளவர்களைப் பற்றி, ஊரைப்பற்றி, உலகத்தைப்பற்றிஅவள் நன்ருகத் தெரிந்து கொண்டவள் ஆகி விட்டாள். பள்ளிக்கூடத்திலே படிக்காததையும், அந்தப் படிப்பிலே அறிந்து கொள்ள முடியாததையுங்கூட வாழ்க்கையில், உலக அனுபவத்தில், நேரில், கண்டு அறிந்து கொண்டு விட்டாள். இனி எந்தச் சக்தியும் அவளை எதுவுமே செய்ய முடியாது. கதையின் முடிவிலே அவள் வீராங்கனையாக நின்று நம்மை நோக்கி வெற்றிப் புன்முறுவல் செய்யப்

போகிருள். 'ஆடும்' தீபத்தைப் படித்த அனைவர் உள்ளங்களிலும் அழியாச் சித்திரமாக ஒளி வீசப் போகிருள்.

கதையும் அதன் வளர்ச்சியும், கதாநாயகியும் மற்ற பாத்திரங்களும், அவர்களின் இன்ப துன்ப அனுபவங்களும் ஆகிய எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். இந்தப் படைப்பைத் திட்டமிட்டபடி வெற்றிகரமாகத் தொடங்கி, வெற்றிகரமாக நடத்திக் கொண்டு போகும் 'உமா'வின் துணை ஆசிரியர், திரு பூவை எஸ். ஆறுமுகத்தின் பணியாற்றும் திறன் அல்லவா இவ்வளவுக்கும் காரணம்? முதற் பாராட்டு அவருக்குத்தான்!

கூட்டுறவு முறை சரியாக இயக்கப் பெற்ருல், எந்தத் துறையிலும் நல்ல பயனை அளிக்கும் என்பதற்கு இந்த 'ஆடும் தீபம்' தொடர்கதையே ஓர் அத்தாட்சி!

'எஸ்லார்வி'

பொறி ஏழு:

# மாற்றமா? தடுமாற்றமா?

நின்று நிதானித்து நெட்டுயிர்த்து நெடுமூச்செறிந்து சிந்தனை செய்வதற்கே அவகாசம் அற்ற முறையில் நிகழ்ச்சிகள் அடுத்தடுத்துத் தொடர்ந்து கொண்டே போயின. அபலை அல்லி திணறினாள், தவித்தாள், தடுமாறினாள்.

கடிதம் முழுவதையும் படிப்பதற்குள்ளாகவே அவள் உள்ளம் கொந்தளிக்கத் தொடங்கி விட்டது. அந்தப் புதிய செய்தியால் ஏற்பட்ட அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு அருணாசலத்தைப் பற்றி அவள் எண்ணமிட முயல்வதற்குள், ''அம்மா!...அல்லி!'' என்று ராஜநாயகத்தின் குரல் ஒலித்தது.

கடிதத்தைக் காண்பிப்பதா, மறைப்பதா, மேற்கொண்டு என்ன செய்வது, எப்படி நடந்து கொள்வது, எதனால் நலம் கிட்டும், எதனால் தீமை ஏற்படும் என்பனவற்றை உடனடியாக முடிவுசெய்வது இப்போது அவளுக்குப் பெரும் பிரச்சினை ஆகிவிட்டது. அதற்குப் போதிய அவகாசம் இல்லை. பிறகு யோசித்துத்தகுந்தபடி நடந்துகொள்ளலாம் என்று எண்ணிக் கடிதத்தைச் சட்டென தலையணையின் அடியிலே மறைத்து வைத்தாள். இதற்குள் ராஜநாயகம் அவள் இருந்த இடத்தை அணுகி விட்டார்.

'அல்லியோட முகத்திலே புது மலர்ச்சி ஒளி வீசுது!' என்று சற்று முன் தமக்குப் பலகாரம் அளிக்கிற போது நாச்சியாரம்மா சொன்னதைக் கேட்டதும் ராஜநாயகத்துக்குப்பலகாரமே இறங்கவில்லை. அங்கே இருப்பே கொள்ளவில்லை. உடனே அல்லியைப் பார்க்கவேண்டும் என்று அவர் உள்ளம் பரபரத்தது. இந்த மலர் முகத்தைக் காணும் ஆவலால் அவர் அங்கே விரைந்து வந்தார்.

அல்லி எழுந்து நின்றாள். அவர் குரலிலே இழையிட்ட மகிழ்வுணர்ச்சி, புதிய செய்தி ஏதோ ஒன்றை அவர் கொண்டு வருகிறார் என்று கட்டியம் கூறிற்று. தன் முகத்தை அவர் பார்வையிலிருந்து மறைத்துக் கொள்ள முயன்றவள் அசப்பிலே லாகவமாக அவர் முகத்தைக் கவனித்தாள். அவரது குரல் கூறியதுஎதுவோஅதையே தான் அவர் முகமும் காட்டிற்று.புதிய ஊரில், புதியமனிதர்களிடையே, புதிய நிலையில் மகிழ்ந்து, முற்றும் புத்தம் புதிய வாழ்க்கையில் ஈடுபட இருக்கிற நிலை. எந்நேரமும் 'புதுமை,புதுமை' என்று கூவியழைத்துக் கொண்டிருந்த அவளுடைய மலர்ந்த உள்ளத்திற்கு இப்போது எந்தப் புதுமையும் வேண்டி இருக்கவில்லை. 'புதுமை ஒரு புற்று; அதனுள் இருப்பது பாம்பு! வேண்டாம் புதுமை!' என்று ஓலமிட்டது உள்ளம்.

''வாங்க!'' சற்று ஒருக்களித்த நிலையில் நின்று கொண்டிருந்தாள்.

அனுபவம் சொல்லாததை வேறு எது சொல்லும்? ராஜநாயகத்தின் குடும்ப அனுபவம்—உலக அனுபவம் கொஞ்சமா? அல்லியின் கரகரத்த குரல் அவரைஅதிர்ச்சியுற வைத்தது. அன்று வரை இல்லாத உணர்வு அவரைத் தூண்டிற்று. பாய்ந்து அவள் முன் புறத்தை

அடைந்தார். அவள் சட்டென்று தலைகவிழ்ந்தாள். அவர் அந்த முகத்தை நிமிர்த்தினர். அந்தச் செயலே அடங்கியிருந்த அவளது துயர உணர்வைத் தட்டி எழுப்பிற்று. ஆயினும் அவள் உணர்ச்சியோடு போராடினுள். மேல் வரிசைப் பற்களால் கீழுதட்டைக் கடித்துக்கொண்டாள். சிரிக்க முயன்ருள். அழுகை சிரிப்பாக மாறினல் எப்படியிருக்குமோ, அப்படி அசடு வழிந்தது. முகம் நிமிர்ந்தபடி இருக்க, கண்கள் நிலத்தை நோக்கிக் கொண்டிருந்தன.

ராஜநாயகம் அவள் நிலை கண்டு திடுக்கிட்டார். ''என்னம்மா இது? ஏன் என்னவோ போலை இருக்கே?'' என்று பரிவுடன் கேட்டார்.

''ஒண்ணும் இல்லீங்க,''

''இல்லே; என் கிட்டே எதையோ நீ மறைக்கிறே. உன் மனசிலே ஏதோ எண்ணங்கள் புரண்டுகிட்டிருக்கு. இதோ பார் அல்லி. இப்பவும் ஒண்ணும் முழுகிப் போயிடலே. இந்த விநாடியிலே நீ ஒரு வார்த்தை சொன்ஞ இப்பவே இந்த ஏற்பாட்டை நான் நிறுத்திடுறேன். உன்னுடை சந்தோஷம் ஒண்ணு தான் எனக்கு முக்கியம்.''

ராஜநாயகம் நீள நெடுகபூத்தொடுத்தாற்போல்சொல்லிக் கொண்டே போனர். அல்லி தெருவை நோக்கி இருந்த ஜன்னல் கதவைப் பற்றிக்கொண்டு பதுமை போல் அசைவற்று நின்று கொண்டிருந்தாள். அப்போதைய நிலையில் ராஜநாயகத்தை நேருக்கு நேர் பார்ப்பதற்கு அவள் மனம் இசையவில்லை; அவளால் முடியவில்லை.

ஏற்பாட்டை நிறுத்திவிடுவதாக அவர் இப்போது எதைக் குறிப்பிட்டுச் சொல்ல இருக்கிறது? கல்யாணத்தைத் தான்.

'கல்யாணத்தை நிறுத்திடுறதா?'

அவளின் உடம்பு சிலிர்த்தது

'பின்னே?...நடக்கிறதா?...சுரு ணு?... அவளோடகதி?...'

அவள் முகத்திலே உணர்ச்சிகள் புரிந்த ஜாலத்தை அவர் கவனிக்க முயன்முர்; அவள் மறைத்துக்கொள்ள முயன் ருள்.

''அல்லி, இதோ, என்னை நிமிர்ந்து பாரம்மா!''

அவள் மெல்ல நிமிர்ந்தாள்.

''என்ன யோசனை? என்ன குழப்பம்!''

''ஒண்ணுமே இல்லீங்க''—மறுபடியும் அவள் சிரிக்க முயன்ருள்.

'பின்னே ஏன் அம்மா என்னவோ போல இருக்கே? ஒரு வேளை—அப்பாவையும் அம்மாளையும் நினைச்சுக்கிட்டியா? இந்த நல்ல நேரத்திலே அவங்க இல்லேயேன்னு வருத்தப்படுறியா?'

அல்லியின் கண்கள் குபீரென்று நீரைக் கக்கின. உள் ளம் ஒரு நொடிக்குள் பல மைல்களையும் பல ஆண்டுகளை யும் கடந்து பின் நோக்கிப் பறந்தது; மாங்குடியை அடைந்தது; பெற்ருேரைக் கண்டது. அவளால் தாங்க முடியவில்லை. இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு வேகமாக ஓடும் புது வெள்ளம் சிறு கண்ணியைக் கண்ட தும் குபீரென்று அதில் பாய்வது போல அல்லியின் நெஞ் சிலே வேறு வகையில் கொந்தளித்துக்கொண்டிருந்த துயர உணர்ச்சி, ராஜநாயகத்தால் நினைப்பூட்டப்பெற்ற பெற்ருேர் நினைவால் அவள் கண் மடையை உடைத்துக் கொண்டு குபீரென்று வெளிப்பட்டது. முன்ருனையால்

முகத்தை மூடிக்கொண்டுவிம்மி விசித்து அழத் தொடங்கினாள்.

''பார்த்தியா' நான் நினைச்சது சரியாய்ப்போச்சு,'' என்று கூறிப் பெருமூச்செறிந்தார் ராஜநாயகம். பிறகு இதமான மொழிகளால் அவளுக்குத் தேறுதல் சொல்ல முற்பட்டார். இப்போது அவர் உடம்பில் படபடப்பு இல்லை; குரலில் பதற்றமும் இல்லை.

''ஒருவேளை உனக்கு இந்தக் கல்யாண விஷயத்திலே ஏதாச்சும்மனக்குறை இருக்குமோண்ணு முதல்லேநினைச்சேன். அந்த நினைப்பு என்னையே ஒருஆட்டம் ஆட்டி வச்சிட்டுது. இப்போ அது இல்லேன்னு தெரிஞ்சதும் கொஞ்சம் நிம்மதி ஏற்படுது. இந்தமாதிரி சமயத்திலே, ஒரு பொண்ணு பெத்தவங்களை நினைக்கப்படாதின்னு எந்தப் பாவியும் சொல்லமாட்டாங்க. ஆனா, நான் என்ன சொல்றேன்னா, புத்திசாலியான நீ...''

''பு...த்...தி... சாலி!'' அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

அம்மா? ஏன் அலுத்துக்கிறே? உன் புத்திசாலித்தனத்துக்கு என்ன? உன் சம்பந்தமா என்மனசிலே உண்டான தகாத நினைப்பை ஒரு பார்வையாலே, ஒரு சொல்லாலே முளையிலே கிள்ளி எறிஞ்ச காரியத்தைவிட வேறே என்னம்மாவேணும் உன்னோட புத்திசாலித்தனத்தை நான் கொண்டாட? இது மாத்திரம் இல்லேஅல்லி;உன்கிட்டே சொல்லிக்கிறதிலே என்ன?உன்னாலே கண்திறந்துவிடப் பட்ட நான் உன் சம்பந்தமா மாத்திரம் திருந்தல்லே; பொதுவாகவே ஒரு நல்ல திருத்தத்தை அடைஞ்சிட்டேன். உண்மையைச் சொல்லணும்னா, நீ இங்கே வந்து சேர்ந்தப்புறந் தான்—உன்னாலேதான்—நான் நல்லவன் ஆனேன், அல்லி.''

இதற்குள் அல்லி துயரம் குறையப் பெற்றவளாய் முகத்தைத் துடைத்துக் கொண்டு ஒரு சிறிது நிதானம் உடையவள் ஆனாள்.

''நிக்கிறீங்களே? உக்காருங்க.''

''ஆமாம்; அது கூடத் தோணலே. நீயும் உக்காந்துக்க''

இருவரும் அமர்ந்தார்கள். ராஜநாயகம் தொடர்ந்து பேசினார்.

''பெத்தவங்களை இந்த மாதிரி சமயத்திலே யாராலேயும் நினைக்காமெ இருக்கமுடியாது. நினைச்சா மனசுக்கு ரொம்பக் கஷ்டமாய்த்தான் இருக்கும். நினைக்காமெ இருக்கணும்னு நான் சொல்லவும் இல்லே. ஆனா, நமக்குள்ள விவேகத்தினாலே வருத்தத்தைக் குறைச்சுக்கணும்னு தான் சொல்றேன். எதனாலே அப்படிச் சொல்றேன்னா, நீ புத்திசாலியா இருக்கறதனாலேதான், உன்னாலே அது முடியுமிங்கிறதனாலேதான். ஒண்ணை நினைச்சுப் பார்; கதி இல்லாமெ, திட்டம் இல்லாமெ, நிர்ப்பந்தம் தாளாமே தறிகெட்டு ஓடிவந்தே நீ. அப்படிப்பட்ட உனக்குப் புகலிடமா என்னை இங்கே முன் கூட்டியே நியமிச்சு வச்சிருக்கான் ஆண்டவன். அவனோட கருணைக்கு இதைவிட என்ன அத்தாட்சி வேணும்? நம்மோட நிலைமை இந்த மட்டும் மேன்மையா இருக்கேன்னு நீ சந்தோஷம்அடையணும். சந்தோஷமாய்த்தான் நீ இருந்துக்கிட்டிருக்கே, இருந்தாலும் ரத்தபாசம் இந்தச் சமயத்திலே...''

திடீரென்று அல்லி மலர் கட்டவிழ்த்து இதழ் விரித்துச் சிரிப்பைச் சிந்திற்று. அந்தச் சிரிப்பின் கிண் கிணி ஓசை அந்த அறை முழுவதும் நிறைந்து காற்றிலே கலந்து மிதந்து வெளியேறிற்று.

''அப்பாடா!'' என்று நிம்மதிப் பெருமூச்செறிந்தார் ராஜநாயகம். 'செவிட்டு மருமகன்கதை மாதிரி நாம் எதையோ

எண்ணிச் சங்கடப்பட்டுக்கிட்டிருக்கறப்ப, இந்த மனிதர் தன் இஷ்டத்துக்கு என்ன என்னவோ சொல்லிக்கிட்டே போருரே!' என்று எண்ணியதும் அல்லிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவள் இயல்பின்படி, 'அழுகையின் நடுவே சிரிப்பு' என்று அமைந்த அவள் வாழ்க்கைத் தத்துவத்தின்படி அவள் கலீரென்று தன்னை மறந்து சிரித்து விட்டாள். ராஜநாயகம் அந்தச் சிரிப்பையும் தம் போக்குக்கு அனுசரணை ஆக்கிக்கொண்டு, 'அப்பாடா!' என்று கூறி நிம்மதிப் பெருமூச்செறிந்ததும், அவளது சிரிப்பு மேலும் தொடர்ந்தது; சிரித்துக்கொண்டே இருந்தாள்,

''அம்மா; இதில்ல அழகு!... இதுதான் பழைய அல்லி. இதை விட்டுப்பிட்டு நீ சும்மா கண்ணைத் துடைச்சுக்கிட்டு, மூக்கைச் சிந்திப் போட்டுக்கிட்டிருந்தா அதை என்னாலே எப்படிச் சகிக்க முடியும் தாயே? நீ சாமானியப் பெண் இல்லே. என்னைத் திருத்தினே; அருணாசலம் பயலை மயக்கித் திருத்தினே; இன்னும் சாத்தையா, தொடப்பக்கட்டை இப்படி எத்தனை பேரை உன் அழகாலே ஆட்டிவச்சு மதியாலே திருத்த நீ பிறந்திருக்கியோ?அழகும் அருளும் அன்பும் பண்புமே உருவான மங்கல தீபம நீ. ஆடாமெ அசையாமெ, பேசாமெ, சிரிக்காமெ பதுமை மாதிரி இருந்திட்டா பேச்சுக்கே இடம் இல்லே. நீயோ ஆடும் தீபமாய்ச் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறே. அல்லி, உன்னோட ஜோதிப் பிழம்பை நாடிவந்து அதன் மேலே மோதற விட்டில் பூச்சிங்க ஒண்ணு ரெண்டில்லே; இன்னும் எத்தனை எத்தனையோ! நீயோ அந்தப் பூச்சிங்களை மடிய அடிக்காமெ இருக்கலாம்; ஆனு!''

'பாம் பாம்' என்ற குழலோசையுடன் தெருவாசலில் கார் வந்து நிற்கும் சந்தடி கேட்டது. தொடர்ந்து கார்க் கதவு திறந்து மூடும் சத்தமும்கேட்டது. ராஜநாயகம் தம் கவனத்தை அங்கே ஓட்டி உற்றுக் கவனித்தார். அச் சமயத்தில் அல்லியின் முகத்திலும் அவர் பார்வை

பதிந்தது. சற்று முன் அங்கே மலர்ந்த சிரிப்பின் சுவடு எங்கே? அந்த முகம் இதற்குள் ஏன் இப்படி இருண்டு விட்டது? அவர் உள்ளம் குழம்பியது. அதே சமயத்தில் நாச்சியாரம்மா அங்கே வந்தாள். "காரிலே யாரோ வந்திருக்காங்க, உங்களைத் தேடிக்கிட்டு," என்றாள். ராஜநாயகம் பெருமூச்சுடன் எழுந்தார்; நிதானமாக நடந்தார். அவர் தலை மறைந்ததும் அல்லி படுக்கையின் மேல் விழுந்தாள்.

அவ்வளவு நேரமும் ராஜநாயகம் பொழிந்து தள்ளிய அன்பு மொழிகளால் அவள் உள்ளம் துன்பத்தை மறந்திருந்தது. அவருக்குத்தான் அவளிடம் எத்தகைய வாத்சல்யம்! பெற்ற தந்தை ஒருவர் தம் மகளிடம் இத்துணை வாத்சல்யம் செலுத்துவாரா? அல்லிக்கு அது பற்றி ஒன்றுமே தெரியாது. அவளுக்குத்தான் அந்த வாய்ப்பு இல்லையே! ராஜநாயகம் சொல்வது போல, எடுப்பில் அவளிடம் எப்படியோ நடந்து கொள்ளத் தலைப்பட்ட அவர் பின்னர் எப்படித்தான் மாறிவிட்டார்! எடுப்பிலிருந்தே அவர் அவளிடம் வாத்சல்ய உணர்வுடையவராக இருந்திருந்தால், அவருடைய 'தந்தையன்பு' இத்தனைச் சிறப்பை அடைந்திருக்காதோ?

ராஜநாயகத்தைப்பற்றி எண்ணமிட்டுக் கொண்டே வந்த அவள் செவியில் அவருடைய சொற்களில் சில ரீங்காரமிட்டன. 'நீ புத்திசாலி!...என்னைத் திருத்தினே; அருணாசலம் பயலை மயக்கித் திருத்தினே; இன்னும் இப்படி எத்தனை பேரை உன் அழகாலே ஆட்டிவச்சு, மதியாலே திருத்தப் பிறந்திருக்கியோ?'

அல்லி சர்ப்பம் சீறுவது போல் பெருமூச்செறிந்தாள். 'நான் மத்தவங்களைத் திருத்திக் குட்டிச் சுவராய்ப் போனேன்; என்னையே என்னாலே திருத்திக்க முடியாமெ இதோ சந்தியிலே நிக்கிறேனே!' அவளின் அடி மனம்

குமுறிற்று. 'புத்தி உள்ளவளா இருந்திருந்தா ஓடற ரெயிலிலே முன்னே பின்னே தெரியாத ஒரு காளையைச் சிநேகம் புடிச்சிருப்பேனா? அதோட பலன் இப்ப என்ன ஆச்சு?'விடிஞ்சாகல்யாணம்;பிடிடாபாக்குவெத்திலையை' ன்னு இருக்கிற நிலைமையிலே பூகம்பம்னு ஏதோ சொல்லுவாங்களே, அந்த மாதிரி இல்ல வெடிச்சு வருது சேதி! 'அருணாசலம் பார்வைக்கு ஒரு மாதிரியா இருந்தாலும், பேச்சு, நடவடிக்கை எல்லாம் ஒரு மாதிரியா இருந்தாலும், மனசு சுத்த வெள்ளை'ன்னு வாத்தியாரையாவும் சொன்னாங்க; ஆச்சியம்மாவும், சொன்னாங்க. சுகுணாவோட கடுதாசு என்ன சொல்லுது? கறைபடிஞ்ச, கவலை நிறைஞ்ச நெஞ்சின்னு இல்லே சொல்லுது? வயசுப்பொண்ணு ஒருத்தி மனசுவிட்டு எழுதக் கூடிய அளவு கடுதாசிலே எழுதியிருக்கா. எழுதாத சங்கதி இன்னம் என்ன என்ன இருக்குமோ?...'

வாத்தியாரையாவின், 'ஓகோ' என்ற சிரிப்பொலி அவள் கவனத்தை ஈர்த்தது. அடுத்து அவர் பேசிய சொற்கள் சிலவும் காதிலே விழுந்தன; கவனித்தாள்.

''நல்லாச் சொன்னீங்க பலராமையா; நல்லாச் சொன்னீங்க!''

''அது சரி; எதுக்கு நீங்க இப்போ இப்படிச் சிரிச்சீங்க?''

''எதுக்கா? அல்லிக்குப் பேசவராது; கொச்சைத் தமிழ் தான் பேசவரும்னுநான் சொல்லிவாய்மூடுறதுக்குள்ளே, 'அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு வேணாம்; நான் கவனிச்சுக்கிறேன்'ன்னு நீங்கசொன்னதும்எனக்குச்சிரிப்புத்தாங்க முடியல்லீங்க. இப்பவெல்லாம் சினிமாவிலே பாட்டுக்குத்தான் இரவல் குரல்னா, நீங்க பேச்சுக்குக்கூட இரவல் குரல் ஏற்பாடு பண்ணிடுவீங்க போல் இருக்கேன்னு நினைச்சேன். அப்படியானா பிரபல நடிகர், நடி

கைன்னு ஜொலிச்சு நட்சத்திரம்னு பேர் வாங்கறவங்க ளுக்குப் படத்திலேஎன்னவேலே? உடம்பைக் காட்டி உதட்டை அசைக்கிறதுக்கு ஆயிரக்கணக்கான தொகை! இது அதிசயம்இல்லீங்களா பலராமையா?''

பலராமையா என்ற சினிமாக்கம்பெனி முதலாளி ஒருவர் வந்திருக்கிருர்; அல்லி படத்தில்நடிக்க வேண்டும் என்று அவர் கேட்கிருர். ராஜநாயகம் அவரோடுபேசுகிருர்— அல்லி இதைப் புரிந்து கொண்டாள். ஆனல் வாத்தியா ரையாவின் நோக்கம் என்ன? மறுப்பா, இணக்கமா?-அது புரியவில்லே. சற்று முன்புறம் சென்று உற்றுக் கேட்கத் தொடங்கினள்.

பலராமையா லேசாக நகைத்தார். பிறகுசொன்னர்:

''நீங்க சொல்றதெல்லாம் ரொம்ப சரிதான், ராஜநாய கம்; இந்த இடத்திலே நாம இன்ஞெரு விஷயத்தையும் கவனிக்கணும். அதுதான் பொதுமக்களோட ரசனே. இது தொழிலுக்கு முக்கியம்! இல்லீங்களா? அந்தப் பொண்ணு சூட்டிகை உள்ளது. படத்திலே அதுஆடின ஆட்டத்திலே, அதன் முக பாவத்திலே நான் அதைக்கண்டுக்கிட்டேன். அழகி படக்கம்பெனியாரும் சொன்ஞங்க. அந்தப்பாத்தி ரத்துக்கு வேண்டிய வசனங்களே மட்டும் மனப்பாடம் செய்துவச்சிட முடியும்ங்கறநம்பிக்கை எனக்குஉண்டு.''

''எல்லாம் சரிதான். ஆனலும், அப்படியே இருந்தாலும் முதலிலே நான் சொன்னேனே அந்தத் தடையில்லமுக்கி யம்...?''

''அல்லியோட கல்யாணத்தைப் பற்றித்தானே சொல் றீங்க?'

அல்லி பெருமூச்செறிந்தாள்.

''ஆமாம், இனிமே அல்லிக்கு நான் கார்டியன் இல்லே.''

''வச்சிருக்கிற முகூர்த்தத்திலே கல்யாணம் நடக்கட்டுங்க, அப்புறம் படப் பிடிப்பை வச்சுக்கிடுறது.''

''அதுக்கு அல்லியோட புருசன்தான் சம்மதிக்கணும். அவன் கூடச் சம்மதிச்சிடுவான். அவனைச் சேர்ந்த பெரியவங்க சம்மதிக்கணுமில்லே?''

'உங்களைப் போல உள்ள பெரியவங்க, அனுபவசாலிங்க எடுத்துச் சொல்லித்தான் சம்மதிக்க வைக்கணும். எத்தனையோ பேர் கல்யாணங் கட்டிக்கிட்ட அப்புறமும் ஆடவும் பாடவும் நடிக்கவும் உத்தியோகம் பார்க்கவும் செய்யலீங்களா?'

'பலராமையா, ஒரு படம் எடுத்தாலே உலக அனுபவம் ஒண்ணுகூடவிடாமெ தெரிஞ்சிடும். நீங்களோ உருப்படியா மூணு படம் எடுத்து நல்ல பலனையும் கண்டவங்க. இப்படியே பேசறீங்களே? கலைப்பித்தும் பணப்பித்தும் காரணமா எத்தனை பேரோட வாழ்க்கையிலே பிளவு ஏற்பட்டிருக்கு? அதை நீங்க எண்ணிப்பார்க்கவே இல்லையா? பகிரங்கமா பிளவு ஏற்படாமப் போனாலும், உள்ளுக்குள்ளே குமைஞ்சுகிட்டிருக்கிற உள்ளங்கள் எத்தனை தெரியுமா? இதோ பாருங்க. நீங்க பட முதலாளி; பெரிய மனிதர்; என்னைப் பொருட்டாக்கி என் இடம் தேடிவந்து இவ்வளவு நேரம் பேசறீங்க. உங்க மனசை சடக்குன்னு முறிக்கப் படாதுன்னு நானும் ஏன்னவோ பேசிக்கிட்டே வந்தேன். என் மக என் நெஞ்சிலே மண்ணை அள்ளிப்போட்டுட்டுப் போயிட்டா. அதோட ஸ்தானத்திலே தெய்வமாய்ப் பார்த்து இந்தப் பொண்ணு அல்லியைக் கொண்ணுந்து என்கிட்டே ஒப்படைச்சிருக்கு. அது வளமனையிலே வாழப் பிறந்த பொண்ணு. அத்தோட வாழ்க்கையைப் பாழ் செய்ய நான் விரும்பல்லே; அதுக்கும் விருப்பம் இருகாது;

அதைக் கட்டிக்கிடப் போறவனுக்கும் விருப்பம் இராது. இது தான் என்னோட முடிவான பதிலுங்க'

பலராமையா சற்று நேரம் பேசவில்லே.

''அல்லி வளமனையிலே வாழப்பிறந்த பொண்ணுன்னு நீங்க சொல்றீங்க. நானும் அதைஒத்துக்கிடுறேன். ஆனு அத்தோடே, அல்லி வெள்ளித் திரையிலே பிரமாதமாப் பிரகாசிக்கவும் பிறந்த பொண்ணுன்னுநான் நினைச் சேன். இருபதாயிர ரூபாய் சாமானியமான தொகை இல்லே. இளந் தம்பதிகள் சுகமாய் வாழ அது உதவும். எல்லாத்துக்கும் மேலே ஒண்ணு; அல்லி சம்பந்தமா தனிப் பொறுப்பு எடுத்துக்கிட்டு அதனுடைய பரிசுத்தத் தன்மைக்குத் தூளி மாசு கூட ஏற்படாதபடி கண்காணிப் பேன். இது என் மகள் மேலே ஆணையா சத்தியம்!'

ஓடிச்சென்று, 'சம்மதம்' என்று கூற அல்லி துடித்தாள் ஆனால் அப்படிச் செய்யாமல், சிறிது தூரத்தில் ஏதோ செய்து கொண்டிருந்த நாச்சியாரம்மாளை அழைத்தாள். அவள் மூலம் ராஜநாயகத்தை அழைப்பித்தாள்.

'அம்மா, கூப்பிட்டாயா?...'

'ஆமாம்; அப்பா...!'

'அப்பா' என்ற சொல் ராஜநாயகத்தை ஓர் உலுக்கு உலுக்கியது.

''சரின்னு சொல்லுங்க.''

''என்னம்மா சொல்றே? சரின்னு சொல்றதா?...''

''ஆமாம். சினிமாவிலே நடிக்க அல்லிக்குச் சம்மதம்னு சொல்லுங்க.''

ராஜநாயகம் திகைத்தார்.

''அருணாசலத்தைக் கேக்கவேணுமா?''

''கல்யாணம் ஆன அப்புறமில்லே அதெல்லாம்?''

''அதான் நிச்சயமாயிட்டுதேம்மா?''

''அதை ஒத்திப் போட்டுக்கலாம்.''

''எதை?''

''கல்யாணத்தை...!''

''நீ தான் பேசிறீயா?... திடீர்னு ஏம்மா இந்தத் தடுமாற்றம்?''

''என்னவோ, மனசிலே அப்படித் தோணுது. அதையெல்லாம் பற்றி அப்புறம் பேசிக்கலாம், சரி சொல்லி அவரை அனுப்பிடுங்க.''

''தீர்மானமாகச் சொல்றியா அம்மா?''

''ஆமாம் அப்பா.''

ராஜநாயகம் தலை குனிந்தவாறு சற்று நேரம் நின்றிருந்தார். பிறகு மௌனமாக, மெதுவாக, தயங்கியபடி முன்புறம் சென்றார்.

''இரண்டு நாளிலே சொல்றேங்க,'' என்றார் அவர்.

''நல்லது, உங்க பதில் நல்ல பதிலாகவே இருக்கட்டும்.''

சிரித்தமுகத்துடன் பலராமையா சென்றார்.

ராஜநாயகம் வீட்டின் உள்ளே வந்தார்.

''அல்லி...!''

அல்லிக்கு ஏனோ அழுகை குமுறிக்கொண்டு வந்தது. அதை மிகவும் பாடுபட்டு அடக்கிக்கொண்டு பேசினாள்.

''அப்பா, என்னை ஒண்ணும் கேக்காதீங்க. என் மனசு சரியா இல்லே, கொஞ்ச நேரம் தனியா இருக்க விடுங்க. 'இப்பவும் ஒண்ணும்முழுகிப்போயிடலே; நீ ஒருவார்த்தை சொன்னா இப்பவே இந்த ஏற்பாட்டை நிறுத்திடு றேன்; உன்னோட சந்தோஷம் ஒண்ணுதான் 'எனக்கு முக்கியம்'னு கொஞ்ச நேரத்திற்கு முன்னே சொன்னீங் களே? 'அல்லிக்கு உடம்பு சுகமில்லே; அதனாலே கல் யாணம் இப்போதைக்கு நிறுத்தல்'னு அவங்களுக்கு எழுதிடுங்க அப்பா!''

ராஜநாயகம் பெருமுச்செறிந்தார். அவர் முகத்தில் ஈயாடவில்லை.

''அல்லி, நீ புத்திசாலி. தவறு எதுவும் நினைக்கமாட்டே, சொல்லமாட்டே, செய்யமாட்டே. அந்த ஒரே நம்பிக்கை யிலே நீ சொன்னபடி அவங்களுக்கு எழுதிடறேன். ஆனா உன்னோட மனமாற்றத்துக்குள்ளே ஏதோ பயங்கரமான காரணம் புதைஞ்சிருக்கிறதாக எனக்குத் தோணுது. அது என்னன்னு தெரிஞ்சுக்காத வரையிலே எனக்குச் சோறு தண்ணி இறங்காது; ராத்தூக்கம் வராது. இப்போ இல்லாவிட்டாலும், கூடிய சீக்கிரம் அதுஎன்னங்கறதை உன்னோட அப்பாவுக்கு சொல்லிடு அம்மா.''

'ஆகட்டும் அப்பா. கட்டாயம்சொல்லுவேன்' சிரித்தபடி இவ்வாறு கூறிய 'மக'ளின் முகத்தை ஏறிட்டுப்பார்த் தார், 'தந்தை.' அவள் திடீரென்று ஒரு பத்து ஆண்டு களைக் கடந்துவிட்டவள் போல் மட்டுமின்றி, கல்வி கேள்வி, அறிவு அனுபவங்களில் மிகத் தேர்ச்சியுடைய 'நகரத்துப்பெண்' போலவும் அவர் கண்ணுக்குத் தோன் றினாள்.

'யாரப்ப நீ?' —தெரு வாசலில் காரை நிறுத்தி விட்டு, "அல்லியம்மா இருக்காங்களா?' என்று கேட்டுக் கொண்டே படியேறிய மனிதனை நோக்கிக் கேட்டாள் அல்லி.

'பலராம் பிக்சர்ஸிலிருந்து வர்றேன். நீங்கதான் அல்லி அம்மாவா? கூட்டிக்கொண்டு வரச்சொன்னாங்க.'

''யார் பலராமையாவா?''

''இல்லே உங்க ஐயா—ராஜநாயக ஐயா.''

அல்லி உள்ளே சென்றாள்; ராஜகுமாரிபோல் திரும்பி வந்தாள். அவளைச் சுமந்துகொண்டு கார் பறந்தது.

'அருணாசலம், நீங்கதான் என்னோட உசிரு. ஆனா அது நீங்க களங்கமில்லாதவரா இருந்தாத்தான். நீங்க மாசு உள்ளவரா இருந்தா என் உசிரு செத்தது. அப்புறம் நான் நடமாடும் பிணந்தான். அந்த உண்மை தெரியற வரைக்கும் இந்த ஈடுபாடு. உண்மை எப்படி இருக்கும்?...''

காரில் போகிறபோது மட்டும் அல்ல; எப்போதும் அவளுக்கு இதுவேதான் சிந்தனை. தன் உள்ளத்தை மரத்த நிலைக்கு உட்படுத்தும் நோக்கமும் இந்தப் புதிய ஈடுபாட்டிலே நிறைவேறும் என்பது அவள் எண்ணம். ஆனால் ராஜநாயகத்தினிடம் எதுவுமே சொல்லாமல் மறைத்து வைத்தது அவர் மன நிலையை அவள் அறிந்திருந்ததால் மட்டும் அல்ல; அதனால் பெரிய விபரீதங்கள் நிகழ்ந்து விடுமோ என்ற அச்சத்தினாலுந்தான்! சுகுணா என்ற பெண்ணை நேரில் பார்த்து அவள் அனுமதி பெற்றுப் பிறகு அருணாசலத்தை மணக்கவேண்டும் என அவள் எண்ணினாள்.

கார் ஓடிக்கொண்டே இருந்தது.

''அல்லி!...''

''வாத்சல்யம் ததும்ப அழைத்துக்கொண்டே உள்ளே நுழைந்த ராஜநாயகத்தை நாச்சியாரம்மா எதிர் கொண்டாள்.

''என்ன இது? நீங்க கூட்டிக்கிட்டுவரச் சொன்னதாக சினிமாக் கம்பெனி ஆள் வந்து அதைக் காரிலே கூட்டிப் போனானே?''

''ஆ!...என்ன?...நான் கூட்டிக்கிட்டு வரச் சொன்னேனா? ஐயையோ! யார் வந்தாங்க? எங்கே இட்டுப் போனாங்க?''

கேட்டுக்கொண்டே வந்தவர், நாச்சியாரம்மாவின் கையி லிருந்த கடிதத்தைக் கவனிக்கத் தவறவில்லை.

ராஜநாயகம் வெடுக்கென்று கடிதத்தைப் பிடுங்கிப் படித்தார். ''அட பாவிப்பயலே!'' என்று கூவினார்.

''வாத்தியாரையா!''

ராஜநாயகம் கண்டார். நேர்முகமாக அருணாசலத்தையே கண்டார்.

''பாவி! மகாபாவி!''—பாய்ந்து அவன் கழுத்தைப் பிடிக்கப்போனார். அவன் தப்பித்துக்கொண்டு தூர விலகி, ''வாத்தியாரய்யா! பைத்தியம் பிடிச்சிட்டுதா?'' என்றான்.

''என் மகளை அநியாயமாகக் கொன்னுப்பிட்டேயடா பாவி! அவள்ஏன்கல்யாணத்தைஒத்திப்போட்டாங்கறதை இந்தக் கடுதாசில்லே சொல்லுது?''

அருணாசலம் அவர் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் படித்தான். ''சுகுணா...! இப்படி ஒரு உறவுப் பொண்ணே எனக்குக் கிடையாதே!'' என்றான்.

''சீ! மூடுடா வாயை! குட்டு வெளியானதும் இப்படி ஒரு புளுகா?'' என்று சீறினர் ராஜநாயகம். அருணா சலம் பொறுமையோடு பேசினன். கடிதமும் புரளி; அல்லி கடத்தப்பட்டிருப்பதும் மோசடி என்ற முடிவை இருவரும் எட்டினர். உடனே 'டாக்ஸி' பிடித்து பலராமையா சினிமா கம்பெனியை நோக்கி விரைந்தனர்.

வழியில் பரதகலாகேசரி கனகசபை எதிர்ப்பட்டார்.

''சென்டிரல் ஸ்டேஷனிலே அல்லியைப் பார்த்தேன்,'' என்று கனகசபை முடிப்பதற்குள் அருணாசலம் டாக்ஸி டிரைவரை, ஊக்கினன். ''ஐயோ அல்லி'' என்று ஆசனத்தில் சாய்ந்தார் வாத்தியார் ராஜநாயகம்.

# பாரதியின் அல்லி

எல்லோரையும் போலவே தொடர்ந்து இந்தப் பகுதியைப் படித்துக்கொண்டு வந்த நான் 'சபாஷ்' போட்டுக்கொண்டிருந்தேன். 'அடுத்து என்ன?' என்று ஒவ்வொரு இதழ் வரும் நாளையும் எதிர்பார்த்திருப்பேன். இதே கேள்வியை வாசகர்கள் என்னிடம் கேட்கவேண்டும் என்பதற்காக திரு. எல்லார்வி அவர்கள் கதையைபுதிய கோணத்தில் திருப்பி விட்டு விட்டார்கள். வீரத் தமிழ் மகளான அல்லியை கண்ணீர்விட்டு, நல்லதங்காள் மெட்டில் அழுது பாடவைக்க ஏனோ என் மனம் இடம் தரவில்லை. முதலில் அவள் அதை விரும்ப வேண்டுமே! பாரதியும், முறம் கொண்டு புலியைத் துரத்திய தமிழ்ப் பெண்ணும் அவளுக்குத் தைரிய மூட்டுகின்றனர். அவளுக்குப் பிறந்த அந்தத் துணிச்சலில் இதோ, என் பேனு ஓடத் தொடங்கிவிட்டது!

ஏ. எம். மீரான்

பொறி எட்டு:

# தூவானம் விடவில்லை!

'சரக்'என்ற பேரிரைச்சலுடன் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு முன்னால் வந்து நின்றது டாக்ஸி. மயங்கிக் கிடந்த ராஜநாயகத்தை அடியோடு மறந்து விட்ட அருணாசலம் தலை தெறிக்கஓடினான். இரண்டுமூன்று வண்டிகள் அடுத்தடுத்துபுறப்படத் தயாராயிருந்தன. இவற்றில் எந்த வண்டியில் அல்லியைத் தேடுவது? பதைபதைத்த அவனுடைய உள்ளம் விநாடி நேரம்தான் இந்தக் கேள்வியைச்சுற்றி வந்தது. எதிரே நின்றுகொண்டிருந்த ரயிலை நோக்கிவிரைந்தான். ஆற்றாமையும் ஆவலும் விழிகளில் அலைமோதிக் கொண்டு வந்தன. அல்லியைக் காணவில்லை.அவன் ரெயிலில் பிரயாணம் செய்தபோது 'டிக்கட்இல்லாப் பிரயாணி' என்ற கெட்ட பட்டத்தை அவனுக்குவரவொட்டாமல் காப்பாற்றிய அந்த அல்லியைக் காணவில்லை.அவனை மனிதனாக்கியஅல்லியைக் காணவேயில்லை. மூன்று ரெயில்களிலும் கவனமாகத் தேடினான். ஆட்டு மந்தை போல அலை மோதிக் கொண்டு வந்தமனிதக் கூட்டத்துக்குள் புகுந்து சென்று ஆராய்ச்சி நடத்தி முடித்து மிகவும் சோர்ந்து விட்டான் அருணாசலம்.

மயக்கம் தெளிந்த ராஜநாயகம் மேல்மூச்சு வாங்கியபடி காரிலிருந்தார். உடலும் உள்ளமும் வேர்த்து விட்டதால்

அரைக்கண் பார்வையோடு அருணுசலத்தின் வருகை யையே கவனித்துக் கொண்டிருந்தார். அவருடைய அருமை மகள் ஒருநாள் கையையும் வாயையும் கட்டி விட்டுப் போனுளே? அப்போது கூட அவர் இவ்வளவு அதிகமான துயரத்தை அனுபவித்ததில்லை. நேற்று வந்தவள், அசல் கட்டுப்பட்டியாக—அநாகரீகத்தின் வாரிசாக வந்த அந்த அல்லி அவருடைய உள்ளத்தில் பாசத்தை இழையோடச் செய்ததோடு, உயிரைக் கூட அவளிடம் ஒப்படைக்கும் நிலைக்குக் கொண்டு வந்திருந் தாள். அருணுசலத்தின் தோற்றத்தைக் கண்டதும் அவ ருக்கு நிலைகொள்ளவில்லை. சக்தியனைத்தையும் ஒருங்கு திரட்டிக் கொண்டு எழுந்தார். ''என்னப்பா, என் அல்லியைக் கண்டாயா?'' என்று துயரத்துடன் கேட் டார். அவர் குரலில் ஆவல் படர்ந்திருந்தது. அவரு டைய கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல், கத வைத் திறந்து கொண்டு காருக்குள் உட்கார்ந்தான் அருணுசலம். இவர்களிருவருக்கும் இங்கே வேலையில்லை போலிருக்கிறது என்று நினைத்துக்கொண்டு காரைக் கிளப்பினுன் டிரைவர். சிறிது தூரம் சென்றதும், ''எங்கே ஸார்?'' என்று கேட்டான். இதைக் கேட்டதும் வெறி பிடித்தவனைப்போல, டிரைவரை நிமிர்ந்து பார்த்தான் அருணுசலம். ''எங்கே போவது? அந்தச் சொறி நாயை சுட்டுக் கொன்ருல்தான் எனக்கு ஆறும், போலீஸ் ஸ்டேஷனுக்கு விடு!'' என்று ஆத்திரத்துடன் கூச்சலிட் டான்.

அருணுசலத்தின்பேச்சு ராஜநாயகத்துக்குப் புரியவில்லை. சொறிநாய் என்று யாரைச் சொல்கிருன்? அல்லி காணு மற் போனதை இவன் தவருக நினைத்துக்கொண்டு அவனையே அவ்வாறு சொல்லுகிருனே என்று நினைத் தார். ''நீ யாரை சொறிநாய் என்று சொல்கிருய், அருணு சலம்?'' என்று கேட்டார்.

''யாரையா? இது என்ன கேள்வி? கபடமாக அல்லியைக் கடத்திச் சென்றுவிட்ட அந்தக் காலிப்பயலைச் சொல் கிறேன்!''

''யார் அவன்?''

''என்னுடன் விளையாடுகிறீர்களா?''

''யாரோ ஒருவனைக் குறிப்பிட்டுச் சொல்கிருயே, அதற் காகக் கேட்டேன்.''

''இதோ பாருங்கள் வாத்தியாரே, என்னுடைய மனநிலை உங்களுக்குத் தெரியாது. தயவுசெய்து மேலும் என்னைக் கஷ்டப்படுத்தாதீர்கள்,'' என்று சற்று கோபத்துடனே சொன்னுன் அருணுசலம்.

ராஜநாயகத்தின் வீட்டுக்கு முன்னுல் வந்து நின்ற அல் லியை தூரத்திலிருந்தபடியே கவனித்துக் கொண்டிருந் தான் இன்னுசி அவனுடைய கண்களும் மனமும் அந்தக் காரில்தான் நிலைத்திருந்தன. ராஜநாயகமும் அருணுசல மும் மட்டுமே கீழே இறங்கியதைக் கண்டதும், அவனுக் குத் திக்கென்ருகிவிட்டது. அப்படியானுல் அல்லி எங்கே? கடந்த ஒருமணிநேரமாக அவன் அங்கேயேதான் நின்று கொண்டிருக்கிருன்.

அல்லி வீட்டில் இல்லை என்பதை அங்கு வந்தவுடனேயே புரிந்து கொண்டான். எங்காவது 'வெளியே சென்றிருப் பாள் என்றுதான் நினைத்து அங்கேயே நின்று கொண்டி ருந்தான். 'ஆனுல், அல்லியில்லாமல் இவர்களிருவர் மட்டும் ஏன் வருகிருர்கள்? ஏன் அவர்கள் முகத்தில் களையே இல்லை?'

சிங்கப்பூரானுடன் சண்டையிட்டு, ஆஸ்பத்திரியில் கிடந்த போது அவன் நினைத்ததே வேறு. 'சே! ஒரு அடங்காப்

பிடாரிப் பெண் பிள்ளைக்காகவா நம் குலப் பெருமை யையும் அழித்து, இப்படிச் சாகும் நிலைக்கு வந்திருக் கிறோம்? இந்த அல்லி போனால் இன்னொரு செந்தாமரை கிடைக்கிறாள்; முண்டம்!' என்று சிங்கப்பூரானின் கத்தி ஏற்படுத்திய வடுக்கள் அவனை எண்ணத் தூண்டின. ஆனால், அவன் பிழைத்து வெளியே வந்ததுமா அந்தச் சினிமாவைப் பார்க்க வேண்டும்? காலில் சதங்கையைக் கட்டிக்கொண்டு 'சலக் சலக்'கென்று நடந்து வந்து திடீரென புள்ளி மானைப்போல ஒரு பெண் துள்ளித் துள்ளி ஆடினாளே?

அந்த நிமிஷமே, அவனுடைய இதயம் அல்லியின் மீது துள்ளிச் சென்று விட்டது. அவன் என்ன செய்வான்? நீண்ட அந்த இரு விழி மலர்களிலும் அவள் என்னதான் காந்த சக்தியை வைத்திருக்கின்றாளோ? முத்துப் பல் வரிசை தெரிய மோகனமாக ஒரு புன் முறுவல் செய் தாளே, அதை அவன் வேறு எந்தப் பெண்ணிடமும் பார்த்ததில்லை. ஐந்தாம் தினத்துக் கூனல் பிறை; அங்கே இரண்டு வில்களைப்போன்ற கரிய புருவங்கள்; செம்பவழ உதடுகள்; ரோஜாக் கன்னங்கள்... ...!

அன்றே அல்லியைக்காணமுனைந்தான் இன்னாசி. சென்னை க்கு வந்து அழகி படத் தயாரிப்புக் கம்பெனியைத் தேடிப்பிடித்து, அல்லி தங்கியிருக்கும் ராஜநாயகத்தின் முகவரியையும் தெரிந்துகொண்டான். சிங்கப்பூர் சாத் தையனும் இந்த வழியைத்தான் கடைப்பிடித்தானென் றாலும், இன்னாசி கொஞ்சம் மூளையை உபயோகித்தான். ராஜநாயகத்தின் வீட்டுக்கு முன்னால் சில நாட்களாக நடை பயின்றான். அங்கு வந்த ஒன்றிரண்டு அலங்கார வல்லிகள் மூலம் அருணாசலத்துக்கும் அல்லிக்கும் திரு மணம் நடக்கப்போகும் விவரத்தைத் தெரிந்துகொண் டான். பிறகு, அல்லியை மூரட்டுத்தனமாக அழைத்துச்

செல்ல முடியாதென்பதைப் புரிந்துகொண்டு, மூளையை உபயோகித்தே இனிமேல் வெற்றியடைய வேண்டும் என்று முடிவு செய்தான்.

அதன் விளைவாக உருவான அந்தப் பயங்கரக் கடிதத்தை மீண்டுமொருமுறை படித்தான். 'சுகுணா; நல்ல பெயர் தான்' என்று தனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டான். 'ஒரு வேளை உண்மையிலேயே அருணாசலத்துக்கு சுகுணா என்று ஒரு முறைப் பெண் இருந்து வைத்தால் என்ன செய்வது?—ஏன் இருக்கட்டுமே?'

சுகுணா என்ற பொய்ப் பெயரிட்டு எழுதிய புரட்டுக் கடிதத்தை தபாலில் சேர்த்த பிறகுதான் அவனுக்கு நிம்மதி ஏற்பட்டது. எப்படியும் அருணாசலத்தின் முகத்தில் அல்லி காறித் துப்பி, அவனைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளினால் போதும். அதன்விளைவு என்ன எத்தைத் தெரிந்துபோகத் தான் இப்போது ராஜநாயகத்தின் வீட்டுக்கு முன்னால் அவன் பழியாய்க் கிடந்தான். அப்போது நடந்தவற்றை நினைத்த இன்னாசிக்கு மயக்கம் வரும் போலிருந்தது.

உச்சி வெயிலில் கரையில் பிடுங்கிப் போடப்பட்ட அல்லிக் கொடியைப் போல துவண்டு கிடந்தாள் அருணாசலத்தின் அன்புக்குரியவள். இமைகளிரண்டும் இறுக மூடியிருந்தன. இதழ்கள் இலேசாக விரிந்திருந்தன. அதிவேகமாகச் சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறி அளித்த காற்றினால் இரண்டு மூன்று கற்றைத் தலைமுடி அவள் முகத்தில் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தன. அறை மூடப்பட்டு, அல்லி மட்டுமே தனிமையில் விடப்பட்டிருந்தாள். அடிக்கொரு முறை, காற்றில் அலைக்கழியும் ஜன்னல் திரைச்சீலை மட்டுமே படபடவென்று அடித்துக் கொண்டது. தவிர, அங்கே எந்த அரவமும் கேட்கவில்லை. நேரம் வளர்ந்து கொண்டேயிருந்தது. அல்லி

படுத்திருந்த கட்டிலுக்கு அருகாமையில் கிடந்த ஒரு முக்காலியின் மீது ஒரு தட்டில் கனிகளும், ஒரு கண்ணாடிக் கோப்பையில் தண்ணீரும் வைக்கப்பட்டிருந்தன.

இருந்தாற்போலிருந்து இலேசாக அசைந்து கொடுத்தாள். மூச்சு இலேசாக இழையிட்டது. வலதுகை வலுவிழந்ததைப்போல கட்டிலிலிருந்து இடம்பெயர்ந்து கீழே தொங்கிய வேகத்தில், முக்காலியில் பட்டுவிட்டது. கண்ணாடிக்கோப்பையும் பழத் தட்டும் கீழே விழுந்து அமைதியைக் கலைத்துக்கொண்டு ஓசை எழுப்பின. திடுக்கிட்டுப் போய் வெடுக்கென விழுந்தாள் அல்லி. படுத்திருந்த படியே சுற்றிலும் விழிகளை உருட்டி நோக்கினாள் இடம் புதிதாயிருக்கவே 'சட்'டென்று எழுந்து அமர்ந்தாள். கவிழ்ந்து கிடந்த பழத்தட்டையும் கோப்பையையும் ஒரு முறை பார்த்துவிட்டு எழுந்து நின்றாள். சிலமணி நேரங்களுக்குமுன் நடந்த சம்பவங்கள் அவளுடைய நினைவில் பளிச்சிட்டன. 'சினிமாக் கம்பெனிக்கார்' வந்ததும், தான் அதில் ஏறிச்சென்றதும், பாதி வழியில் சிறிய தெரு ஒன்றுக்குள் திரும்பி ஓர் இடத்தில் போய் நின்றதும், அப்போது காருக்குள் ஏறி அமர்ந்தவனைக்கண்டு அவள் கூச்சலிட்டுக் கொண்டு மயங்கி விழுந்ததும் நன்றாக நினைவுக்கு வந்தது. அதன் பிறகு என்ன நடந்தது என்பது தான் அவளுக்குத் தெரியாது.

பாரதி கற்பனை செய்தபுதுமைப் பெண்ணைப் பற்றி அடிக்கடி ராஜநாயகம் சொல்லியிருக்கிறார். முறங் கொண்டு புலியைத் துரத்தியடித்த வீரத்தமிழ்ப் பெண்மணி யொருத்தியின் கதையைக் கூறி அவளாகத்தான் இருக்கும் பாரதியின் கற்பனைப் பெண்ணும் என்று சொல்வார். பாரதியின் புதுமைப்பெண் பாட்டுக்கு அல்லிக்கு அபிநயமே கற்றுக் கொடுத்திருக்கிறார். இந்த இக்கட்டான

நிலையில் அந்த அமரகவி நினைவுக்கு வந்தான். 'அம்மா' என் கனவை வீணடித்து விடாதே. உன்னையே தான் என் கற்பனைக்காரிகையாக வைத்துக் கவிதை புனைந்தேன். இப்போது நீ மனம்தளர்ந்தாயோ, என் லட்சியமே பொடிப் பொடியாகிவிடும். இதோ பார், வீரச் சின்னமான என் மீசையை! அடுத்தாற் போல நீ செய்யப்போகும் வீரச் செயல்தான் மீசைக்கு மதிப்பை அளிக்கும் என்று கூறுகிறான் அக்கவிஞரேறு.

அடுத்தாற் போல, வயல் வெளியில் நெல் மணியிலிருந்து சருகைப் பிரிப்பதற்காக முறத்தை வீசிக்கொண்டிருந்த அந்தத் தமிழ்ப் பெண் தோன்றினாள். ''அதோ, தலை தெறிக்க ஓடுகிறது பார் ஒரு புலி. அதை நான்தான் துரத்தியடித்தேன். துணையாரும் இல்லாமல் நான்மட்டும் எப்படிப் புலியை எதிர்க்க முடிந்தது என்று ஆச்சரியப் படுகிறாயா? ஆயுதம் எதுவுமில்லாமல் நான் அந்தப் புலியை எப்படி ஓடச் செய்தேனென்று நகைக்கிறாயா? எல்லாம் என் மன வலிமையால்தான்! மனத்தில் உறுதி வேண்டும். அதுபோதும், எதற்கும் பயப்படாதே. நீ ஒரு தமிழ்ப் பெண். இன்று என்னைக் காவியங்கள் போற்றுகின்றன. எனக்குச் சிலை செய்து வைக்கப் போவதாகக் கூடப் பேச்சு அடிபடுகிறது. ஆகவே, என் பரம்பரையில் வந்த நீ என் பெயரைக் கெடுத்து விடாதே. பின்வாங்காதே, பயப்படாதே, உறுதிகொள், என்று அந்த வீரத் தமிழ் மகள் ஆவேசத்தோடு அல்லிக்குத் தைரியமூட்டுவது போன்று அவளுக்குப் பிரமை ஏற்பட்டது.

படுக்கையிலிருந்தபடியே கண் திறந்து மிரள மிரள விழித்தது போலல்லாமல், இப்போது அல்லியின் மனம் ஒரு நிலைக்கு வந்தது. வெகு நிதானமாக, ஜன்னலருகில் நடந்து சென்றாள். வெளியே இருந்து வந்த காற்றின் வேகத்தில், பட்டாம் பூச்சியின் இறகைப் போல அடித்

துக்கொண்ட திரைச் சீலையை நீக்கி வெளியே பார்த்தாள். சற்று தூரத்தில், பெரிய ரஸ்தாவில் எறும்புக் கூட்டம் போல கார்கள் ஊர்ந்து செல்வது தெரிந்தது. கடுகுக்குக் கையும் காலும் முளைத்தது போல மனிதர்கள் தெரிந்தார்கள். அவள் இருப்பது அநேகமாக ஆருவது மாடியாக இருக்கலாம். சென்னை நகரை அவள் அவ்வளவாகச் சுற்றிப் பார்க்கவில்லையாகையால்தான் தற்போது இருப்பது சென்னையில்தாஞ என்று கூட அவளுக்குச் சந்தேகமாகி விட்டது. சீமையாகத் தானிருக்கட்டுமே என்று எண்ணி மனதைத் தேற்றிக் கொண்டாள். பிறகு திரும்பி நடந்து கதவருகில் சென்றுள். அவள் எதிர்பார்த்ததைப்போல, கதவு வெளிப் பக்கமாகவே பூட்டப்பட்டிருந்தது. 'பாரதி' தன் புதுமைப் பெண்ணுக்கு இப்படிப்பட்ட சோதனை யெல்லாம் வருமென்ரு நினைத்திருப்பார்?'' என்று தனக்குள்ளாகவே எண்ணி வேதனைப் பட்டுக்கொண்டு, சோர்ந்துபோய் கட்டிலில் உட்கார்ந்தாள்.

ராஜநாயகத்தின் வீட்டுக்கு முன்ஞல் ஒரு போலீஸ் வண்டி வந்து நின்றதைக் கண்டதும் இன்ஞசிக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏதோ ஆபத்து என்று முடிவு செய்து விட்டான். அதற்குமேல் அங்கு நின்று கொண்டிருக்க முடியவில்லை. தன் கடிதம் ஏதாவது கோளாறு செய்து விட்டதோ என்று இடையில் அவனுக்கு ஒரு சந்தேகம். என்னதான் என்று பார்த்து விடுவோமே என்று ராஜநாயகத்தின் வீட்டை நெருங்கிஞன். போலீஸ்காரர்களைக் கண்டதும், ராஜநாயகம் ஓடோடி வந்தார். எல்லோருமாக வாசலிலேயே நின்று பேசிக்கொண்டிருந்தது இன்ஞசிக்கு மிகவும் வசதியாகி விட்டது. நடந்தவைகளை, அங்கிருந்தோரின் பேச்சுக்களிலிருந்து புரிந்து கொள்ளவும் முடிந்தது. சினிமாக் கொட்டகையில் சிங்கப்பூர் சாத்தையாவைச் சந்தித்த விவரத்தையும் அதன் பிறகு நடந்த சம்பவங்களையும் விவரித்து விட்டு, ஒரு

வேளை அவன் தான் அல்லியைக் கடத்திச் சென்றிருப் பானே என்ற சந்தேகத்தை எழுப்பினன் அருணசலம். இதைக் கேட்டதும் இன்னசிக்கு முகம் குப்பென்று சிவந்து விட்டது. 'அந்த நாயுடைய வேலைதானு இது?' என்று தனக்குள்ளாகவே நினைத்துக் கொண்டு, அங் கிருந்து நகர்ந்தான்.

மணி ஆறரை. மாடிப்படிகளில் யாரோ ஏறிவரும் ஓசை கேட்டது.

அல்லி மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். ஊராரின் தீ நாக்குப் பொசுக்கிய காயங்கள் கொடுத்த வேதனை யால் மனசை திடப்படுத்திக் கொண்டு ஊரைவிட்டே வெளியேறினள். ஊர் எல்லையைக் கடக்கும் தறுவாயில் சிங்கப்பூரானும் இன்னசியும்,அவளுடைய இரண்டு கை களையும் பிடித்துக்கொண்டு வெவ்வேறு திசைகளில் இழுத்தபோதும், கடையிசில் அவர்கள் சண்டைச் சேவல் களைப்போல கத்தியைப்பிடித்துக் கொண்டு கொக்கரித்த போதும் எப்படி இதயத்தைத் திடப்படுத்திக் கொண் டாளோ, அதை விடப் பலமடங்கு தைரியமடைந்தாள். அவள் நினைவில் பாரதி தோன்றினர். புலியைவிரட்டிய தமிழச்சி தெரிந்தாள்.

வெளிப்பக்கமாக இருந்தபூட்டு திறக்கப்படும் சத்தம் கேட்டது.அல்லிக்கு விழிகளிரண்டும் அடித்துக் கொண் டன.அதுபயமல்ல; யாராயிருக்கும் என்று அறியத்துடிக் கும் மன ஆவலின் எதிரொலி.

சிங்கப்பூர்ச் சாத்தையன்,தன் தங்கப் பல் தெரியச்சிரித்த படி நின்றிருந்தான். ''உன் நாட்டியம் ரொம்ப நன்ருக இருந்தது, அல்லி!'' என்று சிரித்தபடி சொன்னன்.

வெடுக்கென்று அவனை ஏறிட்டு நோக்கிய அல்லியின் விழிகளில் கனல் தெறித்தது. ''இப்போது என் முன்னல்

நீ ஆடிக்கொண்டிருக்கிருயே, இந்த மாதிரி கேவலமான நாட்டியமல்ல அது!...''

சாத்தையன் நிலைமையை உத்தேசித்து தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டான்.

''அல்லி, நீஎன்னைப் புரிந்து கொள்ளவேயில்லை. அந்த இன்ஞசியுடன் சேர்த்து என்னையும் எடைபோட்டு விட்டாய். அவன் வெறி பிடித்து உன்னைச் சுற்றிக்கொண்டு வந்தான். நிஜமாகவே சொல்கிறேன்; உன்னைக்கல்யாணம் செய்து கொள்வதற்குத்தான் நான் ஆசைப்பட்டேன். இப்போதும் அப்படியேதான் நினைக்கிறேன்.''

''உன் எண்ணத்தில் ஒருவண்டி சமுத்திர மணலை வாரிக் கொட்டி சமாதி வைத்து விடு. ஏனென்ருல், அடுத்த வாரம் எனக்கும் வேருெருவருக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது.

''யார் அவன் உன்னைக்கட்டிக் கொள்ளப் போகிறவன்? கண்டதுண்டமாக வெட்டிப் போடுவேன் கழுதைப் பயலை...!''

''உன்வீரமெல்லாம் எனக்குத் தெரியும். வயற்காட்டுக் கரம்பையில் கத்திக்காயம்பட்டு வாயைப்பிளந்து விழுந்ததை நானல்லவா, பார்த்தவள்!''

''அல்லி, நீ ரொம்பப்பேசி விட்டாய். என்னைப்பற்றி நீ தெரிந்தது ரொம்பக்குறைவு. இனிமேல் போகப் போகத் தெரியும் என் மகிமை!''

''தூ...!''

இதைக் கண்டதும் ஆவேசம் கொண்டவனைப் போல, 'அல்லீ' என்றுகதறிக் கொண்டே,அல்லியின் மீதுபாய்ந்தான் சிங்கப்பூரான். அதேநேரத்தில் பலமான இரும்புக்

கம்பி ஒன்று அவன் தலையில் வந்து விழுந்தது. 'அம்மா' என்று அலறிக் கொண்டு கீழேசாய்ந்தான்.

'வீல்' என்று கதறியபடி எழுந்து நின்றாள் அல்லி. அவளுடைய உடல் நடுங்கியது. எல்லாம் இமைக்கும் நேரம் தான். அடுத்து அங்கேதோன்றிய இளைஞனைக்கண்டதும் இன்னும் மிரண்டு விட்டாள் அல்லி. இற்றுப்போன மரத்தைப்போல, கால்கள் நிலையில்லாமல் ஆடின. இதயம். உருகிக்கரைந்து விட்டதுபோல ஓர் உணர்வு; தலைசுழன்றது. கண்களிரண்டும் படபட வென்று துடித்து மேலே மேலேசெருகிக் கொண்டு சென்றன. மயங்கிய நிலையில் கீழே இறங்கிப்போன அல்லியின் கண்கள், கீழே விழுந்து கிடந்த சாத்தையனை நோக்கின. அவனது தலையிலிருந்து ரத்தம் குபுகுபு வென்று கொட்டிக் கொண்டிருந்தது. சாத்தையன் மயங்கிக் கிடந்தான். அல்லியையும் அவனையும் மாறிமாறிப் பார்த்தபடி, செய்வதறியாது திகைத்தபடி நின்று கொண்டிருந்தான் இஞ்சி.

# ஆளுக்கு ஓர் அத்தியாயம்

நாவல் திசைப்பக்கமே திரும்பியவனல்ல நான். ஒரு விருந்து வைத்து ஆசிரியர் என்னை இதில் சிக்க வைத்துவிட்டார். ஆரம்பத்தில் பங்கு பெறஇருப்பவர்கள் பட்டியலில் என் பெயர் வந்து கொண்டிருந்தபோது, பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன். ஒரு சமயம் மறுத்து விடலாம் என்றுகூட நினைத்ததுண்டு. 'அது அழகல்ல' என்றும் சொல்லிக்கொண்டேன்; புலியும் வந்து விட்டது.

ஒருவரே எழுதுகிற நாவலில் கதைச் சிக்கல்களை ஏற்படுத்தி விடுவித்துக் கொள்வது அந்த ஆசிரியரது பொறுப்பு; எளிதுங்கூட. ஆளுக்கொரு அத்தியாயமாக கதைப் போக்கை எப்படி எப்படியெல்லாமோ திருப்பிவிட்டு எங்கோ கொண்டு வந்து நிறுத்திவிட்டார்கள் முன்னோடிகள். நானும் என் பின்னோடியைப் பற்றி கவலைப்படாமல் அல்லியையும், இன்னாசியையும் ஒரு நிலையில் நிறுத்திக்குழப்பி விடுகிறேன். அடுத்தவர் பி. வி. ஆர். அவர் பார்த்துக்கொள்கிறார்!

சி. சு. செல்லப்பா

பொறி ஒன்பது :

# உச்சநிலையில் அல்லிக் கொடி!

சாத்தையன் தலையில் விழுந்த இரும்புக் கம்பியைப் பிடித்திருந்த கை அருணசலத்தினுடையதாகவோ ராஜநாயகத்தினுடையதாகவோ, அல்லது கண்ணப்பனுடையதாகவோ கூட இருந்திருந்தால், அல்லியின் பதட்டம் தணிய வழி இருந்திருக்கும். பேராபத்திலிருந்து தப்பி விட்ட நிம்மதி ஏற்படவும் காரணமாக இருந்திருக்கும். ஆனல் அது இன்னசியாக இருந்து விடவே, சற்று முன் 'அல்லி' என்று கூவிக்கொண்டு வெறிக் கண்களுடன் தன் மீது பாய்ந்த அதே மிருகம், தன் முதல் பாய்ச்சல் குறி தவறிவிட, இன்னெரு பாய்ச்சலுக்குத்தயார்செய்து கொண்டிருப்பது போலத்தான் அவளது மருண்டு போன கண்களுக்குப் பட்டது. ரத்த வெள்ளத்தில் கிடந்த சாத்தையன் ஞாபகமே அவளுக்கு இல்லை. உண்மையில், தன் முன் நிற்பது யார், எவன் என்ற தனிப்பட்ட நபர்களைப் பற்றிய உணர்வு நிலையைப் பெற்றவளாகவே இல்லை அல்லி.

அன்று, திருக்கார்த்திகை தினத்தன்று மாங்குடியை விட்டுக் கிளம்பி நான்கு வயல்களைக் கடந்து வண்டிப் பாதையில் கால் வைத்த போது ஏற்பட்ட முதல் ஆபத்திலிருந்து சங்கிலித் தொடராக ஏற்பட்டு வரும் அத்தனை சோதனைகளுக்கும் ஒரு சிகரமான, தன்னையே அழித்து

விடும் ஒரு தீக்கங்கு என அவள் முடிவு கட்டிவிட்ட அந்த ஆபத்து சந்தர்ப்பத்தின் நீடித்த விநாடிகளாகத்தான் அவனும் ஓடிக்கொண்டேயிருந்தது.

இன்ஞசிதான் முதலில் தன் திகைப்பை நீக்கிக் கொண்டவன். அவன் தன் கையில் இருந்த கம்பியைப் பார்த்துக்கொண்ட போது அவன் உணர்வு ஒரு நிலையிலிருந்து நகர ஆரம்பித்துவிட்டது தெரியவந்தது. கையிலிருந்த கம்பி அவனுடைய வலது கையிலிருந்து கீழே விழுந்த விதம், அதை அவன் தன்னையறியாமல் நழுவ விடவில்லை, சுயபிரக்ஞையுடன் வேண்டுமென்றே கீழே சற்று வீசியெறிந்த மாதிரியே போட்டான் என்பதைக் காட்டியது.

கம்பியைக் கீழே போட்டுவிட்டு அவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அல்லியை ஒரு பார்வை பார்த்தான். அப்போதுதான் அல்லியின் உடம்பினுள் ஒரு புதிய நடுக்கம் ஓடியது. இரும்புக் கம்பி அந்த மிருகத்தின் கையில் இருந்தவரையில் அவளுக்குப் பயம் இல்லை. கீழே சாத்தையன் மண்டை உடைந்து கிடந்தது அதை நிரூபித்திருந்தது. ஆனால் அந்த ஆயுதத்தை அந்த மிருகம் தன் மீது உபயோகிக்காது; அது அவளுக்கு நிச்சயம். உபயோகித்து விட்டிருந்தால் கூட தேவலை; ஒருவழியாக தனது இந்த முள் வாழ்வுக்கு ஒரு ஓய்வு கிடைத்திருக்கும்; நிம்மதியும் ஏற்பட்டிருக்கும். இப்போது நடக்கஇருந்த-இன்னும் நடக்கிற அத்தனையிலிருந்தும் தான் தப்பியிருக்க முடியும். அந்தவிநாடிக்கு அல்லி இதைத்தான் விரும்பினாள். 'சிங்கப்பூரான் மண்டையைப் பிளந்த கையோடு என்னையும் கபால மோட்சம் பெறச் செய்திருக்கக் கூடாதா? இந்த மிருகம் ரத்தவெறி பிடித்ததுதானே! ஏன் கீழே போட்டது?' முகத்தை மட்டும் இன்றி அவனது உடல் அசைவு, வாய் அசைவையும் பார்வை பிசகாமல்

நுட்பமாக அவள் கண்கள் ஆராய்ந்து கொண்டிருந்தன. இன்ஞசியின் கண்களிலிருந்துஅவள் தகவல்களை அறிந்து கொள்ளப் பார்த்தாள், அன்று தினம் 'அல்லி, நீமொந்தைக்கள்ளு;குடிவெறி கொண்ட பயலுங்க ஊரிலேஅதிகம்' என்று அம்மா சொல்லிச்செத்தபிறகு, தன் ஒவ்வொரு அசைவையும் பார்த்தஅத்தனை கண்களும்பேசிய பாஷைகளும் உணர்த்திய அர்த்தங்களும் அவளுக்கு எவ்வளவோ தகவல்களைக் கொடுத்திருக்கின்றன; அருணசலம், ராஜநாயகம் பார்வைகள்கூட அவளுக்கு எவ்வளவு விஷயங்களை அறிவித்திருக்கின்றன!

ஆனல் இன்ஞசியின் கண்களிலிருந்து அவள் இப்போது எதுவும் தகவல் அறியமுடியவில்லை. காரணம், இன்ஞசியின் கண்கள் இன்னும் அல்லியை மட்டும் முனைத்துப் பார்க்கும் நிலை எடுத்துக்கொள்ளாததுதான். அல்லியைப் பொருட்படுத்திதன் மனதுக்குள் நிலைக்கச்செய்து அதற்கு மேல் அவளோடு தான் அப்போது உறவு கொள்ளவேண்டிய முறை சம்பந்தமாக எவ்வித முடிவுக்கும் இன்னும் அவன் வரவில்லை என்றமாதிரி நடந்துகொண்டான். விழிகளைச் சுழற்றி சாத்தையன், ரத்தம்பெருகிக்கிடந்த அந்த இடம், கம்பி, தன்கை இவற்றைமாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். இவைகளை எல்லாம் ஒன்றுசேர்த்துப் பார்க்க முயன்று கொண்டிருந்த மாதிரி தோற்றம் காட்டினன்.

இன்ஞசி எந்தநிமிஷமும்தன்னை நோக்கிஎட்டுவைப்பதை அல்லிஎதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அன்று வண்டிப் பாதையில் கால்எடுத்து வைத்ததும் பின்னலிருந்து ஒருகை பற்றி இழுத்ததும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க 'எங்கே போறே?' என்று இடிச்சிரிப்புடன் இன்ஞசி நின்றதும் அவள்கண்முன்குதித்து வந்துநின்றன. அதற்குப்பின் இப்போதுதான் அவனைமீண்டும் பார்க்கிருள். இப்போதும்

இன்ஞசி என்ன கேட்கப்போகிருன்? 'அல்லி நீ இந்த அருச்சுனனுக்கு தப்பிப்போயிற முடியும்னு எவ்வளவு தப்பாக நினைச்சுட்டே?' - இப்படித்தானே ஆரம்பிக்கப்போகிருன்? மறுபடியும் அந்த இடிச்சிரிப்பா? அப்போதாவது சாத்தையன் ஓடிவந்துசேர்ந்தான். அவர்களை மோதிக் கவிழ்த்துக் கொள்ளவிட்டு தான் தப்ப முடிந்தது. 'இன்ஞசி வயிற்றில் குத்துடன் கீழே விழுந்ததும், விலாக்குத்துடன் சாத்தையன்விழுந்ததும் தான்ஓடினதும் நினைவில் சுழல, இப்போதோ சாத்தையன் கீழே கிடக்கிருன். இன்ஞசிக்கு இடம் ஒழிச்சுவிட்ட மாதிரி. இன்னெரு உடல் நடுக்கம் அவளைக் குலுக்கியது. என்னதான் ஒவ்வொன்றையும் சமாளிக்கப் பார்த்தாலும் ஒன்றுமேலே ஒன்ருக வருகிற போது...'

இப்படி நினைப்பு ஓடிக்கொண்டிருக்கிறபோது, இன்ஞசி ஏதோ தன்னைப் பார்த்துச்சொல்ல வருகிறமாதிரி அவன் உதடுகள் விரிய ஆரம்பிப்பதை சூட்சமமாகக் கவனித்தாள் அல்லி.

'அல்லி'! - கூப்பிட்டு நிறுத்திவிட்டான் இன்ஞசி. அதைக் கேட்டதுமே அல்லி அதென்னவோ அந்தப் பழைய அல்லி ராணியாகவே சீறினள். 'சீ, மிருகம்! நீ பிளைச்சா வந்திட்டே? வயிற்றிலே குத்துப்பட்டும் தப்பிச்சிட்டியா?' என்றுகீழே கிடந்த சாத்தையனைப் பார்த்தாள்.

இன்ஞசி பளிச்சென கையால் தன் வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். ஆழமாக இருந்த வடுவில் தன்விரலைக் கொடுத்து ஒருதரம் துளாவிக் கொடுத்துக் கொண்டான். சொக்கப்பனை இரவுச் சம்பவம் அவன் ஞாபகத்துக்கு வந்தது. கீழேகிடந்தசாத்தையனைப் பார்த்தான். 'ஒரு வேளை, எழுந்து அவன் தன் வயிற்றில் மீண்டும்!...' பீதியில் அவன் கண்கள் மீண்டும் ஒருதரம் கீழே கிடந்த இரும்புக்கம்பியைப் பார்த்தன.

ஆனால், அவன் அதைப் பார்க்கத்திரும்பியபோது அவன் கண்டது இதுதான். தனக்குப் பக்கவாட்டில் சற்றுமுன் தள்ளிக் கிடந்த இருப்புக் கம்பியின் மறுமுனையை எதிர்ப் பக்கத்திலிருந்து முன் பாய்ந்து குனிந்து அல்லி கையில் எடுத்துக்கொண்டிருந்தாள்.

'இதோ பாரு, அல்லி!' இன்னாசி கையைச் சற்று முன் வீசி லேசாக அசைவு கொடுத்து குனியப்போனவன், அந்த அளவிலேயே நின்றுவிட்டான். தான் ஒரே பாய்ச் சலில் அவள் கையை மணிக்கட்டோடு சேர்த்து பிடித் திருக்க முடியும். செய்யவில்லை. குனிந்தவன் நிமிர்ந்து விட்டான். அதே சமயம் கம்பியை வலது கையில் பிடித்து ஓங்கிக்கொண்டு பின்னால் பாய்ந்து நின்றாள் அல்லி.

''இதோ பாரு இன்னாசி நாயே! ஒருஎட்டு முன்வைத்தே, சாத்தையனுக்கு ஏற்பட்டதுதான் உனக்கும்!''

இன்னாசியின் இடதுகை வயிற்றின் காயவடுவைத்தொட் டுக்கொண்டிருந்தது. வலதுகை எந்தவிதமான அசைவும் காட்டாமல் உடலோடு ஒட்டி பக்கவாட்டில் தொங்கிக் கொண்டிருந்தது. அவனது கண்கள் அல்லியையே பார்த் துக் கொண்டிருந்தன. அல்லி அவன் அசைவை எதிர் பார்த்து தன் முழுச் சுதாரிப்புடன் நின்றாள்.

இருந்தாற் போலிருந்து ஒரு இடிச் சிரிப்புச் சிரித்தான் இன்னாசி. அல்லி திடுக்கிட்டுப்போனாள். அந்தப் பழைய சிரிப்பு!

ஆனால் இந்தச் சிரிப்பில் அலட்சியமும் பரிகாசமும் தான் தொனித்தன. பழைய வெறியைக் காணவில்லை அல்லி. அந்தச் சிரிப்புஎழுந்தவாறேசட்டெனதணிந்தும்விட்டது. இன்னாசி அல்லி' என்று அழைத்தான். அந்தஅழைப்பில் எந்தவித வேகமும், அதைத் தொடர்ந்து வந்த பார் வையில் எந்த வெறியும் இல்லை.

இந்த நினைப்பில் அவளுடைய கையில் பிடித்திருந்த கம்பிப்பிடி கூட சற்று தளர்ந்தது. மறுகணம் 'சீ, அயோக்கியன்! வேஷம் போடுவான். என் கை ஓங்கி இருப்பது கண்டு!' எனத் தனக்குள் சமாளித்துச் சொல்லிக் கொண்டதும் கம்பியைப் பற்றி இருந்த விரல்கள் இன்னும் பிடியை நெருக்கின.

இன்ஞசி பேச ஆரம்பித்தான். பேச்சு மெதுவாக வந்தது. அவன் இடதுகை இன்னும் அந்த வடுவைத் தடவிக் கொண்டிருந்தது. அதையும் கவனித்தாள் அல்லி.

''அல்லி நீ இப்போ பார்க்கிறது வேறே இன்ஞசி,'' என்ருன் இன்ஞசி.

''இந்தச் சாமர்த்தியப் பேச்சிலே நான் கம்பியைக் கீழே போட்டுடுவேன்னுதானே நீ நினைக்கறே?'' அல்லி ஒரு வெறியுடன் கூவினுள். ''ஊரை விட்டு எச்சிக்கலை நாய்களுக்காகப் பயந்து ஓடி வந்த பழைய அல்லி இல்லை நானும், தெரிஞ்சுக்க!''

இன்ஞசி சில விநாடிகள் மௌனமாக இருந்தான். பிறகு தன் குரலைச் சிறிதும் உயர்த்தாமல், ஆனல் தன் மனதில் உள்ளதை அவளுக்கு உணர்த்த விரும்பும்உறுதியுடன் சொன்னுன்; ''அல்லி, அந்தக் கம்பியும் கையுமாகவே நீ அதோ திறந்து இருக்கிற கதவு வழியாக வெளியே போகலாம்.''

தன்னை அறியாமலே அல்லி பிடித்திருந்த இரும்புக்கம்பி பிடி தளர்ந்து போக, அல்லி சிரமப்பட்டுத் தான் அதை இறுக்கி இறுக்கிப் பிடித்துக் கொள்ளவேண்டியதாயிற்று. இவை இன்ஞசியின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் தாமா? அவள் அதிர்ந்து போனுள். தனக்காகச் சாத்தையனும் இன்ஞசியும் குத்திக்கொண்டபோதும், ராஜநாயகம் தன்னை மணந்து கொள்ளக்

கேட்டபோதும், சினிமாக் கொட்டகையில் எதிர்பாராத விதமாக சாத்தையனைக் கண்டதுமட்டுமன்றி அவன் அருணசலத்துக்கு சிநேகிதன் என்று தெரியவந்த போதும், அருணசலம் சந்தேகப்பட்டு அவளைக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்ட போதும், சுகுண என்று கையெழுத்திட்டிருந்த கடிதத்தைப் படித்த போதும், சூாக காரில் அழைத்துச் செல்லப்பட்ட போதும், சாத்தையன் காரில் ஏறிய போதும், அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சிகளெல்லாம் சாதாரணமானவை என்று கருதும்படி செய்து விட்டது இஞ்சியின் வார்த்தைகளைக் கேட்டபோது ஏற்பட்ட அதிர்ச்சி. அவன் பேசியதை அவள் காதுகள் கேட்டன. ஆனல் நம்ப மறுத்தன. அவள்முயற்சி செய்யவேண்டிய அவசியம் இல்லாமலே, ''மேற்கொண்டு எந்தச் சூழ்ச்சிக்கு இப்படிப் பேசுகிருய்?'' என்று அவள் வாய் வெடித்துக் கேட்டது.

இஞ்சி அதைப் பொருட்படுத்தவே இல்லை. ''நான் நிற்கிற இடத்திலிருந்து ஒரு எட்டுக்கூட அசையாமல் நிற்கிறேன். நீ போகும்போதுவெளிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு வேண்டுமானல் போய்விடு.'' அவன் குரலில் இருந்த அழுத்தம், உறுதி, அந்தரங்கம் அல்லியை அயர்த்தி விட்டன. இப்போது நம்புவதா, மறுப்பதா என்று இரண்டுங்கெட்ட நிலையில் அவதிப்பட்டாள். பட்டாமணியம் பாளையப்பத் தேவர் மகன் இஞ்சி, தூரத்திலிருந்து சீட்டியடித்து பிறகு ஊரில் தன்னைப் பற்றிவதந்தியைக்கிளப்பிய இஞ்சி—சாத்தையனுடன் வனக்காக கொலைக்கும் தயாரான இஞ்சி இப்படிப் பேசுகிருன்! இது நம்ப வேண்டிய, எடுத்துக் கொள்ள வேண்டிய வார்த்தைதாஞ?

ஒரு கணம் தயங்கிஞள். பிறகு, 'அதஞல் என்ன, சோதித்துத்தான் பார்ப்போமே'' என்று கம்பியை அவனுக்கு

நேராக ஒங்கியவாறே நகர்ந்து போக நினைத்தாள். 'எப்படியும் தான் அங்கிருந்து தப்பினால் போதும். இன்னாசியைப் பற்றித்தனக்கு என்ன கவலை?' மனதிற்குள் கேட்டுக்கொண்டே நகரப் போனாள் அல்லி.

அப்போது இன்னாசியின் உதடுகள் அசைவதைக் கண்டாள் அல்லி.

''அல்லி, இன்னாசி இனிமேல் உனக்கும் அருணாசலத்துக்கும் குறுக்கே வரமாட்டான். இந்தப் பிணமும் இனி ஏந்திருக்காது''

அல்லி கூவி விட்டாள். ஐயோ! கீழே கிடந்த சாத்தையனைப் பார்த்தாள். அவன் விறைத்துக் கிடந்தான் அலறிப் பின் பாய்ந்தாள் அல்லி. கையில் இருந்த கம்பி நழுவிக் கீழே விழுந்தது. அடுத்த வினாடி தன் தற்காப்பு ஆயுதம் இல்லாமல் தான் நிற்பதை உணர்ந்த அல்லி இன்னாசியின் முகத்தை மருட்சியுடன் பார்த்தாள். இன்னாசி அசையாமல் நின்றான். அவன் நின்ற நிலையைக் கண்டு ஒரு திடீர் நம்பிக்கை அல்லிக்கு ஏற்பட்டது. அவளும் அந்தக் கம்பியை மீண்டும் கையில் எடுக்க முயலவில்லை.

பிணமாகக்கிடந்த சாத்தையனை மறுபடியும் பார்த்து விட்டு அவள்பீதிப்படுவதை குறிப்பறிந்து கொண்டஇன்னாசி, அங்கிருந்த ஒருதுணியை எடுத்துப்பிணத்தை மூடினான்.

அல்லிக்கு நம்பிக்கை பிறந்தது. இன்னாசியைச் சாந்தமாகப் பார்த்தாள். ''இன்னாசி' நீஎப்படி மாறிவிட்டாய்? என்னால் நம்பமுடியவில்லை!'' என்றாள்.

''ஆமாம்; ஊருக்குப் பெரியவரான பட்டாமணியம் பாளையப்பத்தேவர் மகன் இன்னாசி இப்படிக்கொலைசெய்

யப் போகிருன்என்பதாகயார்தான் நம்பி இருப்பார்கள்? இதோ பாரு அல்லி, இப்போ ரொம்பப்பேசுவதற்கு நேர மில்லை. நீ இதைவிட்டுப்போகலாம்.

''நீ?'' என்று அல்லிகேட்க வாயெடுத்தாள். ஆனல் மன தில் அந்தக்கவலையே ஏற்படவில்லை. இன்று இன்னசி இப்படி நடந்துகொண்டு விட்டதற்காக அத்தனைவெறுப் பும் மறைந்து விடுமா? அவனிடம் அவளுக்கு ஒரு அபிமா னம் ஏற்பட்டு விடுமா?

''அல்லி, ஒரு தடவை உனக்காகக் கொலை வரைக்கும் போகத் தயாராக இருந்தேன். வெறியிலே செய்தது!'' என்ருன் இன்னசி. வயிற்றுவடுவைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். ''இன்னொருதடவை அதுக்குப் போக விரும்பவில்லை. உன்னைமறந்து விட்டுத்தான் இருந்தேன்.''

''இருந்தவனுகத் தெரியவில்லையே'' என்று மறுத்தாள் அல்லி. ''இல்லாவிட்டால் இப்போ மறுபடியும் என்னைத் தேடிக் கொண்டு இங்கேவந்திருக்க மாட்டியே? நீங்க இரண்டு பேரும் திரும்ப...''

அல்லியை முடிக்கவிடவில்லை இன்னசி. ''அல்லி! அவன் குரல் சற்றுக்கடுமையாகவே வந்தது. 'சாத்தை யனைக் கொன்றுவிட்டு உன்னைத் துன்புறுத்தவே நான் வந்திருப்பதாகச் சொல்லவருகிருய்என்று எனக்குத்தெரி யும். ஆனல்சொல்கிறேன். ஐந்தாறு மாதங்களாக ஆஸ் பத்திரியிலிருந்துவிட்டு செத்துப்பிழைத்தவனுக வெளியே வந்ததும், சினிமாவில் காலில் சதங்கை கட்டிக்கொண்டு நீ ஆடினதைப் பார்த்து விட்டு, உன்னைக் காணும் ஆவ லுடன் நான் இங்குவந்ததும் உண்மைதான். நீ இருக்கிற இடம்அறிந்து, அருணசலத்துக்கும் உனக்கும் திருமணம் நடக்கப் போவதை அறிந்து, உன்னை முரட்டுத்தனமாக

செல்ல முடியாது என்பதைப் புரிந்துகொண்டு உன் மனம் பேதலிக்கச் செய்ய சுகுணா என்ற பெயரால் கடிதம்எழுதியதும் உண்மை!''

'அடப்பாவி!' என்று கத்திவிட்டாள் அல்லி. ''ஒரு மோசடிக் கடிதத்தால் என்ன விபரீதத்தை விளைவித்து விட்டாய்?'' அந்த கடிதத்தைப் படித்து விட்டு ராஜநாயகத்திடம் நடந்து கொண்டதையும் நினைத்துக் கொண்டாள். 'ஐயோ, அந்தக் கடிதம்!' பல்லைக் கடித்துக் கொண்டாள். அதை அப்படியே போட்டுவிட்டிருந்ததும் ஞாபகம் வந்தது. அருணாசலம் கையிலோ ராஜநாயகம் கண்ணிலோ பட்டிருந்தால்? அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? தன்னைத்தேடுகிறார்களா?என்று அவள்மனம் குழம்பியது. ''சண்டாளா, உன்காரியம் நிறைவேற இந்தஅளவுக்கா போய்விட்டாய்? உன்னை என்ன செய்தால் என்ன?...''

'அல்லி!'

இடை மறித்தான் இன்ஜசி. ''என்னை என்ன செய்ய வேண்டும் என்பது உன் வசத்தில் இல்லை. விஷயம் அதற்கெல்லாம் மீறிப் போய்விட்டது!''

சொல்லிவிட்டு கீழே கிடந்த சாத்தையனின் பிணத்தைப் பார்த்தான். ''ஒருதடவை உனக்காக கொலை வரைக்கும் போனவன் மறுதடவை அதற்குப் போய் விடக்கூடாது என்ற முடிவுடன்தான் சூழ்ச்சியால் உன் மனசை அருணாசலத்தினிடமிருந்து திருப்பப் பார்த்தேன்!''

'கயவன்!' என்று முணுமுணுத்தாள் அல்லி. 'உன்பக்கம் என் மனசு திரும்பி விடுமென்று நீகனவுகண்டாயோ?...'

ஏளனச் சிரிப்புச் சிரித்தாள் அல்லி.

''திரும்பாது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், நீ அருணாசலத்துக்குக் கிடைக்கக் கூடாது. அது போதும் எனக்கு!...''

அல்லி இன்னாசியைப் உறுத்துப் பார்த்தாள்.

''அருணாசலம் உனக்கு அப்படி என்னசெய்து விட்டான், இந்தப் பழி வாங்குவதற்கு என்று கேட்க வருகிறாயா அல்லி? அந்தத் தகவல் உனக்குத்தெரிய வேண்டாம். அருணாசலத்தை எப்படித் தெரியும் என்று நீ வேண்டு மானால் பிற்பாடு அருணாசலத்தையே கேட்டுத் தெரிந்து கொள்!...''

அல்லி திகைத்தாள்.

அருணாசலமும் சாத்தையனும் நண்பர்கள், அருணாசலமும் இன்னாசியும் இப்போது ஒருவருக்கொருவர் அறிமுகமான வர்கள். இன்னாசியும் சாத்தையனும் ஒரு ஊர்க்காரர்கள். அது அவளுக்குத் தெரியும். 'இதென்ன நச்சுவட்டம்! இதற்குள் அகப்பட்டுக்கொண்டு நான் படுகிற அவஸ்தை!' எதுவும் புரியாமல் தவித்தாள். தான் என்ன, 'பதினைந் தாம்புலி, ஆடுகளில் ஒன்று, இவர்கள் விருப்பப்படி இரை யாவதற்கு?' அருணாசலத்தின் முன் வாழ்க்கை அவளுக்கு விவரம் தெரியாத, விளங்காத, சிக்கலான ஒரு புதிர் ஏடாகப்பட்டது. அவள் சிந்தனையோட்டத்தை தடுக்கிற வகையில் இன்னாசி தொடர்ந்தான்.

''அல்லி, பேச்சை வளர்த்துக்கொண்டிருப்பதில் பிரயோ சனம் இல்லை. சுருக்க முடித்துவிடுகிறேன். நீ இந்த இடத்திலிருந்து போய்விட வேண்டும். நீ சுகமாக இருக்க வேண்டுமானால், இந்த இடத்தை நீ ஆராய விரும்பாதே. உனக்கு இந்த இடம் தெளிவு படாது. உன் கற்பனைக்கும் அப்பாற்பட்ட இடம் இது. 'சாத்தையன், நான், அ...''–

உதட்டைப் பல்லால் கடித்துக் கொண்டு மீதியை உச்சரிக்காமல் அடக்கிக்கொண்டு மேலே தொடர்ந்தான். ஆனால் அந்த 'அ' சப்தத்தை அல்லி கவனிக்காமல் இல்லை.

''அல்லி, எங்களில் அருணாசலம் அதிர்ஷ்டக்காரன்; நீ அவனுக்குத்தான். உங்கள் உறவுக்குத் தடையாக இருந்த...'' என்று சொல்லி நிறுத்தி சாத்தையனின் பிணத்தைப் பார்த்தான். பிறகு ஒரு பெருமூச்சுடன் ''நானும் உங்கள் வாழ்க்கையில் குறுக்கிடமாட்டேன். சரி, என் உதவி உனக்கு வேண்டுமானால், நீ என்னை நம்புவதானால், நானே உன்னைக் கொண்டுபோய் விடுகிறேன்!...''

அல்லியின் பார்வையில்-முகச் சுளிப்பில் அவ நம்பிக்கை!

''அல்லி உன் அவநம்பிக்கை எனக்குப் புரிகிறது. நான் உனக்குப் பழைய இன்னாசியாகத்தான் படுகிறேன், உண்மை. என்னிடம் வந்த மாறுதலை நீ அறிந்துகொள்வதற்கான சூழ்நிலையில் அல்லது நான் மேற்கொண்டு உனக்கு நிரூபிக்கத்தக்க நிலையில் இப்பொழுது நான் இல்லைதான். எனக்குள் மாறுதல்ஏற்பட்டகாரணத்தையும் சமயத்தையும் மட்டும் உனக்குச் சொல்லிவிட்டால் எனக்குப்போதும். பொய்க் கடிதத்தை எழுதிவிட்டு அதன் விளைவைத் தெரிந்து கொள்ள உன் வீட்டு வாசலில் மறைந்து நின்றபோது நீகாணாமற் போய்விட்டதுபற்றிய பரபரப்பைக் கண்டேன். போலீஸுடன் ராஜநாயகமும் அருணாசலமும் பேசிக்கொண்டிருந்ததில் சாத்தையன் பெயர் அடிபட்டது. பாம்பின் கால் பாம்பறியும். அதற்கு மேல் அவனும் நீயும் இந்த இடத்தில் இருப்பதைக் கண்டுபிடிக்க எனக்கு அதிக நேரம் ஆகவில்லை.''

சீ, கொலைபாதகக் கும்பல்!' என்று முணுமுணுத்தாள்

அல்லி. 'சாத்தையன் நமக்கு முந்திக்கொண்டுவிட்டான் என்று ஓடிவந்தாய்!'

''அல்லி, நான் இப்போது கொலைபாதகன்தான். சாத்தையன் பொறிதட்டி விழச் செய்யும் அளவுக்குத் தான் பலத்தை உபயோகிக்க விரும்பினேன். வயிற்றில் முன்பு பாய்ந்த வேல் கம்புக்குத்து ஞாபகத்துக்கு வந்தது. என் நிதானத்தை இழந்துவிட்ட நிலையில் பலத்து விழுந்திருக்கிறது. சாத்தையன் முந்திக்கொண்டான் என்றஆத்திரத்தில் அல்ல—நீ நினைப்பது போல அல்லி!—அருணாசலம் கொஞ்சம் முன்னாடி உன்னால் திருந்திவிட்டான். இப்போது தான் நான் தெளிந்தேன்!...''

அல்லிக்கு பளிச்சென்று ராஜநாயகம் வார்த்தைகள் ஞாபகம் வந்தன. 'நீ சாமான்யப் பெண் இல்லே. என்னைத் திருத்தினே. அருணாசலம் பயலை மயக்கித் திருத்தினே. இப்படி எத்தனை பேரை உன் அழகாலே ஆட்டிவச்சு மதியாலே திருத்த நீ பிறந்திருக்கியோ?' இதென்ன, தனக்கு அத்தகைய சக்தியா இருக்கிறது?- முதலில் ஆட்டிவைக்கவும் பிறகு திருத்தவும். கீழே கிடந்த சாத்தையனின் பிணத்தைப் பார்த்தபின் இன்னாசியைப்பார்த்தாள். இன்னாசியின் முகத்தில் கண்ட அமைதி அந்த பிணத்தின் அமைதியின் பிரதிபலிப்பா? இல்லை. இதுவரையுள்ள நாட்களின் நினைவே மாறி, மீண்டும் ஒரு பிள்ளையார்சுழி போட்டுத்தான் ஆரம்பிப்பதற்காக ஒரு புனர் வாழ்வின் ஆரம்பத்திற்கான அறிகுறியா? அவளால் நிதானிக்க முடியவில்லை. இன்னாசி ஒரு மிருகமாக இப்போது இல்லை என்பதை மட்டும் அவள் கண்டறிந்தாள்.

அல்லி.' என்று உறுதியான குரலில் கூப்பிட்டான் இன்னாசி. ''நீ புறப்பட்டுப்போய் அதோ நேரே படி இறங்கி இடது பக்கம் திரும்பிப் போனாயானால், வாசலுக்கு நேரான வழி தெரியும். போய்விடு. போய்விடு!'' அவன் குரல் விரட்டலாக வந்தது.

'நீ' என்று இரண்டுளட்டுகள் கதவை நோக்கி வைத்துக் கொண்டே கேட்டாள் அல்லி. அவள் குரலில் ஒருகனிவு தொனித்தது. முதன் முறையாக இப்போதுதான் அவனை ஒரு மனிதனைக்கருதி அதற்குத்தக்கவாறு பேச வாயெடுத்தாள் அல்லி.

இன்னசி சிரித்தான்: ''கொலை செய்யும் உத்தேசம் இல்லாமலே கொலை பாதகனை ஆகிவிட்டேன்!'' அந்தப் பிணத்தின் பக்கம்திரும்பினன். ''இந்தப்பிணத்துக்கு ஒரு வழி செய்தாக வேண்டும்!''

''எந்தப்பிணத்துக்கடா வழிசெய்யப் போகிருய்?''

அவனுக்கு முன்னல், குரல் அதிகாரத்துடன் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினன் இன்னசி. அதே சமயம், தன் கைகள் பிடித்துக் கொள்ளப்படுவதை உணர்ந்தான் இன்னசி. எதிரே நின்றவருக்குப் பின்னலிருந்து முன் வந்த ஆளைக்கண்டதும் திடுக்கிட்டு விட்டான்.

''இன்னசி, நீயா?'' என்று கூவிவிட்டான் அருணசலம்.

# என் நம்பிக்கைக்கு உயிர்

மலை உச்சியை நோக்கிச் செல்லுகையில் ஏற ஏறத் தான் கையில் இருக்கும் சுமையின்- கனத்தை உண்மையான கனத்தை நன்கு உணர்கிறோம். கதை முடிவு என்ற உச்சி சமீபிக்கிறது. எனது பாரத்தின் பளுவும் அதிகமாகியிருக்கிறது. திரு. வாசவன் முதல் திரு. செல்லப்பா வரை நெய் விளக்கைப் பிரகாசமாக்கிவிட்டார்கள். பூவை என்னைவிளக் கருகே நிறுத்திவிடத் தைரியமாகத் தீர்மானித்தார். அந்தத்தைரியமே என் நம்பிக்கைக்கு உயிராக விளங்குகிறது.

இத்தனை நாட்கள் நரகப்படுகளத்திலும் வெறி பிடித்த கொலைக் களத்திலும் அவதிப்பட்ட அல்லிக்கு எப்போதுதான் மன நிம்மதி கிடைக்கும்?

இப்போது கிடைக்க வழிவகுத்து விட்டேன் நான். எப்படி?

அதை 'பூவை' அடுத்தாற்போல் சொல்லுவார்!

பி. வி. ஆர்.

பொறி பத்து :

# சிநேகிதி செந்தாமரை

மாங்குடியில் வயலில் இரு நாய்கள் ஒன்றையொன்று கடித்துக்கொண்டு பாய்ந்தது அல்லியின் மனத்தில் பதிந்த சம்பவம். அதனுடைய தொடராக—அத்துடன் இணைத்துவிட்ட, அல்லது தாமாகவே இணைந்து கொண்ட சம்பவம் அவள் கண் முன்னேயே நடந்து விட்டது. இத்தனை நாள் கண்டறியாத வெறியையும் உயிர்த் துடிப்பையும் கண்டபோது, அவளுக்கு வாழ் வில் எது நிஜம் எது பொய் என்பதைக் கூடநிர்ணயிக்க முடியவில்லை. பிணத்தை நடுவே வைத்துக் கொண்டு அவளும் இன்னுசியும் என்னென்னவோ பேசினார்கள். ஒருவரை ஒருவர் கூர்ந்து பார்த்தனர். அப்போது அவள் பேசின வார்த்தைகளின் அர்த்தத்தைக்கூட அல்லியால் இப்போது அறியமுடியவில்லை. என்னதான் உயிர் போனாலும் போகட்டும் என்று, 'வேறு கதியில்லையே?' என்ற நிலையால் ஏற்பட்ட மனநிலையில் வெறுப்புடன் உணர்ச்சி மேலெழுந்து நின்றாலும், உயிரின் துடிப்பு ஒன்று அவளுள் தவித்துத் துடிக்கத்தான் துடித்தது. அவளுடைய உயிர் அவளுக்குக் கூட சொந்தமில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவது போல, அவளுடைய உயிரே அவளுள் இருந்து அவளை விட்டுப் பிரிய மறுத்தது.

''எந்தப் பிணத்துக்கடா வழி செய்யப் போகிருய்?''

கேள்வியில் தோய்ந்த உறுமல், பிணத்தைக் கூட அசைத்ததோ, என்னவோ? நிமிர்ந்து பார்த்த அல்லி யால் தன் கண்களை நம்பவே முடியவில்லை.

ராஜநாயகம் நின்று கொண்டிருந்தார். 'நல்ல வேளை போலீசு இல்லே' என்ற நிம்மதி இன்ஞசி முகத்தில் ஒருகணம் பிரதிபலித்தாலும், அருணுசலம் கேட்ட கேள்வி அவனைத் தூக்கி வாரிப் போட்டது.

தன்னை சமாளித்துக்கொண்டு பேச அவனுக்கு ஒரு நிமிடமாயிற்று. அந்த ஒரு நிமிஷத்தில் அறையே ஒரு அந்தர பலத்தில் தொங்குவதாகப் பிரமை.

''ஆமாம், அருணுசலம். நானேதான்!........... இன்ஞசியேதான்! நீயே என்னை போலீஸில் கொண்டு போய் காட்டிக்கொடேன்!...''

இன்ஞசிக்குக் கொலை புதியதல்ல என்பதை அவன் குரலே உணர்த்தியது.

''அவன் எதற்கு? நான் வருகிறேன். வா,'' ராஜ நாயகம் தன் முன் கிடந்த பிணத்தைக் கண்டு ஒருகணம் பதைத்தாலும் பழைய தைரியம் மீண்டு விட்டது. ஆனுல் இன்னும் பிணத்தின் சொந்தக்காரர் யார் என்று தான் தெரியவில்லை.

''நீங்களா? தேவையில்லை. எங்கள் மூவரில் ஒருவனை நான் தீர்த்துவிட்டேன். அவன் என்னையும் தீர்க்கப் போகிருன்; எஞ்சி நிற்பது யார்? அவன்! அவன் மட்டும ஏன் இந்த உலகில் நல்லவர்களைப்போல் நடித்து வாழ வேண்டும்?''

அல்லியும் ராஜநாயகமும் வாய் அடைத்து நின்ருர்கள்.

அருணாசலம் திறந்த கதவுகளை ஓரக்கண்ணால் பார்த்த வாறு இருந்தான்.

""என்ன அருணாசலம், ஓடப் பார்க்கிறாயா? காரியம் மிஞ்சிவிட்டது?''

"'நீ என்ன சொல்கிறாய், இஞ்ஞாசி?''

அல்லி பதை பதைத்தாள்.

அருணாசலம் இவர்களுடைய நண்பன் என்று தெரியும். ஆனால் பழங்கணக்கு ஒன்றை இஞ்ஞாசி வீசுகிறானே? இல்லை, அதுவும் 'சுகுணா' போன்ற கதைதானா? அப்படி யானால் அருணாசலம் ஏன் இப்படி வாயடைத்து ஓடத் தயாராக இருக்கிறவனைப் போல நிற்க வேண்டும்?

அவளுடைய எண்ணச் சங்கிலி திடீரென அறுந்தது.

அவள் கண் முன் நின்ற அருணாசலம் மின்னலாகப் பாய்ந்து வெளியே ஓட, பின்னால் இஞ்ஞாசி விரைந்து தொடர்ந்தான்.

ராஜநாயகமும் ஓடினார்...!

அவர்கள் எந்த 'டாக்ஸி'யில் வந்து இறங்கினார்களோ, அதில் அருணாசலமும் ஏறியது அவர் கண்ணுக்குத் தெரிந்தது. காரியம் எல்லோர் கையையும் விட்டு அகன்ற தாகவே எண்ணினார்.

அவர் மீண்டும் அறைக்குள் நுழைந்தபோது, அல்லி அழுதுகொண்டிருந்தாள். உண்மை புரிந்த போது உணர்ச்சிக்கட்டு தானே அவிழ்ந்து கொண்டது. மனக் கோயிலில் அவளே ஆவாகனம் பண்ணி வைத்த உருவம் கண்முன் இப்படியா சரிய வேண்டும்?

மறுநாளே இன்னாசியும் அருணாசலமும் பிடிபட்டார்கள் ஒருவன் மீது கொலைக் குற்றம் ஒன்று. இன்னொருவன் மீது இரண்டு. போட்ட பழைய கணக்கை இப்போது எதிர்பாராத விதத்தில் அருணாசலம் ஒப்பிக்கும்படி யாயிற்று.

ராஜநாயகம் வீட்டில் ஆடல் இல்லை; பாடல் இல்லை. குட்டையருகே வானத்தைப் பார்த்துப் பாடும் தவளை போன்ற நாச்சியாரம்மாவின் பொக்கை வாய் மௌன மாகப் புகையிலையை மென்று கொண்டிருந்தது. பட முதலாளி பலராமனும் இன்னும் இரண்டு மூன்று நாட்டியச் சங்கக் காரியதரிசிகளும் அல்லி இல்லை என்று செய்தி கேட்டுத் திரும்பிப் போனார்கள்.

ராஜநாயகம் மற்றவர்களை ஆட வைப்பார். ஆனால் இப் போது அவரே ஆடலானார். அவர் ஆட்டம் அவருக்கே பயமாக இருந்தது.

ஆனால் பயத்தையும் மீறிய நிலையில் அல்லி இரண்டு நாட்களாக படுக்கையோடுபடுக்கையாகஒட்டித்துவண்டு கிடந்தாள். சமையற்காரம்மாள் கெஞ்சியும் கூத்தாடியும் அவளைச் சாப்பிடச் செய்யும்படியாக நேர்ந்தது.

மூன்றும் நாள்.

இரண்டு இரவுகளாக அவள் கண்முன் சாத்தையாவின் பிணமும், இன்னாசி கையில் பிடித்த இரும்புக் கம்பியும், திடீரெனப் பாய்ந்து வெளியேறிய அருணாசலமும் வட்ட மிட்டார்கள்.

மூன்றும் நாள் காலையில் மயக்கம் தெளிந்தது. அவள் யாரை விட்டு ஓடிப்பட்டணம் செல்ல வேண்டும் என்று ஓடி வந்தாளோ, அவர்கள் அவர்களுக்கென வகுக்கப் பட்ட பாதையில் சென்று விட்டார்கள். அந்தப்பாதையை அவள்அறியாமல் அவளேவகுத்துவிட்டாள். அவளுடைய

'மொந்தைக்கள்' அழகு விதியின் இரும்புக் கம்பியாக நீண்டது. அவள் சமயத்தில் ரெயிலில் செய்த உபகாரம் அவளுடைய காதல் பிரமையை எழுப்பிய உருவத்தைக் கடைசியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. இவர் களுடைய முடிவுகளுக்கெல்லாம்தான் அவள்பிறந்தாளா? வளர்ந்தாளா? அவளுடைய அழகுக் காரணம் அரக்கர் களுடைய அழிவுக்குத் தானு?

இப்படியே அவள் இன்னும் எத்தனை பேரை அழிக்க வேண்டும்? விதிஎப்படியெல்லாம் இரும்புக் கம்பியை நீட்டியும் வளைத்தும் தீட்டியும் வைத்திருக்கிறதோ?

ஒருவேளை அவள் கிராமத்தைவிட்டு ஓடிவந்ததேபிசகோ? பிறந்த மண்ணை உதறினுல் இத்தகைய சாபக்கேடுகள் வருமோ? மாங்குடியின் கட்டுக் கோப்பான வாழ்க்கை யையும், மரகதக் கம்பளமாக விரிந்திருக்கும் நெல் வயல்களையும் விட்டு எப்படி அன்று ஓடிவந்தாள்? உண் மையில் அன்றுபயந்தாளா? அல்லது, பயம் எனும்மாயை சூழ்ந்து கொண்டதா? சமூகத்தின் நயவஞ்சகர்களைக் கண்டு அஞ்சாத அவள் சமூகத்தின் பார்க்காத நாக்கு களிலிருந்து ஒலிக்கும் கேட்காத ஒலிச்சிதர்களைக் கேட்டு ஏன் அப்படி அஞ்சினுள்? பெண்மையோடு பிறந்த மானம்தானே அதற்குக்காரணம்? அந்த மானத்தைக் காத்துக்கொள்ள, ஓடிச்செல்லுவது தானு காரணம்?

தகப்பன் வைத்து விட்டுப்போன இரண்டு ஏக்கரா நிலமும் வீடும் கண்முன் நின்றன. அவள் உழைத்துப் பிழைக்கப் பிறந்த மண்ணில் வழி இருக்கையில், மழைக்கும் வெய்யி லுக்கும் மானத்துக்கும் ஒதுங்கிவாழ வீடு இருக்கையில், ஊரார் பேச்சுக்குத் தன் காதைச் செவிடாக்கிக் கொண்டு வாழமாட்டாமல் அவள் இருந்தால் அவள் எதனேடு சேர்த்தி? காலம் என்னும் குப்பைகொட்டக் கொட்ட,

அந்தக் குப்பையில் சமூக நண்டுகளின்—புழுக்களின் பேச்சு மறைந்துதானே ஆகவேண்டும்?

பட்டணம் நெருப்பில் வீழ்ந்த அவள் வெளியேறுகையில் புடமிட்ட தங்கமாகத்தான் மாறினாள்.

மாங்குடி அவளை அழைத்தது. கலயமும் கஞ்சியுமாக ஒரு நாள் தாயார் நின்ற காட்சி கண்முன் நிழலாடியது. 'என் பிணத்தைக்கண்டு அன்று சிரித்தாயே அல்லி, இன்று உன்னைக்கண்டு சமூகம் சிரிக்கும்படி விடலாமா?' என்று அவள் நினைவில் அடங்காத தகப்பனார் கேட்பது போலத் தோன்றியது. 'அல்லி ஓடி விட்டாள்!' என்று மாங்குடி ஓலமிட்டால், அந்த ஓலம் அவளுடைய தாய் தகப்பன் இருவருடைய ஆவிகளுக்குக் கூடக் கேட்குமே?

அவள் திரும்பவேண்டும்; மாங்குடிதான் இனிமேல் அவளுக்குத் தாயும் தந்தையும்—நிலம் தான் குழந்தை—வீடுதான் கணவன்.

சமையற்காரியம்மாள் அழைக்க வராமலே அல்லிபோய்ச் சாப்பிட்டாள். இது ராஜநாயகத்துக்குக் கூட வியப்பைத் தந்தது.

''அல்லி...!''

அவருடைய அன்புக் குரலில் ஒரு நெகிழ்ச்சி.

''இதோ...!''

''நான் ஒன்று தீர்மானித்திருக்கிறேன்!''

''என்ன?''

''நாம் இரண்டு பேருமாக, சென்னையை விட்டு நாலு இடங்களுக்குப் பிரயாணம் செய்யலாம் என்று...!''

''நானும் தீர்மானித்து விட்டேன், பட்டணத்தை விட்டு ஓடி விடலாம் என்று!''

''எங்கே...?''

'எங்கிருந்து வந்தேனே அங்கே! பிறந்த மண் என்னை 'வா' என்கிறது!''

''என்னை விட்டுப் போகப்போகிருயா?''

''ஆமாம்...வேறு வழியில்லை...நான் அபலையாக இங்கு வந்தேன். நீங்கள் ஆதரித்தீர்கள். இப்போது உங்கள் ஆசியுடன் நான் திரும்புகிறேன்; வீடும் வாசலும் இருக்கிறது. அன்ருடத் தேவைக்குக் கஷ்டமில்லை.''

''நீ சினிமாவிலும் நாட்டியத்திலும் சம்பாதித்த பணம்...!''

''அது உங்களுக்கு!... எப்படி வேண்டுமானுலும் செலவு செய்யுங்கள். இப்போது வேண்டியது ரெயில் சிலவுக்கு ஏழு ரூபாய்...!''

அவளது குரலில் வைரம் ஏறியிருந்தது.

''நான் வருகிறேன் . !''

''வேண்டாம். இனி என் வழி தனி வழி. உங்களுடைய உதவிக்கு என்னுல் கைம்மாறு செய்ய முடியாதது பற்றித்தான் எனக்கு வருத்தம். இன்று சாயங்காலம் நான் ரெயில் ஏறுகிறேன். நீங்கள் உங்கள் பெண்ணை வழி அனுப்புவதுபோல அனுப்பவேண்டும்.''

''உன் கதை. அப்பப்பா!'' ராஜநாயகம் பெருமூச்செறிந்தார்.

''என் கதையின் ஒரு அத்தியாயம் முடிந்து விட்டது.

இனிமேல்தான் இது நிதானமாகச் செல்லும். பிரளயத்திற்குப் பின் உண்டாகும் அமைதி...!''

அவள் மனத்தை மாற்ற முடியாது என்று ராஜநாயகம் உணர்ந்துவிட்டார். மனத்தில் பிடிவாதம் வஜ்ரமாக ஏறிவிட்டால் என்ன செய்வது?

வரும்போது எப்படி ஒரு பையுடன் வந்தாளோ, அப்படித்தான் அவள் அன்று ரெயிலடிக்கு வந்தாள். ரெயிலடியில்—

''அல்லி!'' என்ற குரல். அடிநாளிலிருந்து பழக்கப்பட்ட சிநேகிதி செந்தாமரையின் குரல்—கேட்டது.

அவள் திடுக்கிட்டு நின்றாள்.

# அல்லியை அறிந்தவன் நான்

முன்னம் ஒரு நாள் ஐவர் சந்திப்பின் மூலம் சிறு தொடரொன்றை ஆரம்பித்து வைத்தேன். பெயர்; 'ஆலவாய் அழகி'. இலக்கிய ஆர்வம் கொண்டவர்கள் மனம் திறந்து பாராட்டினார்கள். அவர்களது நல்லமனம் தந்த துணிச்சலின் துணையுடன்தான் 'ஆடும் தீபம்' ஒளி காட்டத் தொடங்கியது. ஏறத்தாழ ஓராண்டுக் காலம் அல்லியின் அன்புடன், அழகுடன், துணிவுடன் பழகும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாய்ப்புக்கு அடிகோலியவர்கள் எழுத்துலகில் தேர்ந்த அனுபவம் பெற்றவர்கள்; அனைவருக்கும் அல்லியின் அன்பும், நன்றியும், வணக்கமும் உண்டு.

புதிரின் உட்பொருள்தான் வாழ்க்கையின் மகிமை போலும்! இந்நிலைக்கும் நினைவுக்கும் நேரிடைச் சாட்சியமாக அமைகிறாள் அல்லி. அழகுக்கும் தீபத்துக்கும் இறுகியபிணைப்பு உண்டு. பாசமும் பந்தமும் இவ்விணைப்பின் வழியேதான் உருவாகும்; வல்லமை பெறும். அல்லியைப் பொறுத்தவரை அவளது அழகு தீபம் ஆனது; கற்பு நெறியும் தீபமாக மாறியது; தீபம் அவளைமுழுமையாகக் காத்தது; அவள் தீபத்தைப் பாதுகாத்தாள். அத்தகு சூழலின் விட்ட குறை-தொட்ட குறையின் காரணமாகத்தான் அறையிலும் அம்பலத்திலும் ஆடினாள்; கனவுகளுக்கு மத்தியில் வாழ்ந்தாள்; வளர்ந்தாள்;

ஆடாத தீபமாக-ஆனால் ஆடும் தீபத்தின் உள்ளப் போக்குடன் அல்லி நின்றாள். எழும்பூர்ச் சந்திப்பு நிலையத்தில் கண்ட அவளை மீண்டும் கனவு களின் மடியில் தவழ்ந்து விளையாடி அமைதி பெறச் செய்திருக்கின்றேன். அவளது நெஞ் சுரமும் நேர்மைத்திறமும் அவளுடைய கனவு களை வாழவைக்கும் என்ற தன்னம்பிக்கை கொண் டவன் நான். ஏனென்றால், நான் அல்லியின் இத யத்தை, நினைவை, குறிக்கோளை, கனவைப் பூரண மாகப் படித்து அறிந்தவன் அல்லவா?

பூவை எஸ். ஆறுமுகம்

பொறி பதினொன்று:

## வாழ்க கனவு!....
## நனவு வாழ்க!

உயிர்த்திரட்சியின் அணுக்களில் ஏற்பட்ட குலை நடுக்கம் இன்னமும் அடங்கவில்லை. உந்திக்கமலம் வெளியேற்றிய நீள்மூச்சு விழி இணையில் சுடுநீரானது. நெஞ்சம் விம்மியது; மனச்சான்று கண்ணீர் வடித்தது. நினைவுகள் ஆற்றாமையினால் தத்தளித்தன. கனவுகள் மேற்படி நினைவுகளின் காலடியில் தஞ்சம் அடைந்து கதறிக்கொண்டிருந்தன. ஆனால், அவள் மட்டும் அழவில்லை! ஆம்! அல்லி அழவே இல்லை!

அவளுக்குப் பதிலாகத்தான் செந்தாமரை அழுதாளா? அவள் ஏன் அழுதாள்? அவள் எதற்காக அழ வேண்டும்? கண்ணீருக்கு நட்பு உண்டுதானே? கண்ணீரில் பாசம் உள்ளடங்கிக் கிடப்பதென்பதும் மெய்தானே?

''செந்தாமரை!'' என்று அழைத்தாள் அல்லி. தோழி தோழியைத் தொட்டுத் தட்டிக் கூப்பிட்டாள். இமைகளின் கதவுகளை மூடாமல், மூடமனமின்றி, மூடவழியின்றி நின்றாள் செந்தாமரை. அவள் பார்வையின் உணர்ச்சிக் குறிப்புக்கள் அத்தனையும் அல்லியையேபடையெடுத்துக் கொண்டிருந்தன; எடை போட்டபடி இருந்தன.

''அல்லி அக்கா!''

செந்தாமரை அழைத்தாள். உதடுகளின் ஒட்டுறவில் பாசம் ஒட்டி உறவாடியது. உயிருக்குத் தோழியாக அந் நாளில் மாங்குடி மண்ணிலே நிலவி வந்த செந்தாமரை இப்போது அல்லிக்குச் சகோதரியானாள்; உடன் பிறவாத் தங்கையானாள்.

அல்லியின் தளிர்க்கரங்கள் மெல்ல உயர்ந்து செந் தாமரையின் கண்களை நாடின; அதே சமயத்தில் செந்தாமரையின் விரல்களும்அல்லியின் விழிக்கரையில் ஊர்ந்தன. சொல்லி வைத்தாற் போன்று இருவர் விரல் களிலும் துயர்நீர் சுட்டது; அந்த வெம்மையில் தண்மை இருந்தது. பாசம் சுடுவது இல்லையல்லவா?

எழும்பூர் ரெயில் சந்திப்புக் கூடம்.

பதினறுமடிப்புக்களாகச்சுருட்டிவைக்கப்பட்டிருந்தபத்து ரூபாய்த்தாளை அல்லி பிரித்தபோது, அவளுக்குச் சிரிக் கத்தான் தோன்றியது. புதுக்கருக்குக் குலையாத நூறு ரூபாய்த்தாள்களுடன் சொந்தங் கொண்டாடிய நாட்கள் அனைத்தும் அவளுக்குச் சொப்பனமாகவே தெரிந்தன. "பணம், லட்சியம், கனவு எல்லாமே வெறுங் கானல் தானு? இன்பத்தை ஆரம்பப் பள்ளியாக்கிக் கொண்டு உருவாகும் இவை அவ்வளவுக்கும் கடைசி முடிவு நிலை துன்பமும் கண்ணீருந்தானு?" என்று அவள் மனம் மறு கினாள். சஞ்சலம்அவளதுமேனியைமருவிற்று. பிரயாணச் சீட்டுப் பெறும் வழிக்குத் தடம் பிரிந்தாள். தடம் மாறிய தருணம், சுவரொட்டி ஒன்று பளிச்சிட்டுத் தெரிந்தது. நோக்கினாள்; கூத்த மதி விழித்தது; அம்பு விழிகள் மருண்டன. வண்ணப் படத்தின் நிலை பாவையை மருளச் செய்தது; சீதையைப் பழிகாரியாக்கிக் காட்டுக்கு அனுப்பி விட்ட கட்டத்தைச் சித்திரம் வழங்கியது. அல்லி நடித்த திரைப்படம் ஆயிற்றே? பழி சுமந்து பாசபந்தம் பறிபோய்ப் பிரியும் கட்டத்தில், சீதையாக உருக்கொண்டு

நடித்த நாளும் பொழுதும் சிக்கல் பிடித்துக் கிடந்த நினைவுக் கயிற்றினின்றும் சிக்கறுத்துக் கொண்டன. உம்மைப் பழவினையின் எண்ணங்கள் தூசிதட்டிக்கொண்டன. பசுமை படிந்த நினைவுகள் கனவுகளாகத் தோன்றின.

அறந்தாங்கியில் கோட்டையில் சரஸ்வதி தியேட்டரில். 'பேசும் படம்' ஓடிக்கொண்டிருந்தது. 'அடி ஆத்தே! படம் பேசுதே?... எம்பிட்டுக் கூத்தாயிருக்கு?' என்று அதிசயப்படத் தொடங்கினாள் அல்லி. பிஞ்சுப் பிராயத்து நிகழ்ச்சி இது. அவளையும் அறியாமல் அவ்வப்போது திரைப்படம் அவளுள் ஓர் இடம் பெற்றிருந்ததென்பதை அவளுடைய இதயத்தின் நுண் அறிவுப் புலன் மட்டுமே அறிந்திருந்தது. அந்த ஆசையின் வடிவமாகவோ, அல்லது எண்ணத்தின் எதிரொலியாகவோ, அவள் பேசும் படத்தில் நடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. நடித்ததைப் பார்க்கையில் அவளுக்குக் கண்ணீர் வந்து விட்டது. அவள் முன் எதிர்காலம் ஒளிப் பிழம்பாகத் தென்பட்டது. அது கடந்த நிகழ்ச்சி; பழங்கணக்கு.

ரெயிலடியின் சுறுசுறுப்புக்கு நேரம் காலம் உண்டு. மாயவரம் வழியாக அறந்தாங்கி செல்லும் 'பாஸஞ்சர்' வண்டியின் புறப்பாடு பற்றிய அறிவிப்புச் சொல்லப் பட்டது. பக்கவாட்டில் பார்வையை விலக்கினாள். கைக் கடிகாரம் திகழ்ந்த இடம் விழித்திவலையை ஏந்தியது. எதிர்காலத்தில் இருள் சூழ்ந்தது. சுவரொட்டி விளம்பரம் அவளுக்குக் கனவாகத் தோற்றம் தந்தது. ''தாயே!'' கண்காணாதவனையும் கண்கண்டவளையும் எண்ணமிடலானாள்; புண்ணான நெஞ்சம் புலம்பியது. அழ விரும்பாத அவள் இப்பொழுது அழுதாள்.

''டோய், அவளைப்பார்டா, சினிமா இஸ்ட்டார்டா... டோய்!''

யாரோ ஒருவன் அல்லியை இனம் கண்டு கொண்டான்...! அவள் தன்னைத்தானே குனிந்துபார்த்த சமயத்தில், அவளுக்குத் தன்னை இனம் காண முடிய வில்லை. மாங்குடியிலிருந்து பட்டணத்துக்கு வந்த பொழுதில் அணிந்திருந்த அதே கொட்டடி ரவிக்கை யையும் கூறை நாட்டுப் புடவையையுமே இப்போதும் அவள் அணிந்திருந்தாள். இடை வேளையில் சுருண்டு கொண்ட-சுருட்டப்பட்ட கேசத்தின் இழைகள் சிதறியும் சிதருமலும் இருந்தன. துறவு நிலையில் அவள் இருந் தாள். கடைசியாக அவள் நடித்து முடித்த துறவுக் கோலம் கருத்தில் நிழலாடியது. ''எல்லாவற்றையுமே நான் துறந்து நிற்கும் ஓர் அபலைப் பெண். பிறந்த மண்ணைப் பிரிந்தேன்; பெற்ற தாயும் தந்தையும் என்னை விட்டுப் பிரிந்தார்கள்; நட்புக்கு ஒருவராய்த் திகழ்ந்த உயிர்த்தோழியைத் துறக்கும் கட்டம் வந்தது; குறுக்கிட்ட காதலைத் துறந்தேன்; வழி மறித்த பாசத்தை யும் இழந்தேன். நான் இப்போது ஓர் அனுதை; போக்கிடம் ஏதும் புலப்பட மறுக்கும் அபாக்யவதி; பெண்ணுய்ப் பிறந்திட மாதவம் செய்திட வேண்டு மென்று பெருமை கண்ட தமிழ் மண் தான் இப்போது என்னையும் உன்னிடம் அடைக்கலம் தேட வழி காட்டி யிருக்கின்றது! தாயே...!'' பொங்குமாங் கடலின் பாதத்தில் நின்று பொங்கும் உள்ளத்துடன் குமுறிக் கதறிக் கண்ணீர் கக்கிய திரைப்படக் காட்சி நினைவில் சொடுக்கப்பட்டது. காலடியில் கிடந்த கிழிசல் கோணிப் பை அவளுக்குச் சுய நினைவை அளித்தது; வழிப் பயணத்துக்குச் சீட்டு வாங்க நினைத்தவள் திரும்பினுள்; வேகமாக நடந்தாள்; பஸ்கள் குறுக்கிட்டன; அவள் அவற்றை ஒரு பொருட்டெனக் கருதினுல்தானே? விரக் திக்குக் 'கண்' இல்லை!

''அக்கா!... அல்லி அக்கா!''

அல்லி பார்வையை நிலே நிறுத்தியபோது, பாய்ந்து வந்த ஒளி வெள்ளத்தில் பரந்து கிடந்த ரத்தத் துளிகளுக்கு ஊடாகக் கிடந்த அவ்வுருவினைக் கண்டாள்.

''தாமரை!...தங்கச்சி தாமரை!'' என்று கூவினாள்.

''என் செந்தாமரைக்கு என்ன ஆச்சு அல்லி...?'' என்று வினவியவாறு பறந்து வந்தான் கண்ணப்பன்—செந்தாமரையின் அத்தான்.

நாடிக்குழலே நாடிப் பாய்ந்தது அந்தப் பத்து ரூபாய் நோட்டு!

அப்போது தான் உடலில் உயிர் ஒட்டிக்கொண்டது போல ஓர் உணர்வு ராஜநாயகத்திற்கு ஏற்பட்டது; கை நழுவிப்போன பொருள் கைசேர்ந்தது மாதிரி அவருக்கு மகிழ்ச்சி பிறந்தது. விலகிப்பிரிந்த பாசம் இளகிப் பரிந்து வந்தது. 'தெய்வமே, தாமரையின் உதவியால் என்னே மீண்டும் அடைந்த என் மகள் அல்லியை என்னிடமே நிரந்தரமாகஇருக்கச் செய்து விடு, அப்பனே!'

சிரிப்பொலியும் கையோசையும் இணைந்து வந்தன.

நடையில் நின்றவாறு உள்ளே பார்த்தார் நடன வாத்தியார். ஜன்னல் கம்பிகளினூடே அவரது கண்ணோட்டம் பிளந்து பாய்ந்தது.

''தாமரை, நான் இனி இங்கே இருக்க விரும்பவில்லே; ஊருக்கும்போக ஒப்பவில்லே. உயிர்மாண்ட சாத்தையன் சிறைப்பட்ட இன்னுசி ஆகியவர்களின் உறவுக்காரர்கள் ஏதாவது தொல்லே கொடுப்பார்கள். சஞ்சலத்தைச் சுமந்து கொண்டுவந்த நான் திரும்பவும் சஞ்சலத்துடனேயே மாங்குடியை மிதிக்க எனக்கு மனம் இடம்தர மாட்டேன் என்கிறது!''

''அப்பாலே உன்னோட முடிவு என்ன?...''

அல்லிக்கு என்ன பதில் சொல்வது, எப்படிப் பதில் கூறுவதென்று புலனாகவில்லை. அருகிருந்தமேஜை மீதுகிடந்த பத்திரிகையைப் புரட்டினாள் அவள். முதற் பக்கத்தில் பேனாவால் கிறுக்கப்பட்டிருந்த 'அருணாசலம்' என்னும் பெயர் அவள் பார்வையில் பட்டது. ஆறு எழுத்துக்கள் அவள் நெஞ்சத் துடிப்பினைத் தொட்டன; மனச்சாட்சி சுட்டது. இதயத்துள் எரிமலை வெடித்தது.

''அல்லி அக்கா''

செந்தாமரையின் மனம் அடித்துக்கொண்டது. அல்லி நல்ல முடிவைத் தெரிவிக்கவேண்டுமே என்று மாங்குடிக் காளியம்மாளைத் தொழுதாள். அன்றொரு நாளில் அல்லியுடன் தொடர்ந்த ஓர் ஆடவனுடன் சிங்கப்பூர் சாத்தையா ஏதோ பேசிக்கொண்டு காரில் சென்றதைக் கண்ட செந்தாமரை, 'பாம்பு கொத்தப் படம் விரித்து விட்டது. விஷம் உடலில் பரவுமுன் போய்த் தடுக்க வேண்டும். மாசற்ற அன்புக்கு இதுவே கைமாறு' என்பதாகத் தீர்மானம் செய்தவளல்லவா இந்தத் தாமரை?

தோழி அல்லியிடம் அவள் முடிவைப்பற்றிக் கேட்டாள். அவள் ஆண்டவனிடம் தன் முடிவின் அந்தரங்கத்தை விசாரித்தாள். அந்தப் பெயரின் ஆறு எழுத்துக்களும் விசுவரூபம் எடுத்தன. தனக்கென இடமின்றி தனக்குரிய இடம் எதுவென்று புரியாமல் தன்னந் தனியளாகப் புறப்பட்டதை மறப்பாளா? 'நீ மொந்தைக் கள்ளு!' என்று பெற்றவள் முடிவுகட்டிச் சொன்ன மொழியை நினைக்காமல் இருப்பாளா? இரட்டைப் புலிகளுக்கிடையே அகப்பட்ட புள்ளி மான் தப்பி மோனத் தவத்திடையே, மனித உணர்ச்சியை இழந்துவிடாத ஈர இதயத்தின் காரணமாகப் போக்கிரி அருணாசலத்துக்குச் செய்த உதவியைத்தான் அவள் எண்ணாமல் இருக்கமுடியுமா?

பட்டணம் வந்த நாட்டுப் புருவைக் கொத்தத் துடித்த வல்லூறு பாசத்தின் உருவமாக மாறி 'தந்தை' ராஜ நாயகமாகத் திகழ்ந்த அந்தப் புனித வேளையை அவள் எவ்விதம் நினைவிலிருந்து துறக்கக்கூடும்?

'அருணசலம்!'

நெருப்புத்துண்டங்களாக ஒளிகக்கிப்பயங்காட்டிய அந்த ஜோடிக்கண்கள் அவள்மனக் கண்ணில்தெரிந்தன. முதற் சந்திப்பு, அந்தச் சந்திப்பில் விளைந்த முதற்காதல், போக் கிரியைத் திருத்திய முதற்பணி, அருணசலத்தின் ஒத் தாசையினுல் திரைப்படக்காட்சியில்ஆடியமுதல்நடனம், 'அல்லிக்கும் எனக்கும் கல்யாணம் வேண்டாம்!' என்று கூறும் அளவுக்குக் காரணமான சுகுண என்பவளின் முதல் அனுமதேயக் கடிதம், சாத்தையா-இன்னசி ஆகிய இருவரின் பயங்கரப் பேயாட்டத்தில் பங்கு கொண்ட அருணசலத்திடமிருந்து உண்டான முதற் பிளவு. அதன் விளைவாக இறுதியில் ஏற்பட்ட முதற்பலி ஆகிய இத்தனை காட்சிகளும் அவள் முன்னே ஏடு புரண்டன; நினைவுகள் நாட்குறிப்புச் செய்திகளாகத் தோன்றின,

'என் அழகால் ஆட்டி வைத்து என் மதியால் திருத்தின தாகப் பெருமைப்பட்ட 'அவர்' இன்று எங்கே?...

நான் விழித்துக் கொண்டு, கடைசியில் அவரும் விழிப்புப் பெறும்நிலை அண்டினதும், சட்டமும்விழித்துக் கொண்டு விட்டதே?...

பூதாகாரமாகத் தோற்றம் அளித்தான் அருணசலம். பலி யான சாத்தையாவுக்காக அல்லி ஒரு சொட்டுக்கண்ணீர் சிந்தினுள். அவளின் 'மொந்தைக்கள்' எழிலில் கிறங்கிப் போதை கொண்டு, தான் ஆடியதுடன், அவளையும் ஆட்டிப்படைத்த இன்னசிக்குக் கிடைத்த முடிவுதான் வாழ்வின் முற்றுப்புள்ளியா?

'மணிமேகலைத்துறவு' என்னும்படத்தின் காட்சியொன்று நினைவைத் தட்டிக் கொடுத்தது. அம்முடிவைத்தொட்டுத் தேட ஓடிய போது குறுக்கிட்டு மறித்த திரும்பு முனை அவளைக்கண்டு சிரித்தது.

''நான் போகப் போகிறேன்!'' என்று வீறு கொண்டு முழங்கினாள் அல்லி.

''எங்கே?'' என்று வினவினாள் செந்தாமரை.

அல்லி மௌனச் சிலையானாள்.

''நீ இங்கேயிருந்து போய்விட்டால், அப்புறம் நானும் என் மூத்த மகள் ராஜவல்லியைத் தேடிக்கொண்டுதான் போக வேண்டும்; இது ஆண்டவன் மீது ஆணை!'' என்று புலம்பினார் ராஜநாயகம். அவர் பச்சைப் பாலகனானார்.

அல்லிக்குச் சொந்தமான பணம் நகை நட்டுக்கள் துணி மணிகளுக்கு மத்தியில் அல்லி வாய் பேசாமல் அமர்ந்திருந்தாள்.

''அப்பா!அப்பா''

தழலிடைப்பட்டுச் சோதனையில் வெற்றி பெற்றுச் சுடர் தெறித்த சொக்கப்பச்சைத் தங்கத்தின் இதயமெனும் எழில் தீபம் ஆடிக் கொண்டிருந்தது. பூஜை அறையின் தூண்டாமணி விளக்கு ஆடாமல் அசையாமல் நின்று நிதானமாகச் சுடர் விட்டுக் கொண்டேயிருந்தது.

தாமரையின் வதுவை மடல் வந்தது. நினைவுகள் மணம் கமழ்ந்தன. கனவுகள் அந்நினைவுகளுக்கு உயிர்ப்புத் தந்தன.

அல்லி சிரித்தாள்; அவளின் சிரிப்பை வான் மதி எடுத்துச் சொன்னது. அவள் இதயத்துக்கு உதாரணம் காட்டியது, ஆடாத அத்தீபம். மாங்குடிப் பெண் அல்லியின் நெஞ்சுத்

தளத்தில் எழிலரசி அல்லி ஆடினுள்; மனம் அதிர ஆடினுள். பட்ட துன்பங்களை எட்டி மிதித்து வெற்றி கொண்ட எக்காளத்தில் ஆடினுள்; கானலாகி, விட்ட கனவுகளை மறந்து ஆடினுள்; முக்காலத்தையும் மோனத்தவத்துள் அடைத்துக் கொண்ட துறவு நிலையில் நின்று ஆடினுள்; 'அப்பா!' என்ற பாசமிகு அழைப்பு ஒன்றுடன் ஆடினுள்; தெய்வத்தின் திருமுருகு தீபமும் ஆடியது!

''அத்தான்!''

அவள் தான் அழைத்தாளா?யாரை அழைத்தாள்?

அல்லி தலை நிமிர்ந்தாள்; பார்த்தாள்; அதிர்ந்தாள்;

அருணுசலம் நின்ருன். விழிப்புனல் வழிந்தோடிக் கொண்டிருந்தது கனவா இது?

தீயோன் இன்ஞசியின் கெட்ட சகவாசத்திஞல் அவன் அடைய வேண்டிய தண்டனையில் அருணுசலமும் பங்கு பெற்ருன். சட்டம் அவன் கைகளுக்கு விலங்கிட்டது. ராஜநாயகம் பணத்தைத் தண்ணீராகச் செலவழித்ததை அல்லி அறிந்திருந்தாளோ, என்னவோ?

''அல்லி, உன்னை ஒருமுறை பார்க்க வேண்டுமென்று இருந்தது. அதிகாரியின் உத்தரவைப் பெற்று வந்திருக்கிறேன். உன் கண்ணீருக்கு மத்தியில் பிரிய நேர்ந்த நான் இப்பொழுது உன் சிரிப்புக்கு ஊடாகப் பிரிய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். என்னை நான் உணர்ந்து கொள்ளக் கற்றுக் கொண்டு விட்டேன், அல்லி. இனி நான் மனிதனுக வாழ்வேன்!''

''நீங்கள் இப்போது ஏன் வந்தீர்கள்?''

''உன்னிடம் ஒரு வரம் பெற்றுப் போகத்தான் நான் வந்தேன். அல்லி!...''

ஆடும் தீபத்தின் ஒளி அருணாசலத்தின் கூப்பிய கைகளிலும், இதழ் மூடிய கண்களிலும், வழிந்தோடிய நீரிலும் நிழலாடியது. அவன் நயனங்களைத் திறந்தான்.

அல்லியின் கையிலிருந்த அம்பிகையின் பூமாலை அருணாசலத்திடம் ஏகியது.

அத்தான், நான் இனிமேல் உங்கள் சொத்து!

அருணாசலம் மணமாலையை அல்லிக்குச் சூட்டினான். வெறுமை சிரித்தது...!

தெறித்து ஓடியிருந்த கண்ணீரில் பாதம் பதித்தது சட்டம்தானா?

''தாயே, நான் இனி ஆடும் தீபம் அல்ல! என் முதற் கனவை வாழவைத்த உன் கருணைக்கு ஈடேது அம்மா...?''

சுபம்

செல்வியின்

புதிய நூல்கள்

பாரதியார் விருந்து
தங்கத் தம்பிகள்
பிறந்தநாள் சோதிடப் பலன்கள்
சிவனடியான்
கவியரங்கக் கவிதைகள்

மறுபதிப்பு

நூல்கள்

கீதாஞ்சலி
தாலாட்டு

செல்வி பதிப்பகம்
புத்தகம் வெளியிடுவோர்—விற்பனையாளர்
காரைக்குடி—623 001